ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை ஒரு அணா.

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | — ரூ. | 3—0 |
| 6-மாத சந்தா ,, | — ,, | 1--12 |
| வெளி நாட்டிற்கு ,, | — ,, | 5—0 |

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரகள் விளம்பரம் அங் 1. க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஸ்ரீமுக-ஹு சித்திரை-மீ 11 உ (23—4—1933) | மலர் 52.


## லெனினும், மதமும்.

இது ரஷியர்களின் மடப்பிந்நிலையும், கடவுளுணர்ச்சியையும் ஒழித்து ஏழை பணக்காரன் என்கின்ற தன்மை அழித்து பொதுவுடமைக் கொள்கையை நிலை நாட்டிய தனிப்பெரும் வீர் தோழர் லெனின் அவர்களால் மதத்தைப் பற்றி எழுதியதாகும். இதைப் படிப்பதால் மதம் பணக்காரர்களுக்கும் முதலாளி அரசாங்கத்திற்கும் எவ்வளவு தூரம் உதவி செய்கின்றது என்பது விளங்கும்.

விலை அணா 0—4—0 சந்தாதாரர்களுக்கு விலை அணா 0—3—0

## இந்தியாவின் குறைபாடுகள்.

இந்து மக்களின் பகுத்தறிவு வளர்ச்சியை பெருக்க என்றே பம்பாய் அரசாங்கக்கல்வி மந்திரியாய் இருந்த Dr. பரான்ஜ்பே M. A. D; Sc., அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா ... ... ... 0—8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா ... 0—6—0

## விசாலாட்சி அல்லது கட்டறுத்த காரிகை.

இது செட்டி நாட்டு வகுப்பில் நடந்த மாதிரியாய் செட்டிமார்கள் பழக்க வழக்கங்களையும் குறிப்பிட்டு எழுதப்பட்டிருக்கிறது.

பிரதி ஒன்றுக்கு விலை அணா 0—4—0
சந்தாதாரர்களுக்கு ... ... 0—3—0

"மோட்டார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சி முறையும்"

பெரிய புத்தகம். விலை ரூ 2. (தபால் சார்ஜ் வேறு.)

## சென்னை லோகல் போர்டு ஆக்டு.

(1930ம் வரு வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)
M. S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது.

விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—5—0

**Ready for Sale!** **Ready for Sale!!**

**The Crux of the Indian Problem**
**By Dr. Paranjpye M. A., D. Sc.**

Price per copy ... ... Rs. 1—0—0
For Subscribers of Kudi Arasu As. 0—8—0

## "கடவுளும், பிரபஞ்சமும்"

கடவுள் ஒருவர் உண்டா என்பதும், கடவுளுக்கும் பிரபஞ்சத்திற்குமுள்ள சம்பந்தா சம்பந்தமும், கடவுளது வேலை என்ன என்பதை சவிஸ்தாரமாக உதாரணங்களுடன் எழுதப்பட்ட ஓர்சிறந்த நூல். அதிக பக்கங்கள், குறைந்த விலை.

பிரதி 1-க்கு விலை அணா 0-4-0.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

# பிரமேக நிவாரணி.

நாட்பட்ட பிரமேகம், தந்திமேகம், வெள்ளை, வெட்டை, நீர்ச்சுருக்கு, எரிச்சல், குத்தல், உடனே நிற்கும். நிச்சயமாய் 3 வேளையில் குணம் தரும். தவறாது. புட்டி ஒன்றுக்கு விலை ரூ. 2—0—0.

**கெர்ப்ப எண்ணெய்.**

இது ஸ்திரீகள் சஞ்சீவி என்னலாம். மாதாந்திர வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பலவீத்தையாகும், கர்ப்பாசயம், இவேப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பமுண்டாகும். புட்டி 1க்கு விலை ரூ. 2. தபால் சார்ஜ் வேறு.

எமது கியாட்லாக்

## இனாம்!

சகல வியாதிகளுக்கும் உயர்ந்த மருந்துகள் இருக்கின்றன. விபரத்திற்கு எழுதுங்கள்.

**ஸ்கலித நிவாரணி.**

பலஹீனத்துவம், உஷ்ணத்துவம், தாகத்துவம், சொப்பனஸ்கலிதம், இந்திரியம் சாருகை வெளிப்படுவதை நிறுத்தி தேகத்திடத்தைத் தரும். புட்டி ஒன்றுக்கு ரூ. 2—0—0.

## மலையப்பசாமி,

வைத்தியசாலை, பழநி. S. I.



உங்கள்.

**கண்ணையும் காதையும் கவனித்துக் கொள்ளுங்கள்**

**பூவிழல்!!**

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

**செவிடு!!**

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.


**"Sri" Works**

Beadon St. Calcutta.



ரூபாய் 3—12—0 க்கு மூன்று உத்திரவாதமுள்ள கடிகாரங்களும் இதர வெகுமதிகளும்.

நமது கடிகாரங்கள் போலியானதென்று நிரூபிப்பவர்களுக்கு ரூபாய் 1000 இனாம்.



ஆட்டோ சுகந்தராஜ் (இஃது பூத்த புஷ்பங்களின் சத்து) உங்களுடைய மனதை ரம்மியமான வாசனையோடு 24 மணி நேரம் வரையில் வசிகரிக்கச் செய்யும் விலை 0-3-0. படை மருந்து 24 மணி நேரத்தில் பரிபூரண குணம் டப்பி 1-க்கு விலை 0-3-0. ஷை 2 தினுசுகள் சேர்ந்தாவது தனித்தனியாவது 24 புட்டிகள் அல்லது டப்பிகள் ரூபாய் 3-12-0 க்கு ஆர்டர் செய்தால் பினேடோடு கூடிய சேப்டி சவரக்கத்தி, சோப், கண்ணாடி, பிரஷ், சீப்பும், பவுண்டன் பேனா, கைகுட்டை, பாக்கெட் விசிறி, சிறந்த டைம்பீஸ், அல்லது ரயில்வே லீவர் பாக்கெட் கெடியாரம் கெமிகல் பவுன் மோதிரம், மணிப்பர்ஸ், பிஸ்டல், பாட்டரி லாம்ப் கூலிங்கிளாஸ் ஒரு ஜதை வெள்ளை கான்வாஸ்பூட்ஸ் அல்லது 30 கலர் பிலிமோடு கட்டிய பயாஸ்கோப் மிஷின். லீவர் கை கெடியாரம், ஒவ்வொரு கடியாரமும் 10-வருடம் உத்தரவாதம். விருப்பமுள்ளவர்களுக்கு காலெண்டர் கேட்டால் இனாமாக அனுப்பப்படும். பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம்

Bharat Union Trading Co.,

Post Box No. 2394, See 20, Calcutta.



# The Rational Books Publishing Society Ltd.

## பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட்.

தலைமை ஆபீஸ்: ஈரோடு.

—:0:—

மூலதனம்: ரூ. 30,000.

பங்கு 1க்கு ரூ. 10 வீதம் கொண்ட 3000 பங்குகளாகப்பிரிக்கப்பட்டிருக்கிறது.

பங்குப்பணங்கள் 4 தடவையாக வசூலிக்கப்படும்

தமிழ்ப்பாஷையின் அபிவிருத்தியையும், மக்கள் முன்னேற்றத்தின் அவசியத்தையும், அறிவு வளர்ச்சியையும் கருதி நிறுவிய இக்கழகம் அறிவியல் நூல்கள் பல எழுதியும் மற்ற பாஷைகளிலுள்ள பகுத்தறிவு நூல்களையும் விஞ்ஞான நூல்களையும் தமிழில் மொழிபெயர்த்தும் வெளியிடுவதுடன் தமிழிலுள்ள அறிவியல் நூல்களை ஏனைய பாஷைகளில் மொழிபெயர்த்து வெளியிட்டும் மூட நம்பிக்கையையும் குருட்டுப் பழக்க வழக்கங்களையும் ஒழித்து எங்கும் பகுத்தறிவு ஜோதியைத் தோன்றச்செய்ய உழைக்கும்.

பகுத்தறிவு இயக்க அபிமானிகள் தங்களாலியன்ற பங்கெடுத்து இக்கழகத்தை ஆதரிக்க முன் வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அப்ளிகேஷனுடன் பங்கு ஒன்றுக்குள்ள ரூ. 10ல் ரூ. $2\frac{1}{2}$ வீதம் எடுத்துக்கொண்ட பங்குகளுக்குரிய முதல் வாய்தா பணம் செலுத்தவேண்டும்.

குறிப்பு:— விபரம் அறிய விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதிக்கொள்ளவும்.

அ. இராகவன்,

காரியதரிசி, பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம் லிமிட்டெட்,
43, கச்சேரி வீதி, ஈரோடு.



## தீராத வெட்டை நோய்க்கு உத்திரவாதம்.

11-நாட்களில் குணமாகும். 22 மாத்திரை கொண்ட மருந்து பாட்டில் 1-க்கு ரூ. 5—0—0. (வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்) எவ்வித பத்தியமும் கிடையாது.

விலாசம்:— நா. நமசிவாயம், (நேட்டிவ் டாக்டர்)

தெக்ஷிணாமூர்த்தி தமிழ் வைத்தியசாலை,
திருக்கோஷ்டியூர், (ராமனாதபுரம் ஜில்லா)

## தோழர் H. G. 'லஸ்கி' எழுதிய

# போல்ஷ்விஸம் அல்லது பொதுவுடமை.

ருஷ்யாவிலே ஜார் சக்கிரவர்த்தியின் ஆட்சியைக்கவிழ்த்து ஏழை பணக்காரர் என்ற வித்தியாசத்தை ஒழித்து எல்லா மக்களும் சரிசமமான சொத்துரிமை, சுகம் முதலியவற்றைப் பெறுவதற்கு 1917-ம் வருடம் ஒரு பெரும் புரட்சி நடந்தது. அப்புரட்சிக்குத் தலைவராய் இருந்து நடத்தியவர் "நிக்கோலாய் லெனின் என்பவர் அவர் கட்சிக்குப்பெயர் "போல்ஷ்விக்" கட்சி, அவருடையகொள்கை "பொதுவுடைமை" என்ற "போல்ஷ்விஸம்" 1902-ம் வருடம் அவருடைய கட்சியில் ஒரு பிளவு ஏற்பட்டது. அதில் "மெஜாரிட்டி" கட்சியான லெனின் கூட்டத்தார் போல்ஷ்விக்காரர்கள் என்றும், மைனாரிட்டி கட்சியாக்கான "மார்டோவ்" கட்சியார் மென்ஷ்விக்கர்கள் என்றும் (மென்ஷ்விக்கர்கள் என்றால் மைனாரிட்டியார் என்பது பொருள்) பிறந்தது.

இந்தப் பொதுஉடைமைக் கொள்கை ருஷியாவில் சுமார் 50-வருடங்களுக்கு முன் அதாவது 1883ல் தோன்றியது. இதற்கு காரணம் "காரல் மார்க்ஸ்" என்ற ஜெர்மன் ஞானியின் புத்தகங்களும், பிரசாரமும்தான் மார்க்ஸ் தமது வாழ்நாள் முழுவதும் ஏழைகளுக்கு நன்மை செய்வதிலும், மனித சமூகத்தை முன்னேற்றுவதிலும், சரித்திரங்களை ஆராய்ந்து புதிய கொள்கைகளை பரப்புவதிலும் தீவிரமாய் உழைத்தவர். புதிய பொதுவுடைமையைப்பரப்புவதில் தொழிலாளர்களும், ஏழைகளும் தகுதியுடையவர்கள். நிலம், பெரிய தொழிற்சாலைகள் முதலிய உற்பத்திக்குக் காரணமான சகல ஸ்தாபனங்களும் முதலாளிகள் என்ற தனிக்கூட்டத்தாரின் கையிலிருந்து பறிக்கப்பட்டுப் பொதுவான ஏழைகளின் சம்மதம் பெற்ற ஒரு அரசாங்கத்தினால் பரிபாலிக்கப்பட்டு அவற்றிலிருந்துகிடைக்கும் லாபத்தைப் பொது ஜனங்களுக்குச் சமமாக பங்கிட்டுக்கொடுக்கவேண்டும். தனிப்பட்ட எவருக்கும் விசேஷ லாபம் கிடைக்க வழியிருக்கக்கூடாது. அரசாங்கத்தின் ஆரம்பமுதல் ஏழைகளுடைய அதிகாரமே நிலைத்திருக்கவேண்டும். இத்தகைய அரசாங்கத்தை ஏற்படுத்துவதற்கு பழய முதலாளிகளுக்கு அனுகூலமான அரசாங்கத்தை அடியோடு அழித்தல் அவசியம். அப்படி அழிப்பதற்குத் தொழிலாளர்களுடைய புரட்சி அல்லது கலகம் இன்றியமையாதது. இதுதான் மார்க்ஸினுடைய சித்தாந்தம். மற்ற நாடுகளிலும் இக்கொள்கை பரவியிருந்தபோதிலும் பலாத்காரமான புரட்சி செய்யவேண்டுமென்பதைப்பலர் ஒப்புக்கொள்ளவில்லை. ருஷ்யாமட்டும் மார்க்ஸ் உபயோகித்த சித்தாந்தம் முழுவதையும்ஏற்றுக்கொண்டுவிட்டது.

ருஷ்யா புரட்சியை 1883-ம் வருடத்திலிருந்து 1903-ம் வருடம்வரை மூன்றுவிதமாக பிரிக்கலாம்.

1. பொதுவுடைமை விதைவிதைத்ததாகும். (பிரசாரம் செய்தது)
2. முளை விடுவதாகும் (ஸ்தாபனங்கள் ஏற்படுத்துவது)
3. 1903-ம் வருடம் போல்ஷ்விக் செடி நன்றாக வளர்ந்து மரமாக ஆரம்பித்துவிட்ட பருவம்.

முதல் பிரிவில் அக்கட்சியில் சேர்ந்திருந்தவர்களுக்கே கொள்கை நன்றாக விளங்கவில்லை. தலைவர்கள் இருந்தார்கள் பின்பற்றுவோர் இல்லை. தொழிலாளர்கள் இக்கட்சியை கவனிக்கவே இல்லை. ஆனால் தலைவர்கள் அடிக்கடி கூடி தங்கள் கொள்கைகளை எடுத்துச்சொல்லி விவாதம் செய்து பொதுவுடைமையின் நுட்பங்களை நன்றாக தெரிந்துகொண்டார்கள்.

இரண்டாவது பிரிவில் கொள்கை உறுதிப்பட்டவுடன் தொழிலாளர்களுடைய அன்பு பெருக ஆரம்பித்தது. கைத்தொழில் பெருகிவந்ததால் அடிக்கடி வேலை நிறுத்தங்கள் நடந்துவந்தன. ஜில்லாதோறும், மாகாணங்கள் தோறும், கிளைச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. பொதுவுடைமையை விளக்கி பல்லாயிரக்கணக்கான பிரசுரங்களும், புத்தகங்களும் வெளியிடப்பட்டன. அவற்றைப்படித்துவிட்டு ஏராளமான ஜனங்களும், மாணவர்களும் அக்கட்சியில் வந்து சேர்ந்துகொண்டார்கள். பெருந்திரளான அங்கத்தினர்களுடைய தொகையை கவனித்தால் ருஷ்யா முழுவதும் வெகு சீக்கிரத்தில் பொதுவுடைமையை ஏற்றுக்கொள்ளுமென்று தோன்றியது,

லெனின் தமது கொள்கைகளைச் சரியாகப் பிரசாரம் செய்ய வேண்டுமானால் ஒரு நல்ல பத்திரிகை அவசியம் என்று கண்டு "இஸ்க்ரா" என்ற பத்திரிகையை நடத்த ஆரம்பித்தார். 1902-ம் வருடம் "நாம் செய்யவேண்டியது என்ன?" என்னும் புத்தகத்தை எழுதி வெளியிட்டார். அதில் அவர் புரட்சிக்காரர்கள் அனைவரும் ஒரே மத்திய ஸ்தாபனம் ஒன்றிற்குக் கட்டுப்பட்டு தனக்குத்தனியான கடமைகளை விதித்துக்கொண்டு பட்டாளத்தில் சிப்பாய்கள் கட்டுப்பட்டிருப்பது போல் மேல் உத்திரவுகளுக்கு கீழ்படிந்து நடக்கவேண்டுமென்றும், சங்கத்தின் காரியங்களை நடத்துவதற்குத் திறமைசாலிகள் அடங்கிய ஒரு தந்திரசபைவேண்டுமென்றும் கூறினர். 1902-ம் வருடம் பொதுவுடைமை காங்கிரஸ் இரண்டாவது முறையாகப் "பிரசல்ஸ்" நகரில் கூடியது. போலீசார் இடையூறு செய்ததால் அது பின்னால் லண்டனுக்கு மாற்றப்பட்டது. இந்த இரண்டாவது காங்கிரசுக்கு 60 பிரதிநிதிகள் வரை சேர்ந்திருந்தனர். புதிய வேலை முறைகள் ஆலோசிக்கப்பட்டன.

பிரதிநிதிகளுள் அபிப்பிராய பேதங்களிருந்தன. சிலர் தொழிலாளர்களுக்கு வேலைக்குறைவும், நல்ல சம்பளமும், ஓய்வும் கிடைத்தால் போதுமென்றும், சர்க்காரைக் கவிழ்க்கவேண்டியது அவசியமில்லையென்றும் கருதினார்கள். யூதர்கள் தங்களுக்கென்று ஒரு தனிச்சபை வைத்துக்கொள்ள உரிமை வேண்டினார்கள். மார்டோவ் என்பவர் உபாத்தியாயர், மாணவர் முதலியோரை அதிகமாகச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று கூறினார். லெனின் கட்சியார் பொதுவுடைமைக் கட்சியை ஏற்றுக்கொண்டு, சர்க்காரைக் கவிழ்க்கப்புரட்சி செய்ய ஒப்புக்கொள்பவர்களை சேர்க்கப்படவேண்டுமென்று வாதாடினார்கள். இதற்குக் காரணம் இதர கட்சியார்கள் இவர்களோடு சேர்ந்துகொண்டு "ஜார்" அரசரைக் கவிழ்த்து விட்டுப்பின்னால் ஒன்றும் செய்யாமல் விலகி விடுவார்கள் என்ற பயமே.

அத்துடன் "இஸ்க்ரா" பத்திரிகை நடத்துவதிலும் தகரா ஏற்பட்டது. லெனின் ஒரு பக்கமும் மார்டோ மற்றொரு பக்கமுமாக வாதாடினார்கள். முடிவில் லெனினுக்கு 25 ஓட்டுகளும் மார்டோவுக்கு 23 ஓட்டுகளும் கிடைத்தன. லெனின் வெற்றியடைந்தார். இதிலிருந்து போல்ஷ்விக், மென்ஷ்விக் (மெஜாரிட்டி, மைனாரிட்டி) என்ற பிளவு ஏற்பட்டது.

மென்ஷ்விக்கர்கள் எல்லா ஜனங்களுக்கும் ஓட்டுக்கிடைக்கும்படி செய்து அதன் மூலம் தேசிய சட்டசபையை அமைக்கவேண்டுமென்று விரும்பினார்கள். அரசர் முதலானவர்களுக்கு மரண தண்டனை விதிக்கக்கூடாதென்றும் கூறினார்கள்.

போல்ஷ்விக்கர்கள் சட்டசபையும், ஓட்டும் பிரதானமில்லையென்றும், புரட்சியே அவசியமென்றும், பின்னால் தொழிலாளர்கள் சார்பாக, ஒரு ஏதேச்சாதிகாரக் கூட்டத்தார், கொஞ்ச காலம் ஆட்சி செய்வது அவசியமென்றும் இதனால் பணக்காரர்களும் மத்திய வகுப்பார்களும் (ஏழையாயும், பணக்காரராயும், இல்லாத சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், வியாபாரிகள் முதலியோர்) உரிமையை இழப்பார்களே என்று கவலைப்படக் கூடாது என்றும், "ஜார்" அரசர் இரண்டாவது நிகோலஸை கொல்லாமல் விடக்கூடாதென்றும் பிடிவாதமாய் எதிர்த்துச் சொன்னார்கள்

மார்டோ ருஷியாவுக்குத் திரும்பி, போல்ஷ்விக்காரர்களுக்கு விரோதமாய் தனிச் சங்கம் ஸ்தாபித்து நடத்தி வந்தார். அச்சமயத்தில் ருஷ்யாவுக்கும், ஜப்பானுக்கும் சண்டை நடந்தது. 1905ம் வருடம் திடீரென்று ருஷ்யாவில் புரட்சி ஆரம்பித்துத் தோல்வியுற்றது. லெனினுடைய கட்சி சிதைவுபட்டு அவர் தனியாய் நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டது. அவருடைய தோழர்களில் சிலர் எதிர் கட்சியில் சேர்ந்துகொண்டார்கள். மற்றும் சிலர் கைது செய்யப்பட்டார்கள். இதன்பிறகு லெனின் விடாமுயற்சியுடன் மீண்டும் ஓர் சங்கம் சேர்த்துக் கிளைச்சபைகள் அமைத்து 'முன்னேற்றம்,' என்ற பத்திரிகை நடத்திவந்தார். அவருடையகூட்டத்தார் ருஷ்யாவிற்கும் மற்றநாடுகளுக்கும் உள்ள நிலைமைகளைக் கவனித்துக்கொண்டு தங்களுக்கு

தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க

# KARL MARX.
# காரல் மார்க்ஸ்.

1818ம் வருடம் ஜெர்மன் தேசத்தில் மிக அறிவுள்ள ஒரு யூத வக்கீலுக்கு காரல் மார்க்ஸ் பிறந்தார். அவருக்கு 6 வயது ஆன பொழுது அவருடைய குடும்பம் பிராட்டஸ்டண்டு மதத்தில் சேர்ந்தது. இதற்குக்காரணம் தன் மகன்மார்க்ஸை ஐரோப்பிய நாகரீகத்தில் சேரவேண்டுமென்றும், அதில் உயர்வடைய வேண்டுமென்றும் ஆழ்ந்த யோசனையின் மேல் செய்தார்கள். காரல் மார்க்ஸ் (Bornt) பார்ன் போனிலும் (Berlin) பர்லினிலும் படித்தார். அங்கே சட்டம், சரித்திரம், வேதாந்த சாஸ்திரங்களிலும் இவர் தேறினர், இன்னும் பல அறிவாளிகளோடு பழகினர். அவர் கலாசாலையில் பிரசங்கியாராகச் சேர எண்ணினர் (Lecturer) அவரது முன்னேறும் நோக்கம் அந்த உத்தியோகத்திற்குப்போக இடங்கொடுக்கவில்லை. அவர்மற்ற எந்த வேலையும் செய்ய அவசியம் இல்லாதிருந்தது, அவர் 25 வயதில் ஆர்க்பால் (Earl) ஏரல் பிரபுவின் குடும்பத்தைச் சேர்ந்த (Jenney Vournvest Phalen) ஜென்னி வான்வெஸ்டு பெலன் என்னும் மாதை மணந்தார்.

1843ம் வருடம் அபேதவாத இயக்கமானது மிக உச்சஸ்தானத்தில் இருக்கும்படியான (Paris) பாரிஸ் நகரத்திற்கு அவர்கள் போவதாகத் தீர்மானித்தார்கள். அவருடைய வாழ்வின் நோக்கத்தையே உருவகப்படுத்திய (Henrey Engels) ஹென்றி எஞ்சல்ஸ் என்பவரை அங்கே சந்தித்தார். அவர்கள் ஒருவருக்கொருவர் இடையே உள்ள கொள்கைகளை நன்றாக விளக்கி அறிந்து கொண்டார்கள். தங்கள் வாழ் நாள் முழுவதும் பிரியாது வாழ்ந்தார்கள்.

மார்க்ஸும், எஞ்சல்ஸும் சேர்ந்து (The Holy family) என்ற பத்திரிகையை நடத்தித் தொழிலாளர்களைத் தூண்டினர்கள். இதனால் பர்சியன் அரசாங்கத்தின் உத்திரவுப்படி பாரிசை விட்டு (Brussels) பிரசல்ஸ்க்கும் போகும்படி ஏற்பட்டது. அங்கே இவரும், எஞ்சலும் தொழிலாளிகளின் அபேதவாதக்கொள்கையைப்பற்றி ஆராய்ச்சி செய்தார்கள. அங்கே அவர்கள் ஒரு பத்திரிகையும் ஆரம்பித்தார்கள். அத்துடன் பொதுவுடமைச் சங்கத்தையும் ஸ்தாபித்துப் புரட்சிக்குத் தயார் செய்தார்கள். 1848ம் வருடம் பாரிசில்ஒருபுரட்சிநடந்தது. அதனால் ஜர்மனி சமுதாய வாழ்வில் முன்னேற்றமடைந்தது. இதில் இவர் 1843ம் வருடம் போட்ட திட்டம் பூர்த்தியாயிற்று. இவர் (Colagne) கோலக்கினி என்ற இடத்திற்குப்போய் தினசரிப் பத்திரிகை ஒன்றை நடத்தினர். அது சமயம் (Prussia) பிரசியா அரசன் தேசிய சபையைக் கலைத்தான். இதை எதிர்ப்பதற்காக வரிகொடுக்கா இயக்கத்தை ஆரம்பித்து ஆயுதம் தாங்கி எதிர்க்கும்படியும் இவருடைய பத்திரிக்கை தூண்டியது. இதற்காக 1849ம் வருடம் இவர் பேரில் குற்றம் சாட்டப்பட்டு ஜூரிகள் முன் விசாரணை நடந்து விடுதலை செய்யப்பட்டார். உடனே பர்சிய அரசாங்கம் இவரை நாடு கடத்தியது. இவர் இதன்காரணமாக பாரிசுக்குப்போனர் ஆனால் அங்கும் இருக்கக்கூடாதென்று அந்த அரசாங்கமும் சொல்ல இவர் கடைசியில் இங்கிலாந்திற்குப் போனர்.

இவர் சகிக்க முடியாத ஏழ்மையாலும், சுகாதாரமில்லாமலும் இருந்தார். அவருடைய பொருளாதார விஷயத்தினல் சகிக்க முடியாதக் குடும்ப கஷ்டங்களும், மற்றுக்கஷ்டங்களும் அனுபவித்தார். எப்பொழுதும் கடனாளியாகவும், கடன்கொடுத்தவர்களுடைய கஷ்டத்திற்கு உட்பட்டும் இருந்தார். இவருடைய வீட்டுச் சாமான்களில் பல எப்பொழுதும் அடவே கிடக்கும். கடன் இவர் உடம்புடன் ஒட்டியவியாதியாகிவிட்டது. 1852-ம் வருடம் (New York Tribune) நியூயார்க் டிரிபியூன் என்ற பத்திரிகைக்கு (Correspondent) நிருபராக இருந்தார். 1862-ம் வருடம் லண்டனில் (International Exhibition) எல்லா தேசத்தினுடைய கண்காட்சி நடந்தது. இதுதான் சமயமென்று மார்க்ஸ் அகில தேசத்திய தொழிலாளர் சங்கத்தை ஸ்தாபித்தார். இதன் நோக்கம் என்னவென்றல் உலகத்திலுள்ள எல்லாத்தொழிலாளர்களும் ஒன்று சேருவதற்கும், அதனுடைய பிரகடனம் (Manifesto) மூலம் முதலாளிகளிடத்தில் தொழிலாளிகள் அடங்கி இருப்பது அடிமையிலும் அடிமை என்றும், சமுதாயத்திற்கு தூக்கம் கொடுக்கக்கூடியதென்றும், ராஜ்ய விஷயத்தில் அடிமையாய் இருக்கும்படி செய்கிறதென்றும், எல்லா தொழிலாளர்களுக்குள் தெரியப்படுத்துவதற்காகத்தான் அது ஆரம்பிக்கப்பட்டது.

இப்படி மார்க்ஸ் செய்த முயற்சியினல் (Trade Unions) வியாபார ஒற்றுமைச்சங்கம் பிரிட்டிஷ் (Trade union movement) வியாபார ஒற்றுமை இயக்கமும், ஜெர்மனியில் தொழிலாளாகளின் யூனியன்களும், இத்தாலியில் (Working mens' Club) தொழிலாளர் கிளப்புகளும் ஏற்பட்டன. இரவும் பகலும் சங்கங்கள் விர்த்தியாவதற்காக மார்க்ஸ் வேலை செய்து வந்தார்.

ஆனல் 1870—1871-ல் பிரான்சில் இந்தச் சங்கங்கள் விஷயமாக நடந்த அடக்குமுறையில் இவருடைய எண்ணம் பலன் கொடுக்காதபடிபோய்விட் டது. அவருடைய பின்வாழ் நாளில் மூலதனம், அரசியல் சிக்கன கண்டனம் (Capital) (A Criticism of Political economy) என்ற புஸ்தகங்கள் எழுதுவதில் கழித்தார். இந்த புஸ்தகங்கள் 1867-ம் வருடம் முதல் முதல் வெளிவந்தது. 1881-ம் வருடம் இவருடைய மனைவி இறந்தாள் 1883-ம் வருடம் இவருடைய அருமைக்குமாரத்தி இறந்தாள். இதுதான் இவருக்கு முடிவுகாலமாக இருந்தது. இவரும் இவரது குமாரத்தி இறந்தமூன்று மாதத்திற்கு பின் இவ்வுலகைவிட்டு நீங்கினர். ஆனல் அவரால் போடப்பட்ட வித்தானது பெரிய மரமாக வளர்ந்து வருகிறது.

---

## தஞ்சை ஜில்லா டிரைவர் அண்டு கண்டக்டர்கள் யூனியன் கூட்டம்.

### திருவாரூர்.

12-4-33ந் தேதி இரவு 9 மணிக்கு ஐந்தூற்று பிள்ளையார் கோவில்தெருவில் இருக்கும் ராமமடத்தில் மேற்படி மீட்டிங் சங்கத்தலைவர் தோழர் பி. எஸ். சிதம்பரம் தலைமையில் கூடியது. அது சமயம் நாகை தோழர் வி. சாமிநாதன், டிரைவர் அண்டு கண்டக்டர்கள் நிலைமையைப் பற்றி ஒரு மகாநாடு கூட்டி, சட்டதிட்டங்கள் வகுக்க வேண்டிய அவசியத்தைப் பற்றியும் பேசினர். பிறகு பல தோழர்கள் யூனியன் சம்மந்தமாக பேசிய பின் இரவு 12 மணிக்கு கூட்டம் முடிந்தது. அடுத்த கூட்டம் 16-4-33ந் தேதி ஞாயிறன்று மன்னார்குடியில் கூடுமென தீர்மானிக்கப் பட்டது. என காரியதரிசி எழுதுகிறார்.

---

## 1917ம் வருஷத்திய ருஷ்யப்புரட்சி.

(சென்ற வாரத் தொடர்ச்சி)

### முடிவுரை.

தற்போது ருஷ்யாவிலே, இல்லாரும் இல்லை. உடையாருமில்லை. மாடமாளிகைகளில் அறுசுவைஉண்டிகளை வயிற்றில் அடைத்துக் கொண்டு இருக்கும் செல்வர்களும் இல்லை. எல்லா ஜனங்களுக்கும் எவ்வளவு அதிகமான நன்மையைச் செய்ய முடியுமோ, அத்தனையும்செய்யவேண்டுமென்றநோக்கத்துடன் சோவியத் அரசாங்கம் எப்படி நிறைவேறுகிறதென்பதை பின்னல் தான் பார்க்கவேண்டும். உலகத்திற்கு ருஷ்யா ஒரு புதுமையாய் விளங்குவதால், அதை நன்கு கவனித்து விருப்பு, வெருப்பின்றி அதன் காரியங்களை ஆராய்ந்து பார்ப்பதே நமது கடமை, உலகத்தார் அனைவருக்கும் அது கடமையாகும். உடனே ருஷ்யாவை பின்பற்றித்தீரவேண்டுமென்றுநாம் யாரையும்வற்புறுத்தவில்லை. ஆனல்நமது வாழ்நாளில் நமது கண்முன்னே அங்கே நடக்கும் காரியங்களைக் கவனியாமல் கண் மூடி மௌனிகளாய் வாழ்வது பெரும் மடைமையாகும். மனித சமூகத்தின் நாகரீக வளர்ச்சியில் ஒரு அரும் பெரும் மாறுதலைக்கொண்டுவர, ருஷ்யா உயிரையும், உதிரத்தையும் வரையாது கொடுத்து அந்த உதிரப்புனல் இன்னும் உலராது செக்கர் வானம் போல், பரவி நிற்கும்போது இழிவான வசைகளைக் கூறி, அது எண்ணிபிராத கூற்றுக்களை, எண்ணியதாகச் சொல்லி விளம்பரப்படுத்தும் நாட்டார், காலஞ்சென்ற ஜார் அரசனுடைய தோழர்களாயிருக்கவும் கூட அருகதையற்றவர்கள் என்பதை மாத்திரம் தெரிவித்து இதை முடிக்கின்றோம்.

---

**'புரட்சி ஓங்குக!, பொது உடமை-தோணுக!!"**

ரோஜா முத்தையா

# "மோசம் போன ஏழை உலகம்"

(தோழர் ஆர். இரத்தினசபாபதி)

கடவுள் நரகத்தின் தோற்றம் மனிதவர்க்கத்தினிடை என்று பரிபூரணமாக காணப்படுகிறதோ, அன்றே வீழ்ந்து சாகக்கிடக்கும், அடிமைப்பட்டுக்கிடக்கும், தாழ்த்தப்பட்டுக்கிடக்கும் இந்தியாவின் முக்கால் பகுதியுள்ள ஏழை சமூகத்துக்கு ஓர் உயர்ந்த சகாப்தமாகும். அன்று காணப்படுவதே சமதர்மமானதும், தனி உடமைவீழ்ந்து யாவரும் சந்தோஷத்துடன் சமமாக வாழும்படி ஏற்படும் ஓர் புதிய உலகத்திற்கு ஓர் நன்னாளுமாகும்.

இவ்வுயர்ந்த லக்ஷியம் சுடர்விட்டு சர்வ சாதாரணமாக எரியும் ஓர் நாட்டில் பசித்தவன் இருக்கமாட்டான். பாமரன் இருக்கமாட்டான், பணக்காரனோ, ஜமீனோ, ஏகாதிபத்தியச் செருக்கோ, இருக்க முடியாது. அவதாரமகிமை, புராணமகிமை, ரிஷிமகிமை, ஆள்வார்மகிமை முதலியவைகள் இல்லை. உயர்வு, தாழ்வு இல்லை. எல்லோரும் உற்றுறாரமரையார் தான். இந்த ஆக்ஷிமுறையின் அடிப்படையே அடிமையற்ற அன்பே உருவமைந்த பொதுஉடமையாகும். கல்வி, கைத்தொழில், அரசியல், பொருளாதாரம், அறிவு, அறம், ஒழுக்கம் எல்லாம் பொது உரிமை என்ற தத்துவத்தின் மேல் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் நம் நாட்டிலோ என்றால் தாங்கள் தான் லக்ஷ்மி புத்திரர்கள் என்றும், கடந்த ஜன்மத்தில் மகா புண்யம் செய்த வசத்தால் தனவந்தனாக இந்த ஜன்மத்தில் ஜனித்து விட்டேன் என்று சொல்லுகிறவர்களுமான ஓர் சிறு கூட்டம் அதாவது முதலாளிவர்க்கம் பெருவாரியான மனித சமூகத்தை கசக்கிப்பிழிந்து உழைப்பைத்தின்கிறது. உழைத்த சமூகத்துக்கு ஊதியமில்லாமல், தின்னசோறில்லாமல், கட்ட துணியில்லாமல், படுக்க வசதியில்லாமல், இருக்க வீடில்லாமல், நடக்க ரோடில்லாமல், குடிக்கத்தண்ணீரில்லாமல் சாகக்கிடக்கும் போது எல்லா ஊதியத்தையும் மேற்காட்டிய மைனாரிட்டி சமூகம் அடியோடு கொள்ளை அடிக்கிறது.

மேற்காட்டிய கொள்ளை பகற்கொள்ளையாகவும், பகிரங்கக்கொள்ளையாகவும், ராஜாங்கக்கொள்ளையாகவும், சட்ட சம்மதம்பெற்ற கொள்ளையாகவும், கடவுள் அனுமதியும் அவர்களின்வழிவந்த ஆச்சாரி புருஷர்களின் அனுமதி பெற்ற கொள்ளையாகவும், அடிக்கப்படுகிறது. இவைகள் எல்லாம் ஓர் புறம் இருந்தாலும், இவைகளை எல்லாம் அப்படியேகாப்பாற்றிக்கொடுப்பதற்காகதற்காலத்துக்காக காந்தீயம் வேலை செய்துவருகிறது. அதாவது பார்ப்பான் பார்ப்பானாகவே இருக்கவேண்டும்., "சூத்திரன்" சூத்திரனாகவே அதாவது மற்றவர்களுக்கு வேலைசெய்து தீர வேண்டும். ஏழைத்தொழிலாளர்கட்குதங்கநாணயங்கள் வேண்டுவதில்லை. ஒரு சில வெள்ளிநாணயங்கள் இருந்தால் போதுமானது, என்ற கொள்கையை அடிப்படையாகக்கொண்டு காந்தீயம் வேலைசெய்து வருகிறது. இன்று எங்குபார்த்தாலும், கால்பட்டினி என்ற சத்தம், அரைப்பட்டினி என்ற கூக்குரல், முக்கால்பட்டினி என்று வேலை நிறுத்தம், முழுப்பட்டினி என்ற சாக்காடு என்ற இந்த சத்தமே ஒலிக்கிறது.

கைநோகவும், கால்கடுக்கவும், அவயவங்கள் ஒன்று தவறாது இரத்தம் தெரிக்க உழைத்த பலன்கள் எங்கே? புண்ணியவான்கள் வீட்டுப் பெண்டு பிள்ளைகள் அவயவங்கள் பூராவும் வைரமாகவும், வைடூரியமாகவும், பச்சை, சிகப்பாகவும், தங்கமாகவும் மாட்டி விடப்பட்டிருக்கிறது. தெய்வாம்சமுடைய தனலக்ஷ்மிபுத்திரன் வீட்டு இரும்புப்பெட்டியில் சேரடியில், பட்டரை அடியில் கட்டுக்கடையாக மௌனம் சாதிக்கிறது. இவ்வளவு தானா? இவ்வுலகத்தில் அனைவரையும் சிருஷ்டித்து எல்லாரையும் இப்பொழுது காப்பாற்றிக்கொண்டிருப்பதாகச் சொல்லப்படும் கடவுள்கள் கூட இந்த ஏழை மக்களிடமிருந்தும் எல்லாவற்றையும் வாங்கி தன் தலையில் ரத்தினக் கிரீடத்துடனும், வைடூரிய மூக்குத்திகளுடனும், உடம்பெல்லாம் இழைத்த வைரங்களுடனும் ஜகஜ்ஜோதிமயமாய் விளங்குகிறது. இன்னும் ஏராளமான நகைகளை தனக்கு அடியில் பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டிருக்கிறது. இது போராமல் சென்னை பார்த்தசாரதிசாமி தனக்கு இரத்தினகிரீடம் இல்லாமல் இருக்க முடியவில்லையாம். ஸ்ரீ ரெங்கத்துசாமி லாட்டரி போடுகிறது. கும்பகோணசாமி உண்டியலை காண்பிக்கிறது. அடுத்த வேளைச்சாப்பாட்டுக்கு வழியில்லையே என ஏங்கித்தவிக்கும் மக்களுக்கு இவ்வளவு சொத்துக்களை பூஸ்திதியாக வைத்துக்கொண்டிருக்கும் இக்கடவுள்கள் இத்தனைநாளாக என்ன செய்தது இனி என்ன செய்யப்போகிறது. பணக்காரக்கூட்டம், மாட மாளிகை, கூட கோபுரம், திண்டுதலகாணி, மெத்தை, பட்டு பட்டாடைகள், 5 வேளை 6வேளை தாசி வேசி முதலிய ஆடம்பரங்களெல்லாம் ஏழைகளின் இராப்பகல் உழைப்பென்பதை இன்று பசித்துக்கிடக்கும் உலகம் பகுத்தறிந்து விட்டால் முடிவு என்ன என்பதைச்சொல்ல வேண்டுவதில்லை.

முதலாளி வர்க்கத்திற்கு உழைத்துப்போடுவதே பசித்துக்கிடக்கும் ஏழைத்தொழிலாளர்களின் உத்தம கைங்கர்யமாம்! கடந்த ஜன்மத்தில் செய்த பாபநிவர்த்தியாம்! இப்புறளியால் பணக்காரனுக்குப்பரிந்துபேசி பசியால் கண்ணீர்வடிக்கும் ஏழை சமூகத்தை நம்பும்படி தூபாஷ்வேலைசெய்யும் ஒரு கூட்டம் கடவுள், மதம், பாபபுண்ணியம், மோக்ஷநரகம், போன்ற ஆயுதங்களை கருவியாகக் கொண்டிருக்கிறது. அக்கூட்டம்தான் ஆசாரி பிராமணர், அவதார புருஷர்கள், மகாத்மாக்கள் போன்றபட்டங்களைத் தரித்துக்கொண்டிருக்கும் கூட்டமாகும். பசித்துக்கிடக்கும் ஜாதிக்கும், ஊரார் உழைப்பில் சோம்பேறித்தனமாய் தின்று கொழுத்து சுகபோகங்களை அனுபவிக்கும் பணக்காரக்கூட்டத்துக்கு மிடையில் அவரர்கள் வந்த விதோ! பூர்வ ஜன்மத்தின் பூஜாபலன் அவரவர்கள்அதிர்ஷ்டப்படியே நடக்கும், கடவுள், ஆக்ஞை. புண்ணியபலம், விதியின்பயன் வந்தவழி, தலையெழுத்து!! போன்ற வார்த்தைகளோடு சமாதானம் சொல்லி கஷ்டப்படுபவனுக்கு விமோசனமில்லாமலும், சுகமனுபவிப்பவன் மென்மேலும் சுகத்தை அடையச்செய்வதோடு, தாங்கள் பாட்டையும் பிறர் உழைப்பில் தின்று கொழுக்கத் தக்க சாதனத்தை ஏற்படுத்திக்கொள்கிறார்கள். ஆகவே லக்ஷ்மி புத்திரர்களான பணக்காரக் கூட்டத்துக்கும்,, அவதாரபுருஷர்களான ஆசாரி புரோகிதக் கூட்டத்துக்குமிடையில் இருதலைக்கொள்ளி எறும்புபோல் தவிக்கும் ஏழைத்தொழிலாளர்கட்கு மகத்தான கஷ்டத்துடன் மோசம் போய்விட்டது.

இக்கூட்டத்தின் செப்படுவித்தைக்கு தலைவணங்கிய ஓர் பாபம் தான் ஏழை உலகம் வம்ச பரம்பரையாக நசுக்கப்பட்டு—கஷ்டப்பட்டு வருவதற்கு மூலகாரணம். ஜமீன்தாரன் அரசன் —மிராசுதாரன்—மிட்டாதாரன் —பட்டக்காரன்போன்ற பணக்காரன் வகையறுவும் அந்த காரத்தில் அருள் ஜோதியாய் இருக்கும் கடவுள் அவதாரமாகவும், அவதாரக் கூட்டத்தின் வம்சத்தில் ஜனித்தவராகவும் சொல்லப்படும் பார்ப்பான் புரோகிதன்— போப்—மூல்லா— ஆசாரிசன்னதி—மகாத்மா போன்ற வகையாரும் பசித்தவன் உழைப்பில் தின்றுகொண்டு அக் கூட்டத்தார் செய்யும் வேலைதான் என்ன? கடவுளைக் கண்டதாயும், அவர் சொன்னதாகவும், சொல்லியவைகளை சாஸ்திரமாக எழுதிவைத்திருப்பதாகவும் அதை நம்பி நடப்பதே க்ஷேமமும், மோக்ஷமும்என்றும், இல்லையேல் நரகம் என்றும், தான் நோகாமல் தின்று கொழுத்ததற்கு சும்மா இருக்கமுடியாமல் செய்யும் வேலை இது தான். அவ்வேலையின் அடிப்படையான நோக்கமென்ன? ஏழைகளாகவும், கஷ்டப்படுகிறவர்களாகவும், வேலை இல்லாத் திண்டாட்டத்தில் பரிதவிப்பவர்களாகவும் சிருஷ்டிக்கப்பட்ட மக்கள் கருணைநிதியும் அந்தகாரத்தில் அருள் ஜோதியாகவும் இருக்கும் கடவுளின் கட்டளையாகும். அக் கட்டளைக்கு அடங்கி பொறுமையுடன் தங்கள் கஷ்டங்களை நம்பிக்கையுடனும், பொறுமையுடனும் பிரார்த்தித்துக்கொள்ள வேண்டும். இல்லாவிடில் மீளாத நரகவேதனை என்பதே! உயர்ந்தவன் உயர்ந்த படியிலும்—தாழ்ந்தவன் தாழ்ந்தபடியிலும் இருக்கவேண்டுமென்பதும் இக்கட்டளையின் பாற்பட்டதுதான். இந்த தத்துவம்தான் இன்று ஜன சமூகத்தின் மூலாதாரமான பாத்தியமென்று சொல்லப்பட்டு அது காந்தி மகானாலும் ஆதரித்து அகில இந்தியாவுக்கு தேசிய மகாசபையானகாங்கிரஸிலும் நிறைவேற்றப்பட்டு விட்டது.

இவைகள் எல்லாவற்றையும் செய்து முடித்துவிட்டு உங்களை கோவிலுக்கு கூப்பிட்டு தெய்வ பக்தியைப் புகட்ட பிரயத்தனம் செய்கிறார்கள். ஏழைகள் விடுதலை கோவிலிலா? பசித்தவனுக்கு விடுதலை கோவிலிலா? பரிதவிப்பவனுக்கு விடுதலை கோவிலிலா என்பதை ஆழ்ந்து சிந்தியுங்கள் உங்கள் உழைப்பை உங்களை இராப்பகலாய் கசக்கிப்பிழிந்து வேலை வாங்கிய ஊதியத்தை காந்தியார் ஆசி கூறி அழைக்கும் கோவிலில் இருக்கும் ஆண் தெய்வங்களும், பெண் தெய்வங்களும் முன் சொன்னபடி கொள்ளை கொண்டிருக்கிறது. இக்கொள்ளை கொள்வதற்கு ஆதாரமாக இருக்கும் கோவிலுக்கு உலகம் உண்டு கொழுப்பதற்கு உயிர் நாடியாயும், நாகரீக வளர்ச்சிக்கும், பொதுஉடமை வளர்ச்சிக்கும், உயிர் நாடியாக இருக்கும் உங்களை அழைப்பதின் மறைமுகமான சூழ்ச்சியைநீங்களே சிந்தியுங்கள். இனியும் மோசம்போக வேண்டாம்.

ஐயோ! மோசம்போன ஏழை உலகமே! உங்கள் முன்னேற்றத்தை சூரையாட உங்களைச் சுற்றிலும், பணக்கார பூதங்களும், ஜமீன்தார் பூதங்களும், கடவுள் பூதங்களும், மத பூதங்களும், புரோகிதப் பார்ப்பனப் பூதங்களுப் பற்பல ஆயுதங்களோடு கேவலத்திற்கும், பசிப் பிணிக்கும், சமூகத் தாழ்வுக்கும், பாத்திரப் படுத்திருக்கிற தென்பதை கூர்ந்து நோக்கவேண்டாமா! உங்கள் சமூகத்துக்கு தீங்கிழைக்கும் பிரஸ்தாப முட்டாள் தனத்தை மூலாதாரமாகவும் செய்யப்பட்டாய் விட்டது. உங்கள் கேவல நிலையை மீண்டும், மீண்டும், ஏழ்மைக்கும் ஆசி கூறி அழைக்கும் அவதார புருஷர்களாக நடிக்கும் மகாத்மாக்களில் கடந்து போனவர்கள் போக உங்கள் கண் முன் காந்தி காணப்படுகின்றார்.

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க

# பணமும் லேவாதேவியும்

எப்படி வந்தது
எப்படி இருக்கிறது ?
எப்படி இருக்கவேண்டும்

———:)0(:———

(தோழர் வைசு)

(முன் தொடர்ச்சி)

இன்று உலகமெங்கும் எற்பட்டிருக்கும் பண நெருக்கடியின் கொடுமையைப்பத்திரிகை படிப்போர் அறிவர். பல வல்லரசுகள் பொருளாதார நெருக்கடியைச் சீர்படுத்த முடியாமல் தட்டுத்தடுமாறிச் சமாளித்து நிற்பதும் அரசாங்கங்கள் பல (தங்க) நாணயத்தைக் கைவிட்டு (தத்வார்த்தத்தில்( இன்சால்வெண்டு ஆகிவிற்பதும், உலகில் உள்ள நாட்டிற்கெல்லாம் பொருள் வலி அதிகம் பெற்ற அமெரிக்க நாடு சென்ற இரண்டு வாரங்களாக எய்தி நிற்கும் சிறமமும் ஆயிரக்கணக்கான பேங்குகள் முறிந்ததும் நாட்டுக்கோட்டையாரைப் பொருத்த மட்டில் பலருடைய நாணயம் பறந்து விட்டதும், தொழில் செய்யுமிடங்களில் கோவில் பணத்தைக் கொடுக்க முடியாது வட்டிமட்டும் கட்டப் பெருந் துன்பப்பட்டதும், சில ஊர்களில் மகமை எழுதக்கூட முடியாமல் விடப்பட்டிருப்பதும் உலக மக்கள் அறிந்த உண்மையாகும்.

அரசாங்கங்களே தலைதடுமாறி நிற்கிற இந்நிலையில் தாம் பட்டகடனைக் கொடுக்க முடியாத நிலையில் தனி மனிதர்கள் பலர் சிக்கியிருப்பது ஓர் சாதாரணமான சம்பவமே யாகும்.

## பொது மக்களின் நிலை.

"தம்பி சற்றே மெலிவானால் அண்ணன் தானடிமை கொள்ளலாமோ?" செம்புக்கும், (பணத்துக்கும்) கொம்புக்கும் (ஆயுதத்துக்கும்) அஞ்சி மக்கள் சிற்றடிமைப்படலாமோ? என்று பாரதியார் பேசுகிறார். அண்ணன் தம்பி என்ற உறவு அடிமைப்பட்டு நிற்கும் மக்களிடம் உண்டோ? பண நெருக்கடியில் மூழ்கி நிற்போர் பலர் மக்கள் உறவு எத்தகையது என்பதை தெளிவாகக் காண்கின்றனர். கடன் துன்பம் என்ற தீவட்டி வெளிச்சத்தில் மக்கள் உறவின் நிலைமை உள்ளவாறு ஸ்பஷ்டமாக எடுத்துக்காட்டப்பெறுகிறது. சிரித்துப்பேசுவோர் மரியாதை செய்து நடிப்போர் எல்லாம் பண விஷயத்தில் பாசத்தையும் செய்நன்றியையும் மறந்து ஒதுங்குவதோடு நில்லாது, துன்பத்திலிருப்போரை அவமானப்படுத்தவும் இவர்கள் தயங்குவதில்லை. இவர்கள் பேரில் நாம் குறைகூற முற்படவில்லை. எனினும் பரஸ்பரம் அன்பு கொண்டு நல்வாழ்வுக்கு வழிதேடாமல் பணத்தையே குலதெய்வமெனக்கருதி வளர்ச்சி குன்றுகிறார்களே என்று பரிதாபப் படுகிறோம்.

இத்தகை மனப்பான்மை கொண்ட மக்களிடுல் கண்ணியம் எத்தகையது? யார்? யார்? கண்ணியமுடையோர் என்று தெரிந்துகொள்ளலும் சாத்தியமாகாதன்றோ?

"தன்னைத்தான் காதலனாயின் எனைத்தொன்றும் துன்னற்க தீவினைப்பால்" என்ற நீதியின்படி மக்கள் எப்பொழுதும் நேர்மையாக நடத்தலே இன்பம் தருவதாகும். துன்பத்தை நீக்குதற்கு வழி நேர்மையை கடைப்பிடித்தலே யாகும். நிலையற்ற இவ்வுலக மக்கள் புரியும் வஞ்சகச் செயல்கள் அறியாமையினுலேயே நிகழ்கின்றதென்பதை எவரும் மறுக்க முடியாதன்றோ.

## கடன் பட்டோர் கடமை

பொதுவாக இயற்கை நீதிகளை அனுஷ்டியாதோரும் துன்பம் மிகுந்த வேளையிலாவது அதிலிருந்து விலக நேர்மையைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

துன்பத்தில் மனம் பலவீனமாக விடாமல் பாதுகாக்கவேண்டும் கவலைப்பட்டுயிர் விடுவதை விட கண்ணியமாக நடந்து நல்ல தருணத்தை எதிர்பார்த்திருப்பதே மேலானது. "நெஞ்சிற் கவலை நிதமும் பயிராக்கி அஞ்சி உயிர்வாழ்தல் அறியாமை" "துன்பம் வருங்கால் நகுக (சிரிக்க) அதனை அடுத்தூர்வ தொப்பதில்" என்ற; மேதாவிகள், கவலையை எதிர்க்கும் வழியை நாம் கடைப்பிடித்து "எண்ணிய எண்ணிய ஆங்கெய்தவர் எண்ணியார் திண்ணியராகப் பெரின்" என்பதை நம்பித்திடங்கொண்டு கவலையை உதறி எரிந்து விட வேண்டுகிறோம். திறமையுள்ள மக்கள் மனோதிடத்தை வளர்த்து உடையும், உணவும், பெற்று மானங்காப்பாற்றக்கூடிய கடைசி நேரம் வரை நல்ல காலத்தை எதிர்நோக்கி அதற்குறிய கடமைகளை எல்லாம் உத்ஸாகமாக செய்தல் வேண்டும்.

இதனை அனுஷ்டிக்கதிடம் கொண்டுவிட்டால் நிச்சயமாக நல்ல காலம் வரும். நிற்க இத்தகைய மனமுடையோருக்கு எது நேர்ந்தாலும் ஒன்று தான். எனினும், தம்மைச் சார்ந்தோரின் நம்மை கருதி "நம்புவதே வழி" என்று பேரறிஞர் பாரதியார் கூறுகிறபடி நம்பி நம் கடமைகளை மனத்தெளிவோடு செய்யவேண்டுகிறோம்.

அதிர்ஷ்ட வசமாக பலர் கடனாளியாகியதனுல் பெற்ற இவ்வறியசந்தர்ப்பத்தினுல் கிடைத்த அனுபவத்தை மறந்துவிடாமல் வருங்காலத்து மாந்தரை இந்நோய் பீடிக்க விடாது தடுத்து மனித சமூகத்தை வாட்டுகிற இக்கடன் தொல்லை இன்றிருக்கிறமாதிரி இருக்க இடங்கொடா முறையை எற்படுத்தவேண்டும்.

## தனிமனிதர் கடன் பேறல் கூடாது

வாங்கிய கடனைக்கொடுக்க வழியற்றுத் துன்பத்தை அனுபவித்த அறிவுள்ள மக்கள் இனி தனி மனிதர் என்ற, முறையில் எந்தச் சந்தர்ப்பத்திலும் தங்கள் வாழ் நாளில் கடன் கேட்பதில்லை வலியத் தந்தாலும் வாங்குவதில்லை கடன் சீட்டில் கையெழுத்திடுவதில்லை என்ற முடிவு கட்டிவிடுவதோடு, வில் பணம் இல்லாமையால் பட்டினி யிருக்க நேர்ந்தாலும் அப்படியிருந்துயிர் விடுவதே மேலானதென்ற முடிவுக்கு வந்துவிடுவர், என்று நாம் நினைக்கிறோம். கடன் மட்டும் கூடாதென்ற முறையில் வாழ்வு நடத்த வழியில்லாவிட்டாம் பட்டினியிருந்துயிர் துறப்பதே மேலானதாகும். சம்பாதிக்க முடியாது மக்கள் நோய் வாய்ப்பட்டால் சர்க்கார் ஆஸ்பத்திரிக்குப் போகலாம். உடல் நலிவின்றிய முறையில் கையில் பணமில்லாவிட்டால், வேஷம்போடுவதை விட்டு டம்பவாழ்வைக் குறைத்து விறகுவெட்டியோ, வீதி கூட்டியோ கண்யமாக வாழலாமன்றோ.

## துணிவு வேண்டும்.

திறமையுள்ள மக்கள் மரணத்துக்கும் பயப்படுவதில்லை. விரைந்து செல்லும்வாகனுதிகளைக் கண்டுபிடித்தவர்களும், இன்று இமையமலையின் சிகரங்காணச்செல்வோரும், மரணத்துக்குப் பயப்படுவதில்லை என்பதை உலகமிறியும். இதைப்போலவே திறமை சாலிகள் மானம்போய் உயிர் வாழ்வதில் பிரியப்படாமல் உயிரை ஓர் துரும்பென மதிக்கிறுர்கள். மானங்கெட்டவரின் (வாழாமை முன்னினிது) சாதலும் மிக மிக இனிதன்றோ?

போர் முனையில் நிற்போனுக்கு க்ஷத்ரி, வெற்றியடையவேண்டுமென்பது. அவன் சாவுக்கு பயந்தால் போர்முனையில்நிற்கும் அவன் நிலை என்னுகும் 'மானம் சிறிதென்றெண்ணி வாழ்வு பெரிதென்றெண்ணும் ஈனர்க்குலகம் தன்னில் இருக்கத்தகுதியுண்டோ" என்று பாரதியார் கேட்கிறுர். ஆதலின் தன் மதிப்புள்ளோர், போர் முனையில் நிற்போனைப்போல் மரணத்துக்கும் அஞ்சாத துணிவுகொண்டு விடவேண்டும். துணிவு எல்லாம் தரும் என்பதை மக்கள் அறிய வேண்டுகிறோம்.

## நிலையற்ற வாழ்வை இன்ப முடையதாக்கல் வேண்டும்.

இவ்வுலகில் உள்ள நமக்கு அதிகப்பிரியமான மக்கள், பொருள்கள், உயிரினங்கள், இவை அத்தனையையும் விட்டுப் பிரிந்து, நாம், ஒவ்வொருவரும் (நமக்கு முந்திய எண்ணிறடங்காத மக்கள் சென்றொழிந்த) மரணவாசல் வழியே ஓர் நாள் சென்றொழிவோம் இது சத்தியமன்றோ?

இந்தப் பரம ரகஸ்யம் எல்லோருமறிந்தது. எனினும் இதனைச் சிந்தியாது உலகில் மக்கள் படும் வீண் துன்பங்கள் ஒழிதல் வேண்டும். சிறிது நாள் முன்பின்னுக இறந்துபடவேண்டிய விதியுள் சிக்கிய நாம் இங்கு வாழும் சொற்ப நாட்களை பயமற்ற,—திடங்கொண்ட,— உத்ஸாகமான, முறையில் கழிக்க முயலவேண்டும்.

செயற்கையில் உண்டான பணம், ஜாதி, ஆகியவைகளினுல் வித்தியாசம் காட்டும் தொல்லைகள் நேர்ந்தன. இதன்பயனுக மக்களை மாக்களாக்கும்—மக்கள் வாழ்வுக்கு அழிவுதேடும்,-ஆணவம்-ஆகிய விஷக்குணங்கள் வளர்ந்தன. இதனுல் மனித சமூகத்தில் இருந்த அன்பும்-ஆதரவும் தொலைந்தன. ஆணவம், பயம், ஆகிய பேயால்பீடிக்கப்பெற்றமக்கள் பொய்யையும், பித்தலாட்டத்தையும் வளர்த்து மனித சமூகத்தை ஏழை என்றும், அடிமை என்றும் பிரித்து இகழும் இழிந்த நிலைக்கு இறங்கிவிட்டது — பரிதபிக்கத்தக்கது. இந்நிலைமையை மாற்றி திடம் கொண்டவர் மெலிந்தாரை தின்றுபிழைக்க இடங்கொடாமல் மனிதருடையவாழ்வைப் புனிதமுடையதாக்கவேண்டிய பொறுப்பும், கடமையும் இன்றுள்ள அறிஞர்களைச் சார்ந்து நிற்கிறது.

ஆகவே இனி மக்கள் செய்யும் தொழில்கள் எல்லாம் பொது மக்கள் நல்வாழ்வைப் பெறும் துரையில் அமைக்கவேண்டும். "தனித்தமனிதருக்குணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்" எனப் பாரதியார் கூறியதை நோக்கி இத்துன்பத்தை நீக்க ஆக்க வேலைசெய்ய முயலவேண்டும்.

## லிமிடேட் கம்பேனி.

லிமிடெட் கம்பெனியாகாத தொழிலும், தனிமனிதர் கடன் வாங்கும் துறையும், சட்டமூலமாக ஒழிதல் வேண்டும் என்பதே நமது நோக்கம்.

மாறுவஸ்தை மக்களுக்கு இல்லாதிருக்கமேல்நாட்டார் ஓர்வழி கண்டிருக்கின்றனர். மிக மிகச் சிறந்த அம்முறையைப் பின்பற்றி நம் தொழில்களைச் செப்பனிட்டால் பரஸ்பரம் யாவர்க்கும் நன்மை உண்டு. தனி மனிதர் கடன் வாங்கவும் கடன் கொடுக்கவும் கூடாதென்ற சட்டம் இன்னும் மேல்நாட்டிலும் ஏற்படவில்லை. ஆனுல் இத்தகைய சட்டத்தையே, நாம் இன்று எதிர்பார்க்கிறோம்.

தனி மனிதர் லேவாதேவி செய்வதிலிருக்கும் தீமை மிகக் கொடியதாகும். ஆகவே தொழில்களை எல்லாம் அளவுக்குட்பட்ட கூட்டுத் தொழில் (லிமிட்டெட் கம்பெனி) களாக்கிவிடவேண்டும். இம்முறையில்

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க.

# சுயமரியாதை இயக்கத்தில் இன்னமும் காந்தியமா?

## ஒரு பெரிய தவறு.

(தோழர் ம சிங்காரவேலு பி. ஏ. பி எல்.)

கடந்த இரண்டு மாத காலமாய் நிரேக அசௌக்கியத்தால் நமது இயக்கத்திற்கு எந்த பணியும் செய்வதற்கில்லை. எழுதவும், பேசவும், படிக்கவும்கூட கூடாதென்கின்றார்கள் நமது டாக்டர்கள். டாக்டர்கள் யோசனையைக் கடப்பதற்கும் வீட்டில் விடமாட்டார்கள். ஆனால் "குடி அரசை" மாத்திரம் படிக்காமல்விட மனமெழவில்லை. தேக ஆரோக்கியத்திற்காக நாட்டுக்குப் போயிருந்த காலை வாரா வாரம் "குடி அரசை" மாத்திரம் எனது தமயன் அனுப்பிக்கொண்டிருந்தார். இன்று காலை வந்த "குடி அரசை" ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கையில் தமயன், வந்த "குடி அரசை" மேல் அனுப்பினர். அதனை கண்கஷ்டத்துடன் படிக்கும்போது, போலீஸ் அட்டூழியத்தைக் குறித்து எழுதியிருப்பதைக் கவனிக்க நேரிட்டது.

அதில் கண்டுள்ள சாராம்சம் பின் வருமாறு. நீடாமங்கலத்தில் ஏதோ உற்சவ வேடிக்கை நடப்பதாய் தெரிந்து, சில சுயமரியாதைத் தோழர்கள் சென்றதாகவும் அந்த சமயத்தில் போலீஸ் உத்தியோகஸ்தர்கள், சென்றவர்களில் இருவரை அடித்து அவர்கள் பால் பேசச்சென்ற தோழர் ராமையாவையும் புடைத்து லாக்கப்பில் இரண்டு நாள் அடைத்து வைத்திருந்து, மூன்றாவது நாள் மேஜிஸ்டிரேட் முன்னிலையில் கொண்டு போய் பார்ப்பனர் சாப்பிடும் இடத்தை எட்டிப்பார்த்ததாகக் குற்றம் சாட்டி, தண்டித்ததாகவும், தண்டிக்கப்பட்டவர்கள் விசாரணையில் கலந்து கொள்ள முடியாது என்று சொன்னதுடன், அபராதமும் கொடுக்க முடியாது என்றும் சொல்லிவிட்டதாகவும், அதனால் இரண்டு நாள் காவலிலிருந்து வந்து விட்டார்களாம். இதனால் என்ன விளங்குகின்றதென்றால், நமது தோழர்கள் போலீசார் கொண்டுவந்த குற்றத்தை ஒப்புக்கொண்டு, தண்டனையைக் கோரியதாக ஏற்படுகின்றது. செய்தது குற்றமாயின், குற்றத்தை ஒப்புக்கொள்வதுதான் யோக்கியதை. இல்லையாயின் சாட்டிய குற்றத்தை மறுப்பதுதான் ஆண்மைத்தனம். இந்த இரண்டையும் விட்டுவிட்டு விசாரணையில் கலந்துகொள்ளமாட்டேன் என்றால், இதன் கருத்தென்ன? இந்த ஒத்துழையா நடவடிக்கை, காந்தியாருக்கும், அவர் கூட்டத்தாருக்குத்தான் அடுக்குமென்று இதுகாறும் எண்ணிவந்தோம். ஆனால் நேற்று நமது சுயமரியாதைத் தோழர்களும், இந்தக்கோழைத்தனத்தைக் கைக்கொண்டார்களென்றால் நமது நாட்டுக்கு விமோசனம் வெகு தூரமே!

இந்த நடவடிக்கையால் கேஸின் உண்மையை எப்படிப் பொது ஜனங்கள் தெரிந்து கொள்வது? போலீசார் கொண்டுவந்த கேஸ் உண்மையாகவும் இருக்கலாம், அல்லது பொய்யாகவுமிருக்கலாம். அது எப்படி விளங்குவது? குற்றவாளி உண்மையைக் கோர்ட்டில் தெரிவிக்காவிட்டால், குற்றம் சாட்டியவர்களைப் பழிப்பதால் யாது பிரயோஜனம்? கோர்ட்டார் இரண்டு கட்சிக்காரர்களையும் விசாரித்துத் தீர்மானிக்கக் கடமைப்பட்டுள்ளார். முக்கியமாக குற்றவாளிதான் நிரபராதியாய் இருக்கும் பட்சத்தில், அதனைத் தெரிவிக்கக்கடமைப்பட்டுள்ளான். அந்தக் கடமையைச் செய்யாமல் ஊமை வேஷம் பூண்டால் யாருக்கு என்ன லாபம்? கோர்ட்டாருக்கும் உண்மை தெரிந்தபாடில்லை. போலீஸ், அதிக்கிரமத்திருந்தால் அதுவும் வெளிப்படுத்தினபாடில்லை. பொதுஜனங்களுக்கும் விஷயம் இன்னதென்று விளங்கியபாடில்லை. குற்றம் சாட்டப்பட்டவன் (accused) தற்கொலை புரிந்து கொண்ட மாதிரியாகின்றது. இந்த நடத்தைக்கு யார் சவாப்தாரி? போலீஸ் கொண்டு வந்த கேஸ், எதிர்ப்பு இல்லாமலே எளிதில் தீர்ப்பாய் விடுகின்றது. இந்த சந்தர்ப்பத்தில் கோர்ட்டு என்ன செய்யும்? நியாயப்படி தண்டிக்க நேரிடுகிறது. அப்பீல் செய்வதற்கும் கூடாமையாய் விடுகிறது.

இவ்வித நடத்தையால், வீணாக் குற்றமில்லாதவன் குற்றவாளியாகின்றான். குற்றம் சாட்டியவர்களும், எளிதில் பொய்மையைக்கொண்டு வெற்றி பெருகின்றார்கள். கோர்ட்டாருக்கும் நியாயத்தைச் செய்யக் கூடாமையாய் விடுகின்றது. பொது ஜனங்களாகிய நாமும் உண்மையைத் தெரிந்துகொள்ளமுடியவில்லை. இந்த நிலைமைக்கு நமது காந்தியார் தனது இயக்கத்தால்நமதுநாட்டைக்கொண்டுவந்து விட்டார். நாமும்அவருடைய சித்தாந்தத்தைப் பின் தொடர்ந்தால் நமது நாடு அதோ கதிதான்.

நேற்று சென்னையில் சில நமது தோழர்கள் மேல்கொண்டுவந்த கேசை நீடாமங்கலத்தில் நடந்த மாதிரி நடத்தி இருந்தால் என்ன கதியாய் இருக்கும்? அதையும் முகவில்அலட்சியம் செய்யப்பட்டது. ஆனால் அவ்விதம் செய்வது (Suicide, அதாவது தற்கொலை யாகுமென்று எதிர்வாதம் செய்து வந்ததில் உண்மை வெளியாகி முதலாளி (Prosecutor) சொல்லாமலே கேசை வாபீஸ் வாங்கிக்கொண்டான்.

நீடாமங்கலத்தில் அந்த கேசை எதிர்வாதம் செய்து போலீசார் அட்டூழியத்தை வெளிப்படுத்தாமை, பெருத்த தவறென்றே நமக்குப்படுகின்றது. இந்த நடத்தையால் உலகில் பொய்யும், பித்தலாட்டமும் ஜெயமுறச் செய்கின்றோம். நியாயஸ்தலத்தில் நியாயம் கிடைக்காது என்று கூறுவது அதுவேறு விஷயம். நம்முடைய கடமை என்னவெனில் உண்மையைவெளிப்படுத்த வேண்டியதே. குற்றம் செய்யாதவன் குற்றம் செய்யவில்லை என்று கடைசிவரை கூக்குரல் போடவேண்டியதே. பிரான்ஸ்தேசத்தில் டிரபூஸ் (Drefus) என்ற போர்வீரருக்கு எந்த கோர்ட்டிலும் நியாயம் கிடைக்காமல் கவர்ன்மெண்டாரே வெட்கமில்லாமல் செய்துவந்தனர். ஆனால் கடைசியில் அவர் குற்றவாளி அல்லவென்று தீர்ப்பளிக்கப்பட்டது. அது எதனால்? அவர் குற்றவாளி நான் அல்லேன் என்று வாதித்துவந்தபடியால் என அறிக.

காந்தியார் தனது ஒத்துழையாமையை நடத்தத்தெரியாதபடியால் அவர் இயக்கத்தைப் பரிகாசம் செய்ய நேரிட்டது. நியாயஸ்தலத்தையும் ஸ்தம்பிக்கச்செய்யவேண்டுமானால் ஒவ்வொரு கேசையும் எதிர்வாதம் செய்து வந்திருக்கும் பட்சத்தில் விஷயம் வேறு மாதிரியாய் விட்டிருக்கும். அதைவிட்டுவிட்டு எங்கள் இனத்தார்கடலில் பரவலோலா என்ற பறக்கும் மீன்களை கூடைகூடையாய் வாரி கட்டு மரங்களில் நிரப்புவதைப்போல் "எங்களை ஜெயிலில் அடையுங்கள்" என்று வலியவலியப்போய் ஜெயிலை நிரப்புவதால் யாருக்கு என்னலாபம்? அந்த மீன்களும் பறந்தோடாமல் லட்சக்கணக்காக கட்டுமரங்களைச் சூழ்ந்துகொண்டு வலைஞர் பிடிக்க பிடிக்க வந்துகூடைகளில் நிரம்புகின்றன. அது போலவே நமது காங்கிரஸ்காரர்களும் ஜெயிலில் போய் அடைகின்றார்கள். இதுவும் இவர்கள் தலைவிதியா என்போம்! இந்தத்தலைவிதியை நமது சுயமரியாதைத் தோழர்களும் கையாள வந்ததுதான் நமக்கு ஆச்சரியமும் விசனத்தையும் உண்டாக்கியது. "ஓடுகின்றவனைக்கண்டால், துரத்துகின்றவனுக்கு இளக்காரமென்ற" முதுமொழியை மறந்தனரா? பொய்யை பொய்யென்று எடுத்துக்காட்டுவதுதான் மனுஷத்தனமென அறிக. அக்கிரமக்காரனை எதிர்க்காமல் அவனுடைய நடத்தையை வெளிவரச் செய்யாதிருந்தால் உலகில் அக்கிரமம் நிறைந்தே வருமெனவும் அறிக. ஆதலின் நமது வேண்டுகோள் என்னவெனில் இனி இத்தியாதி தவறுகளைச் செய்யவிடாமல் உள்ளதை உள்ளபடி உரைத்து உலகம் உண்மையை அறிந்துகொள்ளும்படி நமது நடவடிக்கைகளை எந்த கோர்ட்டாயினும் யார் முன்பாயினும் எடுத்துக் காட்டவேண்டிய கடமை சமதர்மிகளுக்குத்தான் உடன்பாடென்று எடுத்துக்காட்டுமாறு வேண்டிக்கொள்ளுகின்றோம்.

---

## "ஒன்பதாவதாண்டு"

நமது "குடி அரசு" பத்திரிகைக்கு இவ்வாரத்துடன் (23-4-33) எட்டாவதாண்டு முடிந்து அடுத்தவாரம் (30-4-33) ந்தேதி ஒன்பதாவதாண்டு பிறக்கிறது.

அவ்வாரப்பத்திரிகையில் பல அறிஞர்களின் கட்டுரைகளும், தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்கள் மேல்நாட்டிலுள்ள நமதியக்கத்தோழர்களுடன் எடுத்தப்படங்களும், பல மொழிபெயர்ப்புகளும் அதிக பக்கங்களுடன் வெளி வரும்.

---

## கொச்சி சுயமரியாதை மகாநாடு.

கொச்சி சுயமரியாதை மகாநாடு திருச்சூர் அந்திக் காட்டில் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும் என தோழர் கே. அய்யப்பன் பி. ஏ. எம்; எல். சி. எழுதுகிறார்.

சென்ற 16-1-33ந் தேதி மதுரையில் நடைபெற்ற சுயமரியாதை மகா நாட்டின் தலைவர் தோழர் பி. லக்ஷ்மி நரசு அவர்களின் தலைமை சொற்பொழிவு வருமாறு;—

அன்புள்ள தோழர்களே!

இந்த மகா நாட்டின் அக்கிராசனாதிபத்தியத்தை எனக்கு அளித்ததற்காக வரவேற்பு கழகத்தினருக்கு எனது வந்தனத்தை தெரிவித்துக் கொள்வது எனது முதற்கடமை.

சுயமரியாதை இயக்கத்தின் பலதிறப்பட்ட அம்சங்களைப்பற்றி என்னுடைய பிரசங்கத்தில் விவரிக்க உத்தேசிக்கிறேன். இவ்வியக்கத்தின் தத்துவத்தை சுருக்கமாக சொல்லவேண்டுமானால் மனித சமூகத்தின் முன்னேற்றத்திற்கு தடைகளாகவுள்ளவைகள் எதுவாயினும் அவைகளை எதிர்ப்பதே இந்த இயக்கத்தின் முக்கிய தத்துவம்.

பகுத்தறிவுகொண்ட மனிதனுக்கும் மற்ற மிருகங்களுக்கும் உள்ள வித்தியாசமென்ன? மிருகங்களில் காணப்படாத அறிவும், ஒழுக்கத்தையும் உள்ள ஒரு சக்தி மனிதனிடம்மிளிர்கின்றன. நாம் ஒவ்வொருவரும், இந்த சக்திகள் முழுவதையும் பயன்படுத்தி மேலும் மேலும் விருத்தி செய்வோமானால் தான் நம்மில் ஒவ்வொருவருக்கும் பூரண மனுஷத்தன்மையை அடையக்கூடும். தனக்கு இயற்கையாக அமைந்திருக்கும் சக்திகளை தன்னுடைய லக்ஷியமாகிய நலன்களுக்கு உபயோகிக்க வேண்டும்மென்னும் ஆசை மனிதனுடைய தன்மையில் முக்கியமான அம்சமாகும். தன்னை சுற்றியுள்ள சந்தர்ப்பங்களினால் மனிதன் இழுக்கப்பட்டு உருவாக்கப்படுபவனாயிருந்தாலும், பாரம்பரியமாகதான் அடைந்துள்ள சக்திகளை தன்னுடைய பூரணத்துவமான நன்மைக்கு பயோகப்படுத்தக் கூடிய செயல் வாய்ந்தவன். புகழ்பெற்ற ஆங்கில கவி ஷெல்லி கூறுவதுபோல், "ஒவ்வொரு இருதயமும் பூரணத்துவத்தின் வித்தை யுடைத்தாயிருக்கிறது." மனிதன் தன்னுடைய உடலையும், ஜீவியசக்தியையும் அவைகளின் தன்மையை அடைய முதலில் விருத்தி செய்யவேண்டும்.

### தியாகம்

தன் உடற் சக்தியும், உயிர் சக்தியையும் பூரணத்துவம் அடைந்த பின்பே, மனிதன், தன்னுடைய உடலினும் உயிரினும் உயர்ந்த ஒரு நோக்கத்திற்காக தன்னை தியாகம் செய்துகொள்ள முடியும். பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்ட வாழ்வை நாம் நடத்த விரும்பினால் மனுஷ சமூகத்தின் நன்மைக்காக நாம் நமது சக்திகளை அர்ப்பணம் பண்ணுவதுடன், அத்தகைய அர்ப்பணத்தாக நம்முடைய இயற்கை சக்திகளை பூரணத்துவமான விருத்தி முகத்திற்கு கொண்டு வரவேண்டியது நமது கடமையாகும்.

# மதுரை ஜில்லா முதலாவது சுயமரியாதை மகாநாடு.

## தலைவர் தோழர் பி. லக்ஷ்மிநரசு பி. ஏ. பி. எல். அவர்களின் சொற்பொழிவு.

—:)0(:—

உண்மையான பரோபகாரத்திற்கு ஒரு மனிதன் தன்னை தயார் செய்து கொள்ள வேண்டுமானால், அவன் தன்னுள் அமைந்து கிடைக்கும் சக்திகளை எல்லாம் விருத்தி செய்து கொள்ளுவதற்காக தன்னை தியாகம் செய்துகொள்ளவேண்டியது இன்றியமையாததாயிருக்கிறது.

சமூக ஒற்றுமைக்கும் வளர்ச்சிக்கும் அனுகுணமாக ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய இயற்கை சக்திகளை பரி பூரணமாக விருத்தி செய்து கொள்ளுவதே உண்மையான பொது நலமாகும். நாட்டிலும், ஜனசமூகத்திலும் தனது அந்தஸ்துக்குரிய கடமைகளை ஒருவன் சரிவர நிறைவேற்றுவதே அவன் அடைந்திருக்கும் தன் வளர்ச்சியின் இயற்கையானபலனாகும். மனிதனும் சமூகமும் ஒன்றுக்கொன்று இணைபிரியாத சம்பந்த முள்ளவை. முன்னேற்ற மடைய வேண்டுமென்ற உணர்ச்சியானது சமூக வளர்ச்சிக்கு என்றும் முரண்பாடாய் இராது. சேவையின் மூலமாகவல்லாது மனிதன் பூரணத்துவத்தை அடைய முடியாது. தன் சொந்த முன்னேற்றத்திற்காக பாடுபடுவதோடுகூட மனுஷ சமூகத்தின் விசேஷ நன்மைக்காகவும், உழைப்பதே மனிதவாழ்வின் பெருமையைக்காட்டுகிறது. மனிதன் முன்னேற்ற உணர்ச்சியானது அவனுக்குண்டாகும் சுதந்தரவேட்கையின் மூலமாக வெளிப்படுகிறது.

### சுதந்திரம்

கார்லைல் ஞானியார் கூறுவதாவது:—

"சுதந்தரம் பெறுவதே நமது உலகவாழ்வின் ஒரு நியதி. இவ்வுலகில் மக்களிடை ஏற்படுகின்றயாச்சரியங்களும் முயற்சிகளும், துயரங்களும் விடுதலை ஒன்றையே நாடி நிற்கின்றன" சுதந்தரமே மனிதனின் பெரிதான ஐஸ்வரியம். சுயேச்சையினாலேயே மக்களின் வளர்ச்சியானது சாத்தியமாகின்றது. வியாதியினின்றும், கொடுமையினின்றும், விடுதலைபெறுவதே நாகரிகத்தின் ஆரம்பமாகும். சுதந்தரம் ஒழியுமானால் அதோடு சகலமும் ஒழிகின்றது. சுதந்தரம் எஞ்சி நிற்பது ஒன்றுமில்லை. நாகரீகமடைந்த மனிதனுக்கு ஒரு முக்கிய சின்னமானது சுயமரியாதையே. யாதொரு விதமான ஆதிக்கத்திற்கும் கட்டுப்பட்டிருக்கும் வரையில் ஒரு மனிதனுக்கு சுதந்தரமாவது சுயமரியாதையாவது இருக்கமுடியாது. ஒருவன் தனித்திருப்பதினால் சுதந்திரம் பெறமுடியாது. பிறருடன் சகோதரவாஞ்சை பாராட்டுவதன் மூலமாகவே சுதந்தரம் பெற முடியும். எல்லா ஜீவராசிகளிலும் (தனியாக விட்டால்) மனிதன் ஒருவனே திக்கற்றவனாக நின்றான். அவன் தன் சகபாடிகளுடன் சுதா உறவும் பகையும் கொள்ளும் ஒரு சமூக ஜந்து. ஹாசிலிட் என்னும் வியாச கர்த்தா சொல்லுகிறார்: பிறரை நேசிப்பதே உண்மையான சுதந்தர வேட்கையின் அறிகுறி. அதிகாரவேட்கை ஆணவத்தின் அறிகுறி. சுதந்தரம் பெற்ற ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய சொந்த நன்மையை தன் மனப்போக்கின் படியே அடைய உத்தேசித்திருக்கிறானாயினும் தான் பழகக்கூடிய ஒவ்வொருவருடைய நோக்கத்தையும் தன்மைக்கேற்றவாறு ஒழுங்குபடுத்திக் கொண்டாலல்லாமல் தன்னுடைய நோக்கத்தை அடையமுடியாது. ஆதலால் அடிமைகளின் மத்தியில் ஒரு சுதந்தர புருஷன் வாழமுடியாது தன்னை சுற்றியுள்ளவர்களை தன்னைப் போல் சுதந்தரிகள் ஆக்க அவன் அவசியம் முயற்சி செய்யவேண்டும். நிபந்தனைகளையும், கட்டுப்பாடுகளையும் ஒழித்து நிர்பயமாக பகுத்தறிவின்படி ஒழுகுவதும், எதேச்சாதிகாரத்தின் ஆதிக்கத்தினின்றும் விடுபடுவதும், அருவருப்பான கட்டுப்பாடுகளை முறித்து உயர்ந்த ஒழுக்க முறைப்படி தன் காரியங்களை நடத்திக்கொள்வதும் சுதந்திரத்தின் உயரிய தோற்றங்களாகும். மனிதனின் பகுத்தறிவினால் ஏற்படுகிற தடைகளைத்தவிர மற்றதடைகளெல்லாம் மனிதனின் சுதந்தரத்தை பாதிப்பவைகளே. அவைகள் அடிமைத்தனத்தை உண்டாக்குகின்றன. எது சரி, எது தப்பு என்று அறிந்துகொள்வதற்கும், எது சத், எது அசத் என்று தெரிந்துகொள்வதற்கும் ஒருவனுக்கு ஏற்படும் சக்தியே உண்மையான சுதந்தரம். ஒருமனிதனின் செய்கை இன்னொருமனிதனின்செய்கையின் நகலாகவாவது அல்லது அபிப்பிராயத்தின் எதிரொலியாகவாவது இருக்குமானால் மனித சமூகத்தில் எத்தகைய முன்னேற்றமும் இல்லாமல் போய்விடுகிறது. சுயமாக யோசித்து தன் வாழ்க்கைக் காரியங்களை நடத்தும் மனிதன் மற்ற மனிதர்களுக்கெல்லாம் உதாரணமாயிருக்கிறான்; அவன் செய்யும் காரியம் சரியாக இருக்குமானால் மற்றவர்களுக்கு அது முன்மாதிரியாக இருக்கிறது. தப்பாக இருக்குமானால் அது எச்சரிக்கையாக இருக்கிறது. பயங்கொள்ளித்தனமும் குருட்டு நம்பிக்கையும், அர்த்தமற்ற அனுஷ்டானமும் சுதந்தரத்தை வளர்ப்பனவல்ல. சுதந்தரமென்னும் கருத்தில் ஒரு உண்மையும், கடமையும் அடங்கிக்கிடக்கிறது. அபிப்பிராய சுதந்தரத்திற்கும், பேச்சு சுதந்திரத்திற்குமுள்ள சகல தடைகளையும் நீக்க, ஒவ்வொருவர்களும் முயற்சிக்கவேண்டும்.

### குருட்டு நம்பிக்கை.

குருட்டு நம்பிக்கைகள் ஒழிவதும், விஷயங்களை அடிப்படையாகக்கொண்ட புது எண்ணங்கள் உற்பத்தியாவதுமே, நாகரீக வளர்ச்சியின் தத்துவங்களாகும். பழங்காலத்தவர்களுடைய குறுகிய நோக்கங்களையும், சுழுபிள்ளைத்தனமான கட்டுக்கதைகளையும் பகுத்தறிவாளர்கள் வெறுக்கிறார்கள். தீர்க்கதரிசிகளிடமிருந்தோ, முனிபுங்கவர்களிடமிருந்தோ, குறிகாரனிடமிருந்தோ, வேதவெளியீட்டிலிருந்தோ, பகுத்தறிவாளர்கள் தற்போது எத்தகைய உண்மையையும், எதிர்பார்ப்பதில்லை. பொய்க்கதைகளையும், சாஸ்திரப் புரட்டுகளையும், அவர்கள் நம்புவதில்லை. ஒரு பெரிய மனிதனின் பெயராலேயோ, அல்லது ஸ்தாபனத்தின் பெயராலேயோ, மட்டும் சொல்லப்படும் சங்கதிகளையோ கொள்கைகளையோ, அவர்கள் ஒப்புக்கொள்வதில்லை. ஒருவருடைய பெயருக்காக ஒருவன் யாதானும் ஒருவிஷயத்தை ஒத்துக்கொள்ளவேண்டுமென்பது, மனிதருடைய பகுத்தறிவையே சிதைப்பதாகும்.

நவீன நாகரீகம், விஞ்ஞான அறிவையும், சாஸ்திர ஆராய்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது இது பலவித குருட்டு நம்பிக்கையும், அர்த்தமற்ற அனுஷ்டானமும், ஆதிக்கம்கொண்ட இடங்களில் எல்லாம் தத்துவமுறையும் விஞ்ஞான அறிவும் தலை சிறந்து விளங்குமானால் அதுவே பகுத்தறிவு வாழ்க்கை (Rational Life) அதுவே வாழ்க்கையின் உண்மையான சின்னமாகும்.

### (விஞ்ஞானம் சைன்ஸ்.)

விஞ்ஞான முறையானது பகுத்தறிவையும், பிரத்தியட்ச அனுபோகத்தையும் ஆதாரமாகக்கொண்டது. அந்த முறையில் சந்தேகத்திற்கு இடமில்லை. சரியான சாட்சியத்தை அடிப்படையாகக் கொண்டேதான் விஞ்ஞான தத்துவங்கள் முடிவுகட்டப்படுகின்றன. அந்த முறை விருப்பு வெறுப்பற்றது.

நமது மூதாதைகள் அறியாத

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

## மதுரை ஜில்லா முதலாவது
# சுயமரியாதை மகாநாடு.

### உபசரணை சபைத்தலைவர் தோழர்
## எஸ். தியாகராஜன் அவர்களின்
### வரவேற்புப் பிரசங்கம்.

சென்ற 16-4-33ல் நடைபெற்ற மதுரை ஜில்லா சுயமரியாதை மகாநாட்டின் உபசரணைத் தலைவர் தோழர் எஸ். தியாகராஜன் அவர்கள் சொற்பொழிவு வருமாறு:—

தோழர்களே!

உபசரணை சபையாரின் அழைப்பிற்கிணங்கி இங்கு கூடியிருக்கும் உங்களனைவரையும் பெருமகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன்.

உங்கள் வரவு நல்வரவாகுக.

தமிழ் நாட்டின் சரித்திரத்தில் சிறப்புவாய்ந்த இம் மதுரைமாநகரில் முதன் முதலாகக் கூடும் சுயமரியாதை மகாநாடு இதுவே. புராணக் கொடுமையும், ஜாதித்திமிரும், மூடப்பழக்க வழக்கங்களும் பிற பல கொடுமைகளும் தலைவிரித்துத்தாண்டவமாடும் இதுசமயம், இம்மகாநாடு எதிர்ப்புகளுக்கிடையே தலைதூக்கி நிமிர்ந்து சீரும் சிறப்புடன் கூடியிருக்கிறது. இவ்வியக்கத்தின் மீதுள்ள பற்றுதலால் இங்கு வந்து ஆதரவு காட்டிச் சிறப்புவிக்கும் உங்களுக்கு மீண்டும் ஒரு முறை நல்வரவு கூறுகின்றேன். நம்மியக்கத்தின் மீதுள்ளபற்றுதலால் வாலிப உணர்ச்சியுடன் இம் மகாநாட்டிற்கு தலைமை வகிக்க இசைந்து இவ்விடம் வந்திருக்கும் தோழர் பி. லட்சுமிநரசு பி. ஏ. அவர்களை நீங்கள் பெரிதும் பாராட்டி மகிழ்ச்சிப் பெருக்குடன் அன்னார் உபதேசங்களைப் பின்பற்றுவீர்களென்று நம்புகிறேன்.

### கல்வி

நமதியக்கம் சுமார் 7வருஷங்களாக தமிழ்நாட்டில் குன்று வளர்ச்சியுடன் ஓங்கி நிமிர்ந்து வளர்ந்துவரும் தன்மையிலிருந்தே சுயமரியாதை இயக்கத்தின் உண்மையையும், வலிமையையும், மக்கள் ஒருவாறு உணர்ந்து பின்பற்றுகின்றனர் என்பதை நிரூபித்துக்காட்டுகின்றது. இச்சீரிய இயக்கம் பற்பல துறைகளில் தம் தம் தொண்டுகளை ஆற்றும்படி மக்களைத்தூண்டிவருகிறது. உதாரணமாகஇதர நாடுகளிலெல்லாம் 100க்கு 100 பேர் ஆணும் பெண்ணும் படித்திருக்க நம் நாட்டில் மட்டும் பழம் பெருமை பேசி, வீண்பெருமை கொண்டாடி 100க்கு 7பேர் மட்டும் படித்தோராயும் மற்றையோரெல்லாம் ஒன்றும் அறியாது இன்னும் இருட்டிலேயேஆழ்ந்து கிடப்பவராக இருப்பது நம் நாட்டிற்குஎத்தகைய இழிவைத்தருகின்ற தென்பதை ஒவ்வொருவரும்கவனித்தல் அவசியமல்லவா? பெண்களுக்குகல்விதேவையில்லையென்று ஒதுக்கப்பட்டது, மக்கள்சமூகத்தின் சரி பகுதியை அஞ்ஞானக் கோட்டையில் அடைத்து அடிமைப்படுத்தியதாகும். பொய்யும், புனைசுருட்டும் நிறைந்த புராண அடிமைக் கல்வியை அகற்றி தொழில்களை விருத்திசெய்யும் மக்களுக்கு அவசியமான நூதன சாஸ்திரக்கல்வியும், அரசியல் கல்வியும் இவை போன்ற பயன் தரும் கல்வி பலவும் அளிக்கப்படவேண்டும்.

### தீண்டாமை

தீண்டாமை யென்பது ஒரு சமூகத்தை மாத்திரம் பிடித்த நோயல்ல. எல்லா சமூகங்களையும் பிடித்தே யிருக்கிறது. இந்துக்களை மட்டும் பற்றியநோயல்ல! மற்ற மதத்தினரும் இந்நோயில் கிடந்து உழலுகின்றார்கள். பொதுவாக இந்திய ஜன சமூகமே இவ்வியாதியின் வாய்ப்பட்டுத் தவிக்கின்றது. ஜாதிக்கொடுமையை ஒழிப்பதற்கு ஏனைய ஜாதிமத வாலிபர்கள் முன் வருவதற்கு இதுவே காரணம், ஒவ்வொரு இந்தியனும் ஒவ்வொரு அளவில் தீண்டப்படாதவனாகவே கருதப்படுகின்றான். தீண்டாமையை விலக்கவேண்டுமென்று வாய் வேதாந்தம் பேசும், அரசியல் தலைவர்கள் வருணாச்சிரமத்தை ஒழிக்க ஒருப்படுவதில்லை. வருணாச்சிரமமின்றி தீண்டாமை ஏது? வருணாச்சிரமத்தால் ஏற்பட்ட விளைவுகளில் தீண்டாமை ஒன்று. தீண்டாமையைப் போக்க வேண்டுமென்று உண்மையாக உணருகின்றவர்கள், தீண்டாமையின் உயிர் நிலையாகிய வருணாச்சிரமத்தை தகர்த்தெறியட்டும். வருணாச்சிரமம் ஒழியாமல் எக்காலத்தும் தீண்டாமை ஒழியாது, மதத்தின் பேரால் நம் நாட்டில் இழிவு படுத்தப்படும் கொடுமை போல் இவ்வுலகில் வேறு எந்நாட்டிலும் இல்லையென்று உறுதியாகச் சொல்லலாம். எல்லோரிடத்தும் யாதொரு ஜாதி மதகிற பேதமின்றி வசூலிக்கப்படும் ஊதியமும் வித்தியாசங்களின்றி, உழைப்பையுமடைந்து, பொது நன்மைக்கென்று, பொது ஸ்தலங்களெனும் பெயரால் நிறுவப்பட்ட பற்பல ஸ்தாபனங்களில் பொது மக்களில் பெரும்பாலோரை, புறக்கணித்து,

தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க.

## தோழர் ஈ. வெ.
## இராமசாமியின்
## சுற்றுப்பிரயாணம்.

### 17—4—33.

காலை மதுரை தோழர் எ. ஆறுமுகம் அவர்கள் வீட்டிலிருந்து தோழர்கள் ஈ. வெ. ராமசாமி, என். பி. காளியப்பன், சு. ப. வீரய்யா, அவரது மனைவியார், வெங்கிடுசாமிப்பாவலர், கடம்பன்குளம் ப. நாராயணன் முதலியவர்களுடன் அருப்புக்கோட்டைக்குப் பிரயாணமானார்கள். அங்கு தோழர் வீரய்யா அவர்கள் வீட்டில் காலை, பகல், மாலைவிருந்துநடந்தது.

மாலை 5 மணிக்கு அருப்புக்கோட்டை புளியம்பட்டி ஆதிதிராவிட போர்டு பாடசாலையாரால் ஒரு வரவேற்பு நடந்தது. அங்கு சுமார் 1 மணி நேரம் வரவேற்புக்கு பதில் அளிக்கும் முறையில் பேசினார். பிறகு வீரய்யா அவர்கள் அங்கு சக்கிலித் தெருவு என்பதிலுள்ள எல்லா பிள்ளைகளையும் டவுன் உயர்தரப் பாடசாலைக்கு அனுப்பும்படியும் அப்படி அனுப்பப்படும் பிள்ளைகளுக்கு பகல் சாப்பாடுதான் தன் சொந்த செலவில் ஏற்பாடு செய்வதாயும் ஒப்புக்கொண்டார். உடனே அந்த வீதியர்கள் எல்லோரும் கூட்டம்கூடி 5 அல்லது 6 வயதுக்கு மேற்பட்ட எல்லாக் குழந்தைகளையும் பள்ளிக்கு அனுப்புவதாய் ஒப்புக்கொண்டார்கள்.

பிறகு மாலை 6 மணிக்கு அருப்புக்கோட்டை சொக்கலிங்கபுரத்தில் தோழர் வீரய்யா அவர்களால் நடத்தப்படும் ஆதிதிராவிட இரவு பாடசாலையின் 2வது வருட ஆண்டு விழா முன் ஏற்பாடு செய்திருந்தபடி தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் நடந்தது. அதுசமயம் தோழர்கள் எட்மாஸ்டர் மல்லையா, என். பி. காளியப்பன், கருப்பையா ஆகியவர்கள் பேசினார்கள். தோழர் வீரய்யா வந்தனம் கூறி மாலையிட்டார். கூட்டத்திற்கு டவுன் மேஜிஸ்ட்ரேட், சப் ரிஜிஸ்டார், சப் இன்ஸ்பெக்டர் மற்றும் பிரபலஸ்தர்களும் சுமார் 1000 பேர்கள் வந்திருந்தார்கள். கூட்டம் 9 மணிவரை நடந்தது. அன்றிரவு கழிந்ததும்,

### 18—4—33.

மறுநாள் காலை தோழர்கள் ஈ. வெ. இராமசாமி, காளியப்பன் முதலியவர்கள் கல்லூரணி முத்துராமலிங்க புரத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அங்கு மாலை 7 மணிக்குத் தோழர் ஜான் ரெட்டியார் தலைமையில் ஒரு மீட்டிங் நடந்தது. அதில் தோழர்கள் கடம்பன்குளம் நாராயணன், காளியப்பன் ஈ. வெ. இராமசாமி ஆகியவர்கள் பேசினார்கள். கூட்டம் இரவு 11 மணிக்கு முடிவு பெற்றது.

### 19—4—33.

மறுநாள் காலையில் அங்கிருந்து அருப்புக்கோட்டைக்கு வந்தார்கள். அங்கு மாலையில் 5 மணிக்கு அருப்புக்கோட்டை தேவாங்க ஸ்கூல் 6வது ஆண்டுவிழாவுக்கு விஜயம் செய்தார்கள்.

### மாலைப் பொதுக்கூட்டம்.

அருப்புக்கோட்டை பெரிய நகரக் கொட்டகையில் ஒரு பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்கு மாலை 7 மணிக்கு கூட்டம் ஆரம்பம் செய்யப்பட்டிருந்தது. அக்கூட்டத்திற்கு இதுவரை சமீப காலத்தில் அந்த ஊரில் கூடியிராத அளவு அவ்வளவு ஜனங்கள் சுமார் 3000 பேர்கள் ஆண்களும் பெண்களுமாய் கூடி விட்டார்கள் கொட்டகை இடம்பிடிக்கவில்லை. வெகு பேர் வெளியில் இருந்த வண்ணமே திரும்பி விட்டார்கள். கூட்டத்திற்கு கடம்பங்குளம் தோழர் நாராயணன் அவர்கள் தலைமை வகித்தார். தோழர் காளியப்பன் முதலில் பேசினார். பிறகு தோழர் ஈ. வெ. ராமசாமி 2 மணி நேரம் பேசினார். பிறகு ஜான் தேவமணி அம்மாள் பேசினார். இரவு 9-30 மணிக்கு கூட்டம் இனிது முடிவு பெற்றது.

### 20—4—33.

மறுநாள் காலை விருதுபட்டி மார்க்கம் தோழர் ராமசாமி ஈரோட்டிற்குப் பிரயாணமானார். தோழர் காளியப்பன் காரைக்குடிக்கு மதுரை மார்க்கம் பிரயாணமானார்.

### அருப்புக்கோட்டை.

தேவாங்கர் ஸ்கூல்மாணவர்சங்க6வது வருடப்பூர்த்தி விழா அருப்புக்கோட்டை ஸ்பெஷல் டிப்டி கலெக்டர்தோழர் பி. ராமதாஸ்,பி.ஏ. அவர்கள் தலைமையில் சிறப்பாகத் துவக்கப்பட்டது. சப் ரிஜிஸ்டார் எ. சோமசுந்தரம் அவர்கள் "தாய்மொழி" என்பதுபற்றியும், ஆசிரியர் செல்லம் "மாணவர்களின் பெற்றோர் பொறுப்பு" என்பதுபற்றியும் பேசினார்கள். பிறகு மாணவர்களால் சமரசகான்பரன்ஸ் என்பதாக ஒருசிறுநடிப்புவிளையாட்டுநடைபெற்றது. அந்நடிப்பில் நமதுநாட்டில் ஜாதிமத பேதங்களால் எந்த காரியங்களும் செய்ய முடியாமல் போய் விட்டது என்பது பற்றியும் சாதி மதங்கள் உள்ள வரையில் எந்த விதமான முற்போக்கான காரியங்களும் செய்ய முடியாதென்றும் தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டது. ஆண்டு விழாவிற்கு தோழர்கள் ஈ. வெ. ராமசாமி, ஜமீன் தாசில்தார், "நாடார்குல மித்திரன்"பத்திராதிபர் முத்துநாடார், யூனியன் போர்டு தலைவர்காமாட்சிசெட்டியார், மாஜி தலைவர் சுப்பிரமணிய முதலியார் முதலிய அநேகர்கள் விஜயம் செய்திருந்தார்கள். கடைசியாக தலைவர் டிப்டிகலெக்டர் ராமதாஸ் அவர்கள் பிள்ளைகளுக்கு பரிசளித்து அருமையான உபன்யாசம் செய்தார். இவற்றில் எட்மாஸ்டர் தோழர் மல்லய்யா அவர்கள் முயற்சி பாராட்டத் தக்கது.

குடி அரசு.

ஈரோடு 1933 ஏப்ரல் மீ 23-உ

## ரஷ்ய நீதி.

—:0:—

ரஷ்ய தேச ஆட்சியின் கொள்கையை உலகம் முழுவதுமே வெருக்கப்படவேண்டும் என்கின்ற எண்ணத்தோடு பிரசாரம் செய்து வருவதாய் காணப்பட்டுவருகின்றது. எது போலவென்றால் சுயமரியாதை இயக்கக் கொள்கைகள் பெரிதும் பார்ப்பனர்களுக்கு விரோதமாய் இருந்ததால் பார்ப்பனர்களின் செல்வாக்கால் அது ஒரு காலத்தில் எப்படி எல்லா மக்களாலும் வெறுக்கப்பட வேண்டுமென்று பிரசாரம் செய்வதாய் காணப்பட்டதோ அதுபோல்.

ரஷியா ஆட்சிக்கொள்கையானது சுருக்கமாகச் சொல்லப்படவேண்டுமானால் அது உலக பணக்காரர்களுக்கு விஷம் போன்றதும் ஏழை மக்களுக்கு "சஞ்சீவி" போன்றதுமாகும். இன்றைய உலகம் பணக்காரர்கள் கையில் சிக்குண்டு, பணக்காரர்களுக்கு அடிமைப்பட்டு, பணக்காரர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருப்பதால் பணக்காரர்கள் 100க்கு 10-பெயர்களேயாயினும், அவர்களே உலக மக்களாகக்காணப்படுவதும், ஏழைமக்கள் 100க்கு 90-பேர்களாயினும் அப்படி ஒரு கூட்டம் இருப்பதாக உலகுக்கு ஞாபகத்துக்கே வரமுடியாமலும் இருந்துவருகின்றது.

ஆனால் ரஷியாவிலோ அப்படிக்கில்லாமல் பணக்கார ஆதிக்கம் ஒழிந்து ஏழைமக்கள் பணக்காரர்கள் கையினின்று விடுபட்டு சுதந்திரம்பெற்றுஏழை--பணக்காரன், முதலாளி-தொழிலாளி, என்கின்ற வேற்றுமை இல்லாமல் எல்லோரும் ஒரே இனம் (அதாவது மனித இனம்) என்கின்ற தலைப்பில் எல்லோரும் ஓர் குடும்பமக்களாய் வாழ்ந்துவருகிறார்கள்.

இந்த நிலை பணக்காரர்கள் புரோகிதர்கள் ஆதிக்கமுள்ள நாடுகளுக்கு எதிரான நிலையானதினால் பணக்கார உலகம் ரஷியாவை தூற்றவும், பழிக்கவும், வெறுக்கவும், விஷமப்பிரசாரம் செய்யவும் ஆன காரியங்களில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதில் அதிசயமொன்றுமில்லை. இந்த நான்கைந்து வருடகாலமாக ரஷியாவைப்பற்றி பலவாறு அதாவது ரஷிய மக்களுக்குபோதிய ஆகாரமில்லையென்றும், கோடிக்கணக்கான மக்கள் பட்டினியால் வாடி மடிகின்றார்கள் என்றும், கொடுங்கோன்மை முறையால் ஆளப்பட்டு வருகின்றதென்றும், அந்நாட்டு ஆட்சியில் நீதி என்பதே கிடையாது என்றும், மற்றும் பலவிதமாக அதைத் தூற்றிப்பழித்து, இழித்து பிரசாரங்கள் செய்யப்பட்டுவந்தன. அங்குள்ள நன்மைகள், மேன்மைகள் எதுவாயினும்அவற்றை பரிசுத்தமாய் வடிகட்டினாற்போல மறைத்தும்வந்தன. எப்படி இருந்தும், எவ்வளவு விஷமப் பிரசாரம் செய்தும், சூரிய வெளிச்சத்தை உள்ளங்கையால் மறைக்க முடியாதுபோல ரஷியா நிலைமை இப்போது உலக மக்களுக்கு வெளியாகின்றது. வரவர ரஷிய சேதிகளின் உண்மையை வெளிப்படுத்தும் விஷயத்தில் ஜனங்களுக்குள்ள பயம் நீங்கியும் வருகின்றது. அதுமாத்திரமல்லாமல்இந்த 4, 5 மாத காலமாய் ரஷிய சேதிகளை வெளிப்படுத்துவது ஒரு நாகரீகமாயும், ரஷிய சேதிகளைப் பற்றிப் பேசுவது ஒரு சத்கால க்ஷேபமாகவும் ஏற்பட்டுவிட்டது. இதன் பயனாய் இப்போது ரஷிய சேதிகள் இல்லாத பத்திரிகைகளும், ரஷியா பிரஸ்தாபமில்லாத பிரசங்கங்களும் மிகமிக அருமையாகப்போய்விட்டது என்பதை நாம் எடுத்துக்காட்டவேண்டியதில்லை. ஆகவே ரஷிய பூச்சாண்டி திரை நீக்கப்பட்டு வெட்டவெளிச்சத்தில் வெள்ளைக் கண்ணாடி மூலம் பார்க்கக்கூடியதாக இருந்து வருகின்றது.

சமீப காலத்தில் ரஷியாவைப் பற்றி ஒரு பரபரப்பு இருந்து வந்தது நேயர்களுக்கு தெரிந்திருக்குமென்றே எண்ணுகின்றோம்.

அதாவது ரஷிய ஆட்சியானது சில பிரிட்டிஷ் பிரஜைகளின் மீது குற்றம் சாட்டி சிறை பிடித்து வைத்திருப்பதாயும், அதுபழிவாங்கும் எண்ணத்துடன் கற்பனையாய் செய்யப்பட்டிருப்பதாயும், ஆனதினால் ரஷியாவுடன் பிரிட்டிஷ் எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்ளக் கூடாதென்றும், வியாபாரத்துறையில் ரஷிய வியாபாரத்தை நிறுத்தி அந்தச் சரக்கு பிரிட்டிஷாருக்குள் வராமல் தடுத்துவிட வேண்டுமென்று பல புதிய சட்டங்களையும் செய்தும் அதன் மூலம் ரஷிய வியாபாரத்தை பகிஷ்கரிக்கவும் முயற்சித்து வந்தது யாவருமறிவார்கள்.

விஷயம் என்னவென்றால் ரஷியாவில் இயந்திரத்தொழில்முறை விருத்திக்கு அனுகூலமான மின்சார விசை நிலையங்கள் கொஞ்ச காலமாக ஒன்றன்பின் ஒன்றாய் பழுது ஆய்க்கொண்டு வந்ததுடன் அதனால் ரஷியத் தொழில் முறை கெட்டு பெரிய நஷ்டம் ஏற்பட்டும் வந்தது. ரஷ்ய ஆட்சி நிர்வாகிகள் இதைப்பற்றி சந்தேகப்பட்டு அதன் காரணத்தைக்கண்டுபிடிக்க முயன்றதில் சில பிரிட்டிஷ்கம்பெனிக்காரர்களின் நன்மைக்காக ரஷ்யாவிலுள்ள சில பிரிட்டிஷ் இஞ்சினீர்கள் சில ரஷ்யர்களுக்கு லஞ்சம் கொடுத்து அவர்களைக் கைவசப்படுத்தி அதன் மூலம் அங்குள்ள மின்சார நிலையங்களுக்குக் கெடுதியை விளைவித்து வந்தார்கள் என்பதாகக்கண்டு பிடிக்கப்பட்டு அந்த பிரிட்டிஷ் இஞ்சினீயர்களையும் அதற்கு உளவாயிருந்த ரஷ்ய சதிகாரர்களையும்கண்டுபிடித்துச் சிறை செய்து அவர்கள்மீது சட்டப்படி நடவடிக்கை நடத்த ஏற்பாடு செய்திருந்தார்கள். இந்த விஷயத்தை பிரிட்டிஷ் முதலாளி வர்க்கம் அறிந்து இதனால் தங்களுக்குப் பெரிய உலகப்பழியும் அவமானமும் வந்து விட்டதே என்று கருதி இச்செய்கைகளை மறைக்க ஆசைப்பட்டு பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மூலம் ரஷ்யரை மிரட்டிப் பார்த்ததல்லாமல் ரஷ்யாவின் மீது பழியும் சுமத்தினார்கள்.

ஆனால் ரஷ்யர்கள் இவை எதற்கும் பயப்படாமல் தைரியமாய் அது விஷயத்தில் தாங்கள் செய்யவேண்டிய காரியத்தைச்செய்து உலகத்தின் முன்பு தங்களுடைய திறனையும், தைரியத்தையும் நியாயம் வழங்கும் முறையையும் காட்டிக்கொண்டார்கள். எப்படி என்றால் இந்த சதிக்குற்றத்தில் சம்மந்தப்பட்ட 18-குற்றவாளிகளில் பிரிட்டிஷ்குற்றவாளிகள் 6-பெயர்கள். (இவர்கள் ஆறுபேர்களும்பிரிட்டிஷ் இஞ்சினீயர்களாவார்கள்.) மீதிரஷிய குற்றவாளிகள் 12பேர்கள்.இந்த பதினெட்டு பெயர்களையும்நீதிமன்றத்தில் நிறுத்தி வெளிப்படையாய் எதிரிகளுக்கு தகுந்த வக்கீல்களை வைத்துவாதாட சந்தர்ப்பம் கொடுத்து அந்த வக்கீல்களுக்கு யோசனைசொல்லவும் விசாரணையின் யோக்கியதையை கவனிக்கவும் தக்க எண்ணம் பிரிட்டிஷ் பிரதிநிதிகள் வந்து கோர்ட்டில் ஆஜராக சம்மதித்தும் விசாரணை நடத்தி வந்தார்கள். இந்த விசாரணையால்பிரிட்டிஷ் இஞ்சினீயர்களான குற்றவாளிகள் சிலர் தங்கள் குற்றங்களை தங்கள் வாய் மூலமாக ஒப்புக்கொள்ளவும் நேர்ந்து விட்டதுடன் சாக்ஷிகள் மூலம் குற்றங்கள் தாராளமாய் ருஜுவும் ஆகிவிட்டன.

இதன் மீது ரஷ்ய நீதிபதியானவர் பிரிட்டிஷ் குற்றவாளிகள் 6 பேர்களில் ஒருவருக்கு விடுதலையும் இருவருக்கு முறையே 3 வருஷம் 2 வருஷம் வீதம் தண்டனையும், மூவருக்கு தேசப்பிரஷ்டமும் செய்து விட்டு, ரஷ்யக் குற்றவாளிகள் பன்னிருவர்களில் ஒருவரை விடுதலை செய்து விட்டு பாக்கி பேர்களை 10 வருஷம் 8 வருஷம் 2 வருஷம் 3 வருஷம் வீதமும் இதில் ஒரு பெண்ணும் இருந்ததால் அவருக்கு 1½ வருஷமும் தண்டனை விதித்தார்கள். அப்பீலுக்கும் இடம் கொடுத்திருக்கிறார்கள்.

இதிலிருந்து ரஷ்ய ஆட்சி நீதி வழங்கும் முறையை ஒருவாறு உணரலாம். இந்தக் குற்றங்களை சாதாரண குற்றம் என்று யாரும் சொல்லிவிட முடியாது. இதன் உள் எண்ணமும் இதனால் ஏற்படக்கூடிய நஷ்டமும் எவ்வளவு கடுமையானது என்பதை நாம் விவரிக்க வேண்டியதில்லை. இப்படிப்பட்ட குற்றம் ரஷ்யர்கள் பிரிட்டிஷாருக்குள் வந்து செய்திருந்தால் அது எப்படிப்பாவிக்கப்பட்டு எவ்வித தண்டனை அளிக்கப்பட்டிருக்கும் என்பதை அவரவர்கள் சொந்த முறையில் யோசித்துப்பார்த்தால் தெரியவரும். அப்படிப்பட்ட இந்த கடுமையான சதிக்குற்றத்திற்கு இருவருக்கு 2-வருஷம் 3-வருஷம்தண்டனையும்மற்றமூவருக்கு தங்கள்நாட்டைவிட்டுஅவர்களது சொந்த நாட்டுக்குப் போய் விடும்படியும் தீர்ப்புச்செய்திருக்கிறார்கள் என்றால் இதற்கு மேலானகாருண்யமும், அருளுமுள்ள நீதி இந்த உலகத்தில் எங்காவது கிடைக்க முடியுமா? என்பதை யோசித்தால் ரஷ்ய நீதியின் பெருமை விளங்கும். இந்த நீதி "ராம" ராஜ்யத்திலோ அல்லது சுயாட்சி தேசத்திலோ கூட எதிர்பார்க்க முடியுமா என்பதும யோசிக்கத்தக்கதாகும்.

இது இப்படியிருக்க இதன் உண்மையையும் யோக்கியதையையும் பார்த்து பிறகு ஒரு முடிவுக்கு வரலாம என்கின்ற யோசனை சிறிதுமின்றி வேண்டுமென்றே அவசரப்பட்டு ரஷியர்கள் மீது உலக மக்களுக்கு வெறுப்பு ஏற்படும்படி தூற்றப் பழித்து சுல பகிஷ்கார முறைகளைகையாடினதும் பிரிட்டிஷாரின்புத்திசாலித்தனத்தையோ, ராஜ தந்திர முறையையோ நல்ல எண்ணத்

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

தையோ காட்டுவதாக இல்லாமல் போனது குறித்து யாரும் வருந்தாமல் இருக்க முடியாது.

எப்படியிருந்த போதிலும் இந்த கட்டுப்பாடில் விஷமப் பிரசாரத்தின் பயனாய் ரஷியாவுக்கு நன்மையே ஏற்பட்டது என்றுதான் சொல்லவேண்டும். எப்படியெனில் ரஷியாவின் நீதியை உலகம் அறிய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது என்பதேயாகும்.

நிற்க ரஷியாவின் மீது எப்படியாவது ஒரு சமயத்தில் ஏதாவது ஒரு சாக்கை வைத்து ("நீ இல்லாவிட்டாலும் உன் தகப்பனாவது செய்திருப்பான்" என்கின்ற ஆட்டுக்குட்டி-ஓநாய்க் கதையைப் போல்) ஒரு குற்றம் சுமத்தி அதனிடம் வம்புச்சண்டைக்குப் போயாவது ரஷியாவில் இன்று நடைபெறும் பொதுவுடமை ஆட்சியை-ஏழை மக்களுக்கும் தொழிலாளிகளுக்கும் அனுகூலமான ஆட்சியை ஒழித்து மற்றநாடுகளில் நடைபெறுவதுபோன்ற பணக்கார ஆட்சியை ஏற்படுத்தவேண்டும் என்கின்ற எண்ணம் இந்த உலகில் இன்று பிரிட்டிஷாருக்கு மாத்திரமல்லாமல் எல்லா தேசத்து ஆட்சிக்காரர்களிடமும் இருந்து வருகின்றது. அதற்கு ஆங்காங்குள்ள முதலாளிகளாலும், பாதிரி, புரோகிதர்களாலும் தண்ணீர்விட்டு பாதுகாத்தும் வரப்படுகின்றது. ஆனாலும் ஏழைமக்கள் சரீரத்தில் பாடுபட்டு தொழில் செய்து வாழும் மக்கள் கண் விழித்து சுயமரியாதை உணர்ச்சி பெற்றுவிட்டதால் முதலாளி ஆட்சியின் எண்ணங்கள் கருகி வாடி வருகின்றன.

அன்றியும் ரஷிய ஆட்சி 'முதலாளித்துவ ஆட்சிகளின் தயவினாலோ அல்லது கருணையினாலோ நாம் வாழலாம்" என்கின்ற எண்ணத்தின்மீது ஒரு சிடுக்கை நேரங்கூட இல்லை. ஆனால் அதற்கு பதிலாக இந்த உலக முதலாளிகள் மாத்திரமல்லாமல் இன்னும் "செவ்வாய் மண்டல" முதலாளிகளின் எதிர்ப்பையும், அவர்களது சக்தியையும், சூழ்ச்சிகளையும், நன்றாய் அறிந்து எந்த நேரமும் எதிர்பார்த்து நின்று கொண்டு இருக்கின்றது. அது எப்படிப்பட்ட யுத்தத்தையும் வரவேற்று ஒரு கை பார்த்து விட துணிந்து இருப்பதுடன உலக முழுமைக்கும் தன்னுடைய ஆட்சிக்கொள்கையை உகந்தளித்து உதவி புரியக்காத்தும் இருக்கின்றது.

ஆனால் ஏழை மக்களுக்கும் கஷ்டப்பட்டு பாடுபடும் தொழிலாளி மக்களுக்கும் தாழ்த்தப் பட்டவர்களுக்கும் உண்மையான சுயமரியாதை உணர்ச்சி உண்டாக்க வேண்டியதுதான் இப்பொழுது பாக்கியிருக்கின்றது.

## மதுரை ஜில்லா மகாநாடு.

மதுரை ஜில்லா சுயமரியாதை மகாநாடு இம்மாதம் 16-ந் தேதி மதுரையில் நடந்த விஷயம் மற்றொரு பக்கத்தில் காணலாம். அந்த மகாநாட்டில் தோழர்கள் ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன், வி. வி. ராமசாமி முதலியவர்கள் கலந்து இருந்ததும், மகாநாட்டை சிறப்பாய் நடத்தியதுமான விஷயங்கள், விஷமப் பிரசாரக்காரர்களுக்கு ஒரு தக்க சமாதானமாகும்.

அந்த மகாநாட்டில் ஈரோடு வேலைத் திட்டக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களை மாகாணக் கமிட்டிக்கு முறையாக சிபார்சு செய்வதில் சுயமரியாதை இயக்கத்தின் லட்சியம் என்னும் விஷயத்தில் சிலர் சிற்சில மாறுதல்களை பிரேரேபிக்க இருந்தாலும், சிலர் அதை எதிர்க்க இருந்தாலும் அதைப்பற்றிய முடிவை மாகாணக் கமிட்டிக்கே விட்டுவிடுவது என்று தீர்மானிக்க வேண்டியிருந்தது.

எப்படியிருந்தாலும் பிரிட்டிஷ் முதலிய எந்தமுதலாளிகளுடைய ஆட்சியும் ஒழிய வேண்டும் என்னும் விஷயத்திலும் பணக்காரத் தன்மை ஒழியவேண்டும் என்னும் விஷயத்திலும் மகாநாட்டில் எவருக்கும் அபிப்பிராயபேதமிருந்ததாகச் சொல்ல முடியாது.

ஆனால் சில விஷயங்கள் சட்ட விரோதமானதாக இருக்குமோ என்கின்ற எண்ணம் சிலருக்கு இருந்தது என்பதில் ஆச்சரியமொன்றுமில்லை.

சமதர்மக் கட்சி வேலைத்திட்டத்தைப்பற்றிய அபிப்பிராயத்தில் எவ்வித மாறுபாடான அபிப்பிராயமும் யாருக்கும் இல்லை.

ஆனால் அந்தத் திட்டம் முழுவதும் சுயமரியாதை இயக்கத் திட்டமாகவே இருக்கவேண்டும் என்றும் அத்திட்டத்திற்காக என்று தனிக்கட்சி வேண்டியதில்லை என்றும் பலர் அபிப்பிராயப் பட்டார்கள். அந்த அபிப்பிராயம் அத்திட்டங்களை சிறிதும் பாதிக்காமல் மற்றும் அதற்கு வலுக்கொடுப்பதாகவே இருந்ததால் அதை மாகாணமகாநாட்டுக்கு சிபார்சு செய்யப்பட்டது. சில தோழர்களுக்கு இந்த அபிப்பிராயங்கள் திருப்தியில்லை என்பது வெளியாயிற்று என்றாலும் ஒருவிதத்தில் ஒப்புக்கொண்டார்கள். மற்றபடி வரவேற்புத் தலைவர் தோழர் எஸ். தியாகராஜன் (அய்யாத்துரை) அவர்கள் உபன்யாசம் சிறியதும் முக்கியகருத்துகள் கொண்டதுமாய் இருந்தது. மகாநாட்டுத்தலைவர் தோழர் புரொபசர் லட்சுமிநரசு அவர்களது உபன்யாசம் நீண்டதாய் இருந்தாலும் அது கடவுள், மதம் ஆத்மா முதலிய விஷயங்களின் பொய்மையையும், புரட்டுகளையும் சூழ்ச்சிகளையும், தெள்ளத்தெளிய விளக்கப்பட்டிருக்கிறதுடன் உழைப்பாளிகளின் உரிமையையும், பிரதானத்தையும், எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் ஆங்கில உபன்யாசம் மிகவும் ருசிகரமானதாய் இருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

## ஈ. வெ. ராமசாமி சுற்றுப்பிரயாணம்.

தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சென்ற 15-ந் தேதி இரவு ஈரோடு விட்டுப் புறப்பட்டு 16-ந் தேதி மதுரை மகாநாட்டுக்கும், 17-ந் தேதி அருப்புக்கோட்டை வீரய்யா ஆதிதிராவிட இரவுபள்ளிக்கூட 2-வது ஆண்டுவிழாவுக்குச்சென்று தலைமை வகித்துவிட்டு 17-ந் தேதி முக்குளாமலிங்கபுரம், சென்று 18-ந் தேதி அருப்புக்கோட்டை பொதுக்கூட்டத்தை நடத்திவிட்டு 20-ந் தேதி இரவு விருதுநகர் மார்க்கம் ஈரோடு வந்து சேர்ந்தார். 22-ந் தேதி இரவு புறப்பட்டு லாலுகுடி ஆதிதிராவிட கிறிஸ்துவர்கள் மகாநாட்டுக்குச் சென்றுவிட்டு 24-ந் தேதி ஈரோடு வந்து சேருவார்கள். மறுபடியும் 28-ந் தேதி இரவு கொச்சிக்குப்புறப்படுவார்.

## "ரஷ்யாவுடன் சேருவோம்"

பிரிட்டனின் சுதந்தர தொழிற் கக்ஷியின் காரியதரிசியும் பார்லிமெண்டு அங்கத்தினருமான தோழர் பென்னர் பிராக்வே கீழ்கண்டவாறு கூறுகிறார்.

"ரஷியாவுக்கும் பிரிட்டனுக்கும் யுத்தம் வந்தால் நாங்கள் பகிரங்கமாக ரஷியாவுடன் நிற்போம்" ரஷியாமீது போர் தொடுத்தால் இங்கிலாந்தில் பொதுவேலை நிறுத்தமும் ஆரம்பிப்பதென்று சுதந்திர தொழில்கக்ஷி மகாநாட்டில் ஓர் தீர்மானமும் நிறைவேற்றி யிருக்கிறது.

## ருஷியாவும் புத்தகங்களும்.

புத்தகங்கள் பிரசுரிக்கும் வேலை அநேகமாக ருஷியாவில் சர்க்கார் கையிலேயே இருக்கிறது. 1932-ம் வருஷம் மொத்தம் 40,000 புதிய புத்தகங்கள் பிரசுரமாயின. மொத்தம் விற்பனையான பிரதிகள் 6000-லக்ஷம். ருஷியாவிலுள்ள மக்கள் படிக்கும் பத்திரிகைகளின் தொகை 400-லக்ஷம். ஜர்மனி, பிரிட்டன், அமெரிக்கா இந்த மூன்று தேசங்களும் பிரசுரிக்கும் புத்தகங்களையெல்லாம் சேர்த்தால் எவ்வளவு வருமோ அவை ரஷியாஒரு நாட்டில் மட்டும் பிரசுரமாகின்றன. ரஷியப் புரட்சிக்கு முன் வருஷம் பிரசுரமானதைவிட 8மடங்கு அதிகமான புத்தகங்கள் 1933-ல் பிரசுரமாகும். ஜனத்தொகையுடன் ஒப்பிட்டால் சராசரி ஒவ்வொரு மனிதனுக்கு 6புத்தகங்கள் வீதம் பிரசுரமாகின்றன. பத்திரிகைகளைக்கணக்கிட்டால் ஒவ்வொரு குடும்பத்துக்கு ஒரு பத்திரிகை வீதம் செலவாகிறது. இம் மாதிரி முயற்சிகளின் பயனாக ரஷியாவில் தற்காலம் எழுத்து வாசனையில்லாதவர்கள் தொகை பூஜ்யமாய் விட்டது.

"குமரன்"

## சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றம்.

சென்னை ஜார்ஜ்டவுன் சுயமரியாதை இளைஞர் மன்ற வாராந்திரக் கூட்டம் 16-4-33-ல் நடந்தது. அதுசமயம் தோழர் எஸ். ராமநாதன் 'கல்வியும் மதமும்' என்பது பற்றி ஒரு சொற்பொழிவாற்றினார்கள்.

பிறகு ஷை மன்றத்தின் சார்பாய் திருவல்லிக்கேணி கடற் கரையில் தோழர் எஸ். குருசாமி அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அதில் தோழர்கள் எஸ். ராமநாதன், எஸ். குஞ்சிதம், கே. எம். பாலசுப்பிரமணியம், அமிர்தவாசகம் அருணகிரி ஆகியவர்கள் முறையே 'சமதர்மம்' 'மாதரும் சுயமரியாதை இயக்கமும்' 'மதமும் சுயமரியாதையும்' 'கத்தோலிக்கர்களும் சுயமரியாதையும்' 'சுயமரியாதை இயக்கத்தின் கொள்கை' என்ற விஷயங்களைப்பற்றியும் பேசினார்கள் என்று ஷை மன்ற காரியதரிசி தோழர் ரங்கநாதன் அறிவிக்கிறார்.

## தோழர் கே. வி. அழகர்சாமி

சுயமரியாதை இயக்கத்தோழர் பட்டுக்கோட்டை கே. வி. அழகர்சாமி அவர்கள் இன்னும் ஒரு மாதத்திற்கு பட்டுக்கோட்டையிலேயே இருப்பார். அவருக்கு எழுதும் கடிதங்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

விலாசம்.

கே. வி. அழகர்சாமி
பட்டுக்கோட்டை, தஞ்சை ஜில்லா,

# மதுரை ஜில்லா முதலாவது சுயமரியாதை மகாநாடு.

## நிறைவேறிய தீர்மானங்கள்.

சுமார் இரண்டு மாத காலமாய் தெரிவித்துவந்த மதுரை ஜில்லா சுயமரியாதை மகாநாடானது 16-4-33-ந்தேதி மதுரை விக்டோரியா எட்வர்ட் மண்டபத்தில் தோழர் புரொபசர் லட்சுமிநரசு அவர்கள் தலைமையில் வெகு விமரிசையாக நடந்தேறியது.

### மகாநாட்டு விபரம்.

தோழர்கள் ஈ. வெ. ராமசாமியும் புரொபசர் லட்சுமிநரசும் அவரது வாழ்க்கைத்துணைவியாரும் 16ந்தேதி காலை 8-மணிக்கு திருவனந்தபுரம் எக்ஸ்பிரசில் மதுரை ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்ததும் சுமார் 300 பேர்கள் ரயில் மேடையில் சமதர்ம கோஷத்துடன் வரவேற்று மாலையிட்டு தோழர் ராமசாமியை போடிநாயக்கனூர் ஜமீன்தார் பங்களாவுக்கும், தோழர் லட்சுமிநரசு அவர்களை முசாபர் பங்களாவுக்கும் அழைத்துச் சென்றார்கள்.

போடிபங்களாவில் சுமார் 250 பேர்களுக்கு காலை ஆகாரம் நடந்ததும் சரியாய் 9-மணிக்கு எல்லோரும் மகாநாடு நடத்த ஏற்பாடு செய்திருந்த மண்டபமாகிய விக்டோரியா எட்வர்ட் மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். மண்டபத்தில் சுமார் 1000 பேர்கள் எற்கனவே கூடியிருந்தார்கள். மதுரை ராமநாதபுரம் ஜில்லாவின் பல பாகங்களிலிருந்தும் பிரதிநிதிகள் ஏராளமாய் பெண்களுடன் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

அவர்களுள் மேடையிலும்,முன்னணியிலும் இருந்தவர்கள்.

தோழர்கள் ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன் எம். எல். சி., எ. ஆறுமுகம் முனிசிபல் கௌன்சிலர், பி. ரங்கசாமி நாயுடு பி. ஏ. பி. எல்., முனிசிபல் சௌன்சிலர், உத்தமபாளையம் ஜமீன்தார் எம். எஸ் தியாகராஜன், திண்டுக்கல் தாலூகா போர்டு தலைவர் பாலுசாமி நாயுடு, முகமது சுல்தான், எம். ஏ. பி. எல்., வக்கீல், துரைசாமி பிள்ளை டிஸ்டிரிக்ட் போர்டு மெம்பர், விருதுநகர் சேர்மென் வி. வி. ராமசாமி, விருதுநகர் பாத்திரக்கம்பெனி முனிசிபல் கௌன்சிலர் பி. சிதம்பரம், திருவண்ணாமலை முனிசிபல் கௌன்சிலர் கு. சம்பந்தம், என். எஸ். வி. சுப்பையா, ஜே. என். ராமநாதன், வி. பி. ரெத்தினசாமி. எஸ். அருணாசலம், எஸ். முத்துசாமி, பி. விநயகமூர்த்தி, விருதுநகர் மாரிமுத்து, திண்டுக்கல் சிவகுருநாதன் சோழவந்தான், சுப்பிரமணியம், சி. எஸ். நாயகம், எஸ். வி. ராமலிங்கம், என். வெங்கிடுசாமி, எ. எஸ். ஆனந்தம். எஸ். ஷண்முகம், நிலக்கோட்டை கு. ஆ. காளியண்ணன், நிலக்கோட்டை ராமசாமி பத்தர், ஸ்ரீவில்லிப்புத்தூர் மாஜி சேர்மென் பாலய்யா, திண்டுக்கல் சாமி சிவநேசம், காரைக்குடி ப. ஜீவானந்தம், அ. பொன்னம்பலம், ச. ப. சுப்பையா, அருப்புக்கோட்டை சேர்மென் சுப்ரமணிய முதலியார், ஈ. வெ. ராமசாமி, பி. லட்சுமிநரசு, அவர்கள் மனைவியார் எஸ். கே. திருமகிழ்மாறன், எஸ். வி. பி. என். எல். தங்கமணி, எம். எஸ். பொன்னையப்பன், எல். ரங்கசாமி, வீராசாமி, மணிமாறன், டி. வி. பதி, பி. டி. ராமய்யா, பலவேசம் சு. ம. சுப்ரமணியம், ந. சங்கரய்யா, மு. சு. சன்னியாசி, சுக்குணி, கு. மு. ஆல. ஆறுமுகம் பட்டிவீரன்பட்டி, பெரிய தம்பி நாடார், உபாத்தியாயர், சங்கரலிங்கம், முத்துசாமி, எஸ். வி. ராஜன், முத்திருளாண்டி, அய்யாசாமி, கூடலிங்கம் வக்கீல், அருப்புக்கோட்டை கருப்பையா, போடம்பட்டி கருப்பையா, அருப்புக்கோட்டை வீரைய்யா அவரது மனைவியார், சு. ம. பாலகுருசாமி, எஸ். கே. குருசாமி, என். பி. காளியப்பன், கோவிந்தசாமி, கே. டி. எ. தங்கமணி, எ. சிதம்பரம், சித்தையன் கோட்டை மணி, என். எ. வெங்கிடசாமி, டி. எ. வெங்கிடசாமி, அருப்புக்கோட்டைமுத்துசாமி, முத்துராமலிங்கபுரம் சுயமரியாதைப்பாவலர் வெங்கிடுசாமி, கடம்பங்குளம் நாராயணன் ரெட்டிபட்டிஜான்ரெட்டியார் மற்றும் பெண்கள் சின்னத்தாய் அம்மாள், தினமணி அம்மாள், நாகம்மாள், சுப்பம்மாள், ராமுதாய், குருவம்மாள், ராஜாம்பாள், ரஞ்சிதம்மாள், சைவமணி, பாப்பாள், ராஜம், சிவபாக்கியம், சுப்புலட்சுமி, பாப்பாத்தி, ரஞ்சிதம், மீனாட்சி, அமிர்தம், சுந்தரம்மாள், மாரியம்மாள், முருகம்மாள், காத்தாயி அம்மாள், சீனிஅம்மாள், ஜானகி அம்மாள், லெயிலுவந்த அம்மாள், தங்கம்மாள், ராஜலக்ஷ்மி, மீனாம்பாள், சாவித்திரி, முதலியவர்கள் விஜயம் செய்திருந்தார்கள். அருப்புக்கோட்டையிலிருந்தும், விருதுநகரிலிருந்தும் அதிகம் பெண்கள் வந்திருந்தார்கள்.

### வரவேற்பு.

மகாநாடு ஆரம்பமானதும் தோழர் எஸ். தியாகராஜன் (அய்யாத்துரை) அவர்கள் எழுந்து பிரதிநிதிகளை வரவேற்று வரவேற்பு உபன்யாசத்தை படித்தார்.

### தலைவர்.

அது முடிந்தவுடன்மகாநாட்டுக்குதலைமைவகிக்கபுரபசர்லக்ஷ்மிநரசுஅவர்களைதோழர் ஊ.பு.அ.சௌந்திரபாண்டியன் எம். எல். சி. அவர்கள் பிரேரேபித்தார். மதுரை வக்கீல் தோழர் ரெங்கசாமி அவர்கள் ஆமோதித்தார். ஈ. வெ. ராமசாமியும், ஜே. என். ராமநாதனும் ஆதரித்தார்கள். பிறகு பெருத்த கரகோஷத்தினிடையே தோழர்புரொபசர்லக்ஷ்மிநரசுஅவர்கள் தலைமை வகித்துத் தலைமைப் பிரசங்கம் ஆங்கிலத்தில் வாசித்தார். வக்கில் தோழர் முகமது சுல்தான் அவர்கள் அதை தமிழில் மொழிபெயர்த்து வாசித்தார். அது முடிந்தவுடன் 11-30 மணிக்கு பகல் சாப்பாட்டுக்காக மகாநாடு ஒத்திவைக்கப்பட்டது. அதோடு போடி நாயக்கனூர் ஜமீன்தார் பங்களாவில் விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டமும் கூடுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

### வரவேற்பு.

பிறகு மதுரை சுயமரியாதை வாலிபசங்கத்தாரால் தோழர் ஈ. வெ. ராமசாமிக்கு ஒருவரவேற்புப்பத்திரம்வாசித்துக்கொடுக்க ஏற்பாடு செய்திருந்தபடி மதுரை வக்கீல் தோழர் முகமதுசல்தான் எம். ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் பிரதிநிதிகளும் மற்றும் பல பிரமுகர்களும்கூடி தோழர் ஈ.வெ. ராமசாமிக்குக்காரியதரிசி அவர்களால் வரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. தோழர் ஈ. வெ. ராமசாமி அதற்கு பதில்சொல்லியான பிறகு காரைக்குடி தோழர் ச. ப. சு.விசாலாட்சி அவர்கள் சு. ம. "வாலிபர் கடமை" என்பதுபற்றி ஒரு உபன்யாசம் செய்தார்கள். பின்னர் தோழர் அ. பொன்னம்பலனார் "சுயமரியாதை இயக்கம்" என்பது பற்றிப் பேசினர். பிறகு தலைவரவர்கள் இதை ஆதரித்துப் பேசிய பின்பு கூட்டம் முடிவு பெற்றது.

பகல் சாப்பாடானவுடன் போடி பங்களா மேல் மாடியில் புரொபசர் பி. லக்ஷ்மிநரசு அவர்கள் தலைமையில் விஷயாலோசனைக் கூட்டம் கூடி மகாநாட்டுக்கு சில தீர்மானங்களை நிறைவேற்றினர்.

பகல் 3 மணிக்கு மேல் மகாநாடு ஆரம்பமானதும் முறையே அத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### நிறைவேறிய தீர்மானங்கள்.

1. நமது இயக்கத் தோழர் சிவகங்கை எஸ். ராமச்சந்திரனின் அகால மரணத்தைக் குறித்து இம்மகாநாடு வருந்துவதுடன் அன்னாரின் குடும்பத்தாருக்குத் தங்களின் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

தலைவர் பிரேரேபித்தார்.

2. சுயமரியாதைச் சங்கத்தலைவர் தோழர் ஆர். கே. ஷண்முகம் அவர்கள் இந்தியா சட்டசபைத் தலைவர் ஸ்தானத்திற்கு ஏகமனதாகத் தெரிந்தெடுக்கப்பட்டதைப்பற்றிஇம் மகாநாடு சந்தோஷத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

இதை தோழர் ஈ. வெ. ராமசாமி பிரேரேபித்தார்.

தோழர் வக்கீல் ரெங்கசாமி அவர்கள் ஆமோதித்தார்.

3. சுயமரியாதை இயக்கம் அகில இந்திய இயக்கமாக செய்வதற்காக ஆங்கிலத்தில் ஒரு பத்திரிகை உடனே ஆரம்பிக்கவேண்டுவது மிகவும் அவசியமென்றும் அதற்கான முயற்சிகளை தோழர் ஈ. வெ. ராமசாமிஅவர்களை சீக்கிரம் ஆரம்பிக்கவேண்டுமென்று இம்மகாநாடு வேண்டிக்கொள்ளுகிறது.

இத்தீர்மானம் தோழர் சிவகுருநாதனால் பிரேரேபிக்கப்பட்டு வக்கில் தோழர் முகமதுசல்தானால் ஆதரிக்கப்பட்டு தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

4. காரைக்குடியிலும் நீடாமங்கலத்திலும் சுயமரியாதைத் தோழர்களை போலீசார் அக்கிரமமாய் அடித்துத் தொந்திரவு செய்ததை இம் மகாநாடு கண்டிப்பதுடன் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மீது மேல் அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்றுஇம்மகாநாடு தெரிவித்துக்கொள்ளுகிறது.

இத்தீர்மானம் தோழர் பி. அருணாசலம் பிரேரேபிக்க நாகை தோழர் என். பி. காளியப்பனால் ஆமோதிக்கப்பட்டு, தோழர் அ. பொன்னம்பலத்தால் ஆதரிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேறியது.

5. ஈரோட்டில் நடந்த சுயமரியாதை கட்சியின் சமதர்மக் கட்சியாரின் வேலைத்திட்டத்தை அடியில் கண்ட திருத்தத்தோடு இம்மகாநாடு மாகாண மகாநாட்டுக்கு சிபார்சு செய்கிறது.

சுயமரியாதை இயக்க சமதர்மக் கட்சியாரின் வேலைத்திட்டமென்பதை சுயமரியாதை இயக்க கட்சியின் வேலைத்திட்டமென்று அமைக்கவேண்டுமென்றும், புதுப்பெயருடன் ஒரு தனிக்கட்சி வேண்டியதில்லையென்றும் அபிப்பிராயப்படுகிறது. சுயமரியாதை இயக்க லட்சியமென்பதைப்பற்றி யோசிக்கவும் முடிவு செய்யவும் மாகாண மகாநாட்டிற்கே விட்டு விடுவதெனத் தீர்மானிக்கிறது.

இத்தீர்மானத்தை தோழர் ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன் எம். எல். சி. அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, விருதுநகர் முனிசிபல் சேர்மென் தோழர் வி. வி. ராமசாமி அவர்களால் ஆதரிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேறியது.

6. விருதுநகரில் நடந்த 3வது சுயமரியாதை மகாநாட்டுத் தீர்மானங்களை இம்மகாநாடு வலியுறுத்துகிறது.

இதை தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் பிரேரேபித்தார். தோழர் கே. சம்பந்தம் அவர்கள் ஆதரிக்கத் தீர்மானம் நிறைவேறியது.

அப்பால் தோழர் விசாலாட்சி அவர்கள் "பெண் கல்வி" அவசியத்தைப்பற்றிவற்புறுத்திப்பேசினார்பின்னர்மதுரைசுயமரியாதைசங்க 1931-32-ம் ஆண்டின் நிர்வாக அறிக்கை

ரோஜா முத்தையா

யைத் தோழர் எ. என். வெங்கிடசாமி வாசிக்க சபையில் நிறைவேறியது. பிறகு தலைவர் முடிவுரை கூறினர். அதைத் தோழர் முகமது சுல்தான் எம். ஏ. பி. எல். அவர்கள் மொழிபெயர்த்துச் சொன்னார்கள்.

பிறகு தலைவருக்கும் மற்றவர்களுக்கும் வந்தனோபசாரம் சொல்லி மாலையிட்டு மகாநாடு இனிது முடிக்கப்பட்டது.

---

([illegible]-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒதுக்கித் தள்ளப்பட்டு நடந்துவரும் கொடுமை நம் நாட்டில் தவிர வேறு எந்நாட்டிலுமில்லை. நாட்டில் பெரும்பாலோர் தற்குறிகளாகவும், மதத்தில் பெரும் பகுதியினர், தீண்டத்தகாதவர், நெருங்கத்தகாதவர், காணத்தகாதவர்களாகவும், ஏனையோரில் பலர், பசியுற்று, நோயுற்று, மெலிந்து, வாடி, சாவைஎதிர்நோக்கியிருக்கும் நம்நாட்டு மக்களைப்போல் வேறு நாட்டிலும் இல்லையென்பதை யுணர்ந்து அதற்குற்ற பரிகாரங்களைத் கிட்டப்படுத்த வேண்டுதல் அவசியமென்பதை உணருங்கள்,

பெண்மக்கள்

நம் நாட்டுச் சகோதரிகளின் நிலைமையோ, வெகு பரிதாபகரமானது, தீண்டத்தகாதாரெனப் படுவோரின் நிலைமையும் விடக் கேவலமானது. தீண்டப்படாதாருக்கு சொத்துரிமையுண்டு, வேலை செய்து கூலி வாங்கிப் பிழைக்க வழியுண்டு இச்சுதந்திரங்களில்யாதும்பெண்களுக்கில்லை. வருணாச்சிரமப்படி, சூத்திரனும், பஞ்சமனும், மேல் ஜாதிக்காரருக்கு வேலைக்காரர்கள். பெண்களோ எனில் ஆண்களின் உபயோகத்திற்கென்றே சிருஷ்டிக்கப்பெற்ற உடமைகள். ஸ்திரீகளுக்கு சொத்து தேவையில்லை. அவர்களே ஆண்களுக்குரிய சொத்து. நம் முன்னோர்கள் பெண்களை சொத்தாக பாவித்தால் தான், அந்த சொத்தை பாதுகாத்தலிலேயே தங்கள் கவனத்தையும், நேரத்தையும். செலவிட்டனரேயன்றி அவர்களின், கல்வி முன்னேற்றத்திற்காவது உரிமைகளுக்காவது சிந்தித்தேனும் கவலைபெடுத்துக்கொள்ளவில்லை. சமீபத்தில் சீன தேசத்தில் பெண்கள் போலீஸ் படையில் சேர்ந்து அரசாங்கத்தையே நடத்தும் திறமைவாய்ந்த வீர மங்கையராய் விளங்கும்போது, நம் நாட்டில் சகோதரிகள், கல்வி வாசனையின்றி, பகுத்தறிவின்றி, சுயநல ஆண்கள் காட்டும் வழியையும், புராண ஆபாசக்கதைகளையுமே கட்டளைகளாக மதித்து, அடுப்பங்கறையில் அடைபட்டு கிடந்து, அடுப்பூதும் பெண்டிர்களாய் வாழ்ந்து வருகின்றனர். புரட்சியின் வேகம் பெண்களையும், அவர்களது பழைய நிலைமை உதறித்தள்ளி, ஆண்களுடன் சரிநிகர் சமானமாக வாழச் செய்திருக்கிறது. வைதீகர்களின் ஒப்பாரிகளுக்கிடையே நம் நாட்டுப் பெண்மணிகளில் சிலர், தம் உரிமையை உணர்ந்து அதைப்பெறப் போராடி வருகின்றனர். இத்தகைய தைரியசாலிகளான, பெண்மணிகள் பலர் வர வர பெருகிவருவது நம் இயக்கத்தின்வளர்ச்சியைக்காட்டுகிறது

தொழில் முறை—சுதேசியம்.

இதரநாடுகளை ஒப்பிட்டுப்பார்க்குமளவில் நம் நாடு தொழிலபிவிருத்தியில் பின்னடைந்திருக்கிறது நாம் நமது மூலப்பொருள்களை ஏற்றுமதி செய்துவிட்டு பிற நாட்டிலிருந்து இறக்குமதியாகவும் பொருளையே 1-க்கு 10 பங்காக விலைகொடுத்து வாங்கும் நிலைமையிலிருக்கிறோம். இதர நாடுகளில் வர வர தாங்களே மூலப்பொருள்களை உற்பத்தி செய்யும் சாதனங்களை அனுஷ்டித்து தாங்களே தேவையான மூலப்பொருள்களை உற்பத்திசெய்யஆரம்பித்துவிட்டனர். அந்நிலை வளர்ச்சியடையும்போது நாம் இன்னும் அதிக கஷ்டப்படவேண்டிவரும். அந்நிலை ஏற்படுமுன்னமே நாம் நமக்குத்தேவையான சாமான்களை நம் நாட்டிலேயே செய்ய தீவிர முயற்சியெடுக்கவேண்டும். இன்றேல் நம் நிலைமை மிக்க மோசமாகிவிடும் என்பதற்கு இப்பொழுதே அறிகுறிகள் தென்படுவதைப்பற்றி அறிஞர்கள் எச்சரிக்கின்றனர். ஆகலால் நாம் உள்நாட்டுச் சாமான்களையே வாங்கி நம் நாட்டுத் தொழிலை ஆதரிக்க வேண்டுமென்பதை தெரிவிப்பதுடன் இம் மகாநாட்டின் தலைவர்களுடைய தலைமைப் பேருரையைக் கேட்டுமேல்கொண்டு மகாநாட்டு நடவடிக்கைகளை இனிது நடத்திவைக்க ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொண்டெனது சிறிய உரையை நிறுத்திக் கொள்ளுவதுடன் இம் மகாநாட்டிற்கு என்னை வரவேற்புக் கழகத் தலைமையளித்த இக்கமிட்டி அங்கத்தினருக்கு என்னுடைய மனமார்ந்த வந்தனம் உரித்தாகுக.

---

## மணமகள் தேவை

சுமார் 21 வயதுடைய வரும், தமிழ் நன்றாக எழுதப்படிக்கத் தெரிந்தவரும், சுயமரியாதை இயக்கத்தில் அளவு கடந்த பற்றுதலுடைய வரும், மேடையில் ஏறி பேசும் திறமை வாய்ந்த வருமான தோழர் ஒருவருக்கு மணமகள் தேவை. மணமகள் தமிழ் நன்றாக எழுதப்படிக்க தெரிந்தவராகவும் சுயமரியாதை இயக்கத்தின்பால்பற்றுதல்உடையவராகவும் இருக்கவேண்டும் விருப்பமுடையவர்கள் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதுக

கே. ராமையா
காரியதரிசி சுயமரியாதை இளைஞர் சங்கம், கோட்டாறு.


லக்ஷக்கணக்கானவர்கள் சுக்சஞ்சாரக்

### „திராக்ஷாஸவ்" விருந்

நற்பயன் அடைந்திருக்கும்பொழுது ஏன் நீங்களும் அடையக்கூடாது!!!

பொறுக்கி எடுத்த திராக்ஷையிலிருந்து இறக்கப்பட்டது. இனிய மணங்குணங்களுடைய குளிர்ச்சியான பானம். பலஹீனர்களுக்கும், நோயின் வாய்வடிபட்டவர்களுக்கும், உயரிய நரம்பு டானிக். சரீர புஷ்டி தருவதிலும், வயிற்று சங்கடங்களை நிவர்த்திப்பதிலும் மிகச்சிறந்தது.

24 அவுன்ஸ் பட்டி ரூ 2-0-0. 12 அவுன்ஸ் புட்டி ரூ 1-0-0

மாதிரி இலவசம். எங்கும் ஏஜண்டுகள் தேவை.

கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதி காட்லாக் பெற்றுக்கொள்ளவும்.

சுக் ஸஞ்சாரக் கம்பெனி,
மட்ரா [யூ.பி.]

---

தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கென்று ஏங்கள்

### "பால சுதா" வையே

ஏன் தெரிந்தெடுக்கின்றார்கள்???

ஏனென்றால் குழந்தைகளுக்கு இதுவே உயரிய இனிய டானிக். குழந்தைகளுக்கு தேகபுஷ்டி உண்டாக்கி, பருமனுக்குவதுடன் பல் கஷ்டமில்லாமல் சுலபமாக முளைகின்றது.

சுருக்கக்கூறுமிடத்து குழந்தைகளின் எல்லா வியாதிகளுக்கும் இது அதி உன்னதமான ஔஷதம்.

புட்டி 1க்கு விலை அணா 12. தபால் கூலி வேறு.
மாதிரி இலவசம். எல்லாவிடங்களிலும்
ஏஜண்டுகள் தேவை.

மற்ற விபரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

சுக் ஸஞ்சாரக் கம்பெனி,
மட்ரா, [யூ.பி.]



### சுகானந்த பானச்சூரணம்.

தேக்ஷணமூர்த்தி தமிழ் வைத்தியசாலையில் தயார் செய்யும் சுகானந்த பானச்சூரணம் காபி பானத்திற்குப் பதிலாகத் தயார் செய்தது. அனேகவிதமான மூலிகையின் வேர், பூ, வித்து வகைகளால் தயார் செய்யப்பெற்றுள்ளது. காபியின் மணம் கலந்துளது. இரத்த சுத்தி, ஞாபகசக்தி, வேலையில் சுறுசுறுப்பு முதலியவைதரவல்லது.

காபியானத்திற்குப்பதிலாக அநேகர் வேண்டுதலின் பேரில் தயாரிக்கப்பெற்ற இச்சூரணம் காப்பித்தூளைப்போல் கொதி தண்ணீரில் போட்டு கஷாயமெடுத்து பாலுடன் கலந்தாவது அல்லது தனிப்பாலை காயவைத்து அதில் ஒரு தேக்கரண்டி அளவு சூரணம் போட்டு சர்க்கரை கூட்டிக்கலந்து பருகிவரின் வெட்டைச்சூடு, நீரழிவு, நீர்கடுப்பு, காமாலை, சோகை, அஜீரணம் பல்ஹீனம் முதலான அனேக வியாதிகளைக்கண்டிக்கும்.

காபி, டீ, கொக்கோ முதலான பானத்திற்குப் பதிலாக எமது "சுகானந்த பானச்சூரணம்" ஒன்றே பொருத்தமாயுளது. காலை மாலை இரண்டு நேரங்களிலும் மற்றும் தேவையான நேரங்களிலும் உபயோகிக்கலாம். இன்றே ஒரு டப்பி வாங்கி உபயோகித்து உண்மையையுணருங்கள்.

விலை டப்பா 1க்கு 0—6—0.

வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும். எல்லா ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை. ஏஜண்டுகள் முன்பணம் டிபாசிட் கட்டவேண்டும். வி. பி. சார்ஜ் வேறு. மலாய் நாட்டு ஆர்டர்கட்கு முன்பணம் அனுப்பவேண்டும்.

எமது வைத்தியசாலையில் எல்லா வியாதிகளுக்கும் எந்த நேரத்திலும் மருந்துகள் கிடைக்கும். இங்ஙனம்,

நா. நமசிவாயம், (நேட்டிவ் டாக்டர்)
தேக்ஷணமூர்த்தி தமிழ்வைத்தியசாலை,
திருக்கோஷ்டியூர், ராமநாதபுரம் ஜில்லா.

## வட ஆற்காடுஜில்லா
### சு. ம. மகாநாடு.

அடுத்த மேமாதம் 7, 8ந்-தேதிகளில் வட ஆற்காடு ஜில்லா முதலாவது சு. ம. மகாநாடு நடைபெறும். தோழர் குஞ்சிதம் அம்மையார் பி. ஏ. பி. எல். தொண்டர்கள் மகாநாட்டை துவக்குவார். 7ந்தேதி மகாநாட்டிற்கு தோழர் கே. வல்லத்தரசு அவர்களை தலைமை வகிக்குமாறும் 8ந்தேதி தொண்டர்கள் மகாநாட்டிற்கு திருச்சி தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல். வக்கீல் அவர்கள். தலைமை வகிக்குமாறு கடித போக்குவரத்து நடந்துகொண்டு இருக்கிறது. மற்ற விபரம் பின்னால் தெரிவிக்கப்படும் என்று காரியதரிசி தோழர் வி. பார்த்தசாரதி எழுதுகிறார்.

## ஈரோடு
### சுயமரியாதை வாலிபர் சங்கம்.

ஷை சங்கத்தின் வாராந்திரக் கூட்டம் தோழர் டாக்டர் எம். கிருஷ்ணசாமி அவர்களின் தலைமையில் 16ந் தேதி கூடிற்று. அது சமயம் தோழர்கள் எஸ். வி. லிங்கம், எ. ரத்தினசபாபதி ஆகியவர்கள் "கடவுளும், இயற்கையும்" என்பது பற்றி பேசினார்கள்.

பின் தலைவரால் கீழ்கண்ட தீர்மானத்தைப் பிரேரேபிக்கப் பட்டுநிறைவேரப்பட்டது.

"சுயமரியாதை மாகாணச் சங்கத் தலைவரும், இந்திய சட்டசபைத்தலைவருமானதோழர் ஆர். கே. ஷண்முகம் பி. ஏ. பி. எல் அவர்கள் சமீபத்தில் ஈரோட்டிற்கு விஜயம் செய்வதால் அவருக்கு ஒரு வரவேற்புப்பத்திரம் நமது சங்கத்தின் சார்பாக வாசித்துக்கொடுப்பதென இக்கூட்டம் தீர்மானிக்கிறது என்பதாகும்.

## திருமணம்

சுயமரியாதை இயக்கத்தோழர் ஆர். டி. எல்லநாயகம் அவர்கட்கும், தோழர் அங்கு லக்ஷிமி அம்மாள் அவர்கட்கும் ஈரோடு கொங்கலம்மன் தெரிவிலிருக்கும் மணமகனில்லத்தில் 1-5-33ல் சுயமரியாதை முறைப்படி திருமணம் நடைபெறும்.

## இந்துமதபாடசாலை வாலாஜாபாத்.
### 17ம் ஆண்டுவிழா.

ஷை பாடசாலையின் ஆண்டு நிறைவுவிழா 15-4-33 முற்பகல் 8மணிக்கு பிரஞ்சு அரசியல் செல்வநிலை அமைப்புக்கழக உதவித்தலைவர் தோழர் ஆ. வே. முத்தையா பி. ஏ. பி. எல். அவர்களையும், திருவாரூர் நகராண்மைக்கழக உதவித்தலைவர் தோழர் தி. நா. சபாபதி அவர்களையும், பள்ளிச்சாலையின் வளர்ச்சிக்காரர்களும் வெகு விமரிசையாக வரவேற்கப்பட்டு மேளவாத்தியத்துடன் ராஜ வீதியின் வழியாக ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

பின்பு பிற்பகல் 3 மணிக்குத்தோழர் ஆ. வே. முத்தையா அவர்களின் தலைமையின் கீழ் ஆண்டு நிறைவு விழா நடைபெற்றது.

பின் அவைத்தலைவர்களுக்கு வரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. அதன் பின்னர் தலைமை ஆசிரியரவர்களால் ஆண்டு அறிக்கை வாசிக்கப்பட்டது. பிறகு தலைவர்கள் முன்னுரையாக பல விஷயங்கள் எடுத்துப்பேசினர். அதன்பின் நிகழ்ச்சிக்குறிப்பில் கண்டவாறு பல்வேறு துறையிலும் அப்பள்ளியின் மாணவர்கள் வெகு திறமையாக நடித்துக்காட்டினர்.

கடைசியாக தலைவர் இருவர்களும்முடிவுரை கூற தோழர் மாசிலாமணிமுதலியார் அவர்களால் தலைவர்களுக்கு நன்றி கூறப்பட்டு, சபை இனிது நிறைவெய்தியது. (ஒரு நிருபர்)

## அடுத்த வாரம்.

பாதிரிகளும் பெண்களும் பாவமன்னிப்பும் என்ற கட்டுரை அடுத்த வாரம் வெளிவரும்.

## கோவையில்
### கால் பந்தாட்ட போட்டி.

கோயமுத்தூர் அத்லெட்டிக்கிளப்பின் ஆதாவின் கீழ் மே மாதம் 3-வது வாரத்தில் 7-பேர்கள் அடங்கிய கால் பந்தாட்ட போட்டி லண்டன் மிஷன் ஸ்கூல் மைதானத்தில் நடைபெறும். போட்டியில் கடைசியாக வெற்றி பெறுபவர்களுக்கு அழகிய வெள்ளிக்கோப்பைகளும், தோல்வி அடைபவர்களுக்கு தங்கம் பதித்த பதக்கங்களும் பரிசாக அளிக்கப்படும். இத்துடன் போட்டியில் நன்ருக விளையாடுபவருக்கு ஒரு ஸ்பெஷல் வெள்ளிக்கோப்பை ஒன்றும் பரிசாக கொடுக்கப்படும். இதில் கலந்துகொள்ள விரும்புவோர் பிரவேச கட்டணம் ரூபாய் மூன்றுடன் 10—5—33-க்குள் பதிவு செய்துகொள்ளவேண்டியது. வெளியூர் கோஷ்டிகளுக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுக்கப்படும். இது விபரங்களுக்குவேண்டுவோர் "டோர்ணமெண்ட்" காரியதரிசி கோயமுத்தூர் அத்தலெடிக்கிளப்" புக்கு எழுதி தெரிந்துகொள்ளவேண்டியது என காரியதரிசி எழுதுகிறார்.

## மயிலாப்பூர்
### சுயமரியாதைச் சங்கம்.

சென்னை நகரத்தைச்சேர்ந்த மயிலாப்பூரில் சுயமரியாதைச்சங்கம் ஒன்றை ஏற்படுத்தும்பொருட்டு சுயமரியாதை இயக்க அபிமானிகளால் ஒரு கூட்டம் 14—4—33-ல் மயிலாப்பூர் கடற்கரையில் கூட்டப்பட்டது. சுயமரியாதை இயக்கத்தில் அபிமானமுள்ள பல நண்பர்கள் வந்திருந்தார்கள். "மயிலாப்பூர் சுயமரியாதை சங்கம்" என்னும் பெயரால் ஒரு சங்கம்ஏற்படுத்தப்பட்டது. ஷை சங்கத்திற்கு தலைவராக தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ, பி. எல்., அவர்களையும் உபதலைவராக தோழர் பாலசுந்தரம் அவர்களையும் காரியதரிசியாக தோழர் பார்த்தசாரதி அவர்களையும்ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. ஷை சங்கத்தின் நிர்வாக சபை மெம்பர்களாகப்பன்னிரண்டு சுயமரியாதைத்தோழர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இம்மாதக் கடைசியில் (30—4—33) மயிலாப்பூரில் சங்கத்தின் சார்பாக ஒரு பொதுக் கூட்டம் கூட்டவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

(ஒரு நிருபர்)

(8ம் பக்கத் தொடர்ச்சி)

அனேக உண்மைகளை நவீன விஞ்ஞான சாஸ்திரம் வெளிப்படுத்தியதின் மூலமாக நம்மில் மலிந்து கிடந்த பொய்த்தோற்றங்கள் பல மறைந்துவிட்டன. சிலைப்பகட்டுகள் தேய்ந்துவிட்டன. தப்பான ஐதீகங்கள் தவிடுபொடியாகிவிட்டன. நீராவியாலும், மின்சார சக்தியாலும், பெட்ரோலினாலும், கம்பியில்லாத் தந்திமூலமாகவும், தற்கால விஞ்ஞான சாஸ்திரம், மனிதனுக்கு எத்தனையோ போகபோக்கியங்களை அளித்திருக்கிறது. இந்த ஆச்சரியங்களால் நாம் வசிக்கும் உலகம் அழகு பெற்று வசீகரமாகிவிட்டது. பரலோகம் மனிதனின் தோற்றத்தினின்றும் வெகுவாக மறைந்துகொண்டிருக்கிறது. போதுமான ஆதாரமில்லாமல் ஒரு மனிதன் ஒரு காரியத்தைச்செய்ய ஆரம்பிப்பாராளுல், அதனால் ஏற்படும் தீமை அவனுக்கு மட்டுமல்ல. அவனுடைய அறியாமை நாளடைவில் சமூகத்தையே பாதிக்கக்கூடியதாக இருக்கிறது. ஒரே அறிவுதான் உண்டு. அந்த அறிவு விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியை அடிப்படையாகக்கொண்டது. கண்ணால் நாம் பார்ப்பனவும் அவைகளினின்றும் உண்டாகும் முடிவுகளே விஞ்ஞான சாஸ்திரத்திற்கு அடிப்படையும் மேற்காப்புமாயுமிருக்கின்றன. ஆதலால் விஞ்ஞான சாஸ்திரமே மனிதனின் அறிவுக்கு மாக்ஷியை அளித்திருக்கிறது.

### மதம்.

மனிதன் இந்த உலக வாழ்வில் தற்காப்புக்காகவும், தன்னுடைய ஆசாபாசங்களைப் பூர்த்தி செய்துகொள்ளுவதற்காகவும், இடைவிடாது போராடிக்கொண்டிருக்கிறான். இந்தப் போராட்டத்தில் இவனுடைய அறிவிற்கு மேற்பட்டதும் இவனால் இன்னதென்று பிரித்தறிய முடியாததுமான ஒரு சக்தி இருப்பதாக அவன் நினைக்கிறான். பிறகு அந்த சக்தி ஒரு கடவுளாகக் கருதப்படுகிறது. இந்த கடவுளை (சக்தியை) நினைத்தவுடனே தன் நம்பிக்கை இழந்தவனாகி பயத்தால் பீடிக்கப்படுகிறான். இந்த பயத்திலிருந்தே மதமென்பது உற்பத்தியாகிறது. இவ்வாறு பயத்தினாலும், அறியாமையினாலும் உற்பத்தியான கடவுளே, தன் வாழ்வின் ஒவ்வொரு சம்பவத்தையும் செய்வதாக மனிதன்எண்ணுகிறான். சாதாரணமனிதன்பகுத்தறிவுக்காரணகவும், ஆராய்ச்சிக்காரணகவுமில்லாமல் மூடநம்பிக்கை கொண்டவனாகஇருப்பதால்இவனுடைய கற்பனைசக்தியாலும், மேலெழுந்தவாரியான எண்ணங்களாலும், பயத்தாலும், நம்பிக்கையாலும், உணர்ச்சியாலும், பசி, உறக்கம் போன்ற இயற்கைத் தேவைகளாலும் இப்பயத்தை அடிப்படையாகக் கொண்டதும், இவனால் அறியக்கூடாததுமான, கடவுள்என்றும் எண்ணத்தில் இவன் புகுந்து தன் அறிவை இழந்துவிடுகிறான். மனித வாழ்வில் இயற்கையாக ஏற்படும் பிறப்பு யௌவ்வனம், கல்யாணம், பிள்ளைப்பேறு, ஆகிய இந்த சம்பவங்களெல்லாம், கடவுளென்ற எண்ணத்தை உண்டாக்குகின்றன. மதங்கள் எத்தனையோ அம்சங்களில் வேறுபட்டாலும், சமூக வாழ்வில் மனிதனுடைய தேவைகளை பூர்த்திசெய்வதில், ஒரே அபிப்பிராயமுடையவைகளாயிருக்கின்றன. நாகரீகமென்பது தான் மனித சமூகத்தில் பரஸ்பர ஒத்துழைப்பிற்கும், இயற்கை சக்திகளைத் தன் வசப்படுத்துவதற்கும் ஏற்பட்ட ஒரு இயக்கம். நாகரீகவளர்ச்சிக்கு வெவ்வேறு காலங்களில் மதமென்பது ஆதாரவாக இருந்ததால்தான்பல் வேறு அபிப்பிராயமுள்ள ஜனங்களுக்கும் மதம் என்றால் ஒரு பிடித்தமேற்பட்டது. பிறப்புமுதல் இறப்புவரை மதம் என்ற எண்ணம் மனித வாழ்வையே பீடித்திருப்பதால், இயற்கையில் தான் காணும் சில தோற்றங்களுக்கு, அந்த மதத்தின் உதவியாலேயே கொஞ்சம் தெளிவு பெற விரும்புகிறான். மதத்திலும் சரி, தத்துவ சாஸ்திரத்திலும் சரி, விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியிலும் சரி, வெளித்தோற்றமாயுள்ள இந்த உலகத்தின் உற்பத்தி முடிவுகளைப்பற்றிய ஆராய்ச்சியை ஏற்றுக்கொள்ளுகிறது. (தொடரும்)

## 100-ரூ பரிசு.

ஒரு எண்ணை 2, 3, 4, 5 அல்லது 6- ஆல் வகுத்தால் மீதி 1 வரும். ஆனால் 7- ஆல் வகுத்தால் மீதம் இல்லை. அந்த எண் யாது? ரூ 100ஐச்சரியான விடை அனுப்புகிறவர்களுக்குச் சரிசமமாகப் பிரித்துக் கொடுக்கப்படும். முடிவு தேதி 15-5-33. ஒவ்வொரு விடைக்கும் பிரவேசக்கட்டணம் 4 ஒரு அணு பிரிட்டிஷ் ஸ்டாம்புகள் அனுப்பவேண்டும். விடைகள் மானேஜருடைய விடைக்கு ஒத்திருக்கவேண்டும்.

விலாசம்-: D. ராஜா,
உறையூர் போஸ்ட், திருச்சி.

## தேவகோட்டை சப்கலெக்டர் கோர்ட்டில்

### விநாயகர் பிரதிஷ்டை.

தேவகோட்டை சப்கலெக்டர் கோர்ட்டில் ஹெட்கிளார்க் ரூமில் இரும்புப்பெட்டி பதித்திருக்கின்ற சுவற்றுக்குமேல் ஒரு விநாயகர் பதுமை (ஆனைமுக உருவபொம்மை விக்ரகம்) ஆடைகட்டி, மாலைசூட்டி அலங்கரித்து வைக்கப்பட்டிருக்கின்றது. இந்தவிநாயகர் உருவம் முன்யிருந்த சப்கலெக்டர் சுந்திரமய்யர் ஐ. சி. எஸ். அவர்கள் காலத்தில் மிக்கபக்தியோடு பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டு இருந்து வருவதாகும். இவ்விநாயகர் அங்குள்ள இரும்புப்பெட்டிக்குக்காவலா? சப்கலெக்டர் கோர்ட்டுக்குக்காவலா? ஹெட்கிளார்க்அவர்கள் ரிகார்டுகட்கு காவலா? என்பது மட்டும் இதுவரை எவருக்கும் விளங்கவில்லை. அந்த விநாயகருக்கு தினசரிஅபிஷேக ஆராதனைச்செலவுகள் கோர்ட்டாரைச்சேர்ந்ததா? அல்லது சப்கலெக்டர் அவர்கள் சொந்த ஹோதாவைச்சேர்ந்ததா? என்பதும் இதுவரை நன்கு தெரியவில்லை. ஆனால் நமக்கு மட்டும் ஒரு சந்தேகம் தோன்றுகின்றது. அது என்னவென்றால் ஒரு பார்ப்பன சப்கலெக்டர் அவர்கள் தமது உத்தியோகக்காலத்தில் ஹிந்துமத சம்பந்தப்பட்ட புராணக்கதையின்படி கொண்டாடப்படும் விநாயகர் பதுமையை பக்திசிரத்தையோடு பிரதிஷ்டைசெய்து அபிஷேக ஆராதனை செய்யச்சொல்லி வழிபட்டு வணங்கி வந்திருக்கிறார். இந்நிகழ்ச்சியைப்போன்றே நமது நாட்டுப் பார்ப்பனர்கள் இன்று இந்நாட்டில் நடக்கும் ஆட்சி முறையிலுள்ள எல்லா பொது ஸ்தாபனங்களிலும் தாங்கள் உத்தியோகம் பெற்று உள்ளே புகுந்த வுடனேயே மதஉணர்ச்சியும், கடவுள் உணர்ச்சியும் ததும்பி பக்தி மேலிட்டு அவர்கள் காரியாலயத்திலுள்ள சுவறுகளில் "ஸ்ரீராமர்" "ஸ்ரீகிருஷ்ணன்" "விநாயகர்" முதலிய ரவிவர் மாப்படங்களை மாட்டி கற்பூரம் தீப நைவேத்தியங்கள்காட்டி ஆராதனை செய்து வருகின்றார்கள். மற்றும், ரயில்வேஸ்டேஷன், முனிசிபல் கார்ப்பரேஷன், நந்தவனங்கள் ஆகிய பல பொதுயிடங்களிலும் பார்ப்பன ஆதிக்கமுள்ள இடத்தில் விநாயகருக்குக் கோவில் கட்டுவதும், நாய்க்குக் கோவில்கட்டுவதும் அவைகட்கு தினசரிபூசை நைவேத்தியங்கள் செய்து இறுதியாக உற்சவங்கள் கொண்டாடுவது வரையிலும் நடந்திருக்கின்றது. இந்நடவடிக்கைகள் யாவும் இந்நாட்டுப் பார்ப்பனர்கள் தங்கள் ஆதிக்கத்தை வலுப்படுத்திக்கொண்டு வரும் முறையில் செய்யும் சூழ்ச்சியேயாகும்.

தற்சமயம் வந்திருக்கும் சப்கலெக்டர் அவர்கள் இந்த மதத்தைச்சார்ந்தவரோ? என்ன இனி பிரதிஷ்டை செய்யப் போகிறாரோ நாம் இப்போது ஒன்றும் முன் கூட்டியே சொல்லி விடுவதற்கில்லை. ஆனால் நாம் மட்டும் ஒன்று கூறுவோம். மத உணர்ச்சிக்கும், கடவுள் உணர்ச்சிக்கும் சாவு மணியடிக்கப்பட்டுவரும் இக்காலத்தில் பார்ப்பன சப் கலெக்டர்களும் பிற உத்தியோகஸ்தர்களும் மதத்தையும் கடவுளையும் காப்பாற்ற சப்கலெக்டர் கோர்ட்டுகளிலும் பிற பொதுஸ்தாபனங்களிலும் விநாயகர் பிரதிஷ்டை செய்து அபிஷேக ஆராதனை செய்து வருவதென்பது பெரிதும் வெறுக்கத்தக்கதும் கண்டிக்கத்தக்கது மாகும். இன்று இந்தியாவை ஆட்சிபுரியும் அரசாங்கம் மதத்தையும், கடவுளையும், கடவுள் தரகர்களையும், புரோகித குருமார்களையும், பார்ப்பனர்களையும் காப்பாற்ற இருக்கிறதா? எல்லா மக்களின் பொது நன்மைக்கு இருக்கிறதா? என்பது நன்கு தெரிய வேண்டும். இன்றேல் 'இஸ்லாம்'' "கிறிஸ்து" "பௌத்தம்'' முதலிய எல்லா மதங்கட்கும் சப்கலெக்டர்கோர்ட்டில் பதுமைகள் பிரதிஷ்டை செய்துவைக்கட்டும். அல்லது சப்கலெக்டரவர்கள் சுந்திரமய்யர் விநாயகரை அவசியம் அப்புறப்படுத்திட வேண்டுவது ஒழுங்கும் நியாயமுமாகும்.

---

## போலீசார் மீது கண்டனம்.

### பல சங்கங்களில் கண்டனக் கூட்டம்.

நீடாமங்கலத்தில் சுயமரியாதைத் தோழர்களான கே. ராமையா, சொக்கலிங்கம் ஆகியவர்களை போலீசார் அடித்து தண்டிக்கப்பட்டதை கண்டித்து கீழ்கண்ட சுயமரியாதைச் சங்கங்களில் கண்டனக்கூட்டங்கள் கூட்டி தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

#### நீடாமங்கலம்.

நீடாமங்கலத்தில் கைது செய்யப்பட்ட தோழர்களானசித்தக்காடு கே. ராமையா, நாகூர் வி. சொக்கலிங்கம் இருவர்களுக்கும் நீடாமங்கலம் சப்மேஜிஸ்ரேட் தோழர் கோபால் பிள்ளை அவர்களால் 3-நாள் தண்டிக்கப்பட்டது. தண்டனை அடைந்த தோழர்கள் 11—4—33-ந்தேதி விடுதலை செய்யப்பட்டனர். அன்று மாலை 6-30 மணிக்கு நீடாமங்கலம் தோழர் ஆறுமுகம் அவர்கள் வீட்டிலிருந்து தண்டனை அடைந்த தோழர்களை மேளவாத்தியங்களுடன் சமதர்ம பஜனைகளுடன் ஊரின் முக்கிய வீதிகளின் வழியாக ரயில் நிலயத்துக்கு அழைத்துவந்தார்கள். ஊர்வலத்தில் 400, 500 பேருக்கு அதிகமாககலந்து வந்தார்கள். முக்கியமாக தோழர்கள் ஆறுமுகம் (யூனியன் போர்டு மெம்பர் டி. வி. சோமசுந்திரம், ரத்தினசபாபதி, சௌந்திரராஜலு (தாலூகா போர்டு மெம்பர்) போன்றவர்கள் உள்பட சமதர்மத்துக்கும், பொதுவுடமைக்கும்"ஜே" சப்தம் போட்டுவந்தார்கள். இரவு 8-மணிக்கு தோழர் வி. சொக்கலிங்கம் கும்பகோணத்துக்கும், தோழர்கள் கே. ராமையா, கே. முருகேசம் $8\frac{1}{4}$ மணி வண்டிக்கு நாகைக்கும் சென்றுவிட்டார்கள். நீடாமங்கலத்தில் தண்டனை அடைந்த விபரம் தெரிந்து தோழர் கே. எ. எம். மாணிக்கம் கே. சபாபதி, சோமு முதலியவர்கள் வந்திருந்தார்கள்.

---

#### நாகை.

15—4—33-ல் மாலை 5-30 மணிக்கு நாகை போலீஸ் ஸ்டேஷன் மைதானத்தில் நீடாமங்கலம் போலீசார் அக்கிரமத்தை கண்டிக்கும் முகத்தான் ஓர் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு 500 பேருக்கு அதிகமாகவே விஜயம் செய்திருந்தார்கள் தோழர் ஆர். வி. கோபால் தலைமை வகித்தார். தோழர் பி. அழகாசாமி சமதர்மக்கீதம் பாடினார். நிரபராதிகளாக நடுரோட்டில் நின்ற சுயமரியாதைத் தோழர்களை அக்ரமமாக தாக்கி அபாண்டமாக பொய் கேஸ் போட்டு தண்டனை வாங்கிக்கொடுத்த நீடாமங்கலம் போலீசாரைப்பற்றி தோழர்கள் வி. சாமிநாதன், கே. முருகேசன், எம். ஆர். பதி முதலியவர்கள் பேசினார்கள்.

#### தீர்மானம்.

நீடாமங்கலத்தில் நடந்ததென்ன? என்பதைப்பற்றி தோழர் கே. ராமையாவை பேசும்படி தலைவர் கேட்டுக்கொண்டதின் பேரில் அவர் அங்கு நடந்தவைகளை விளக்கினார்.

நீடாமங்கலத்தில் தோழர்கள் சித்தக்காடு கே. ராமையா, நாகூர் வி. சொக்கலிங்கம் இருவர்களையும் மேற்படி ஊர் போலிசார் பார்ப்பனர்கள் வார்த்தையை நம்பி, அக்கிரமமாக ரோட்டில் நின்று கொண்டிருந்தவரை அடித்து துன்புறுத்தி அவமானப்படுத்தியதை இக்கூட்டம் வன்மையாய்க்கண்டிப்பதுடன் மேலதிகாரிகள் இதன் அக்கிரமத்தை விசாரித்து தக்கது செய்யவேண்டுமென இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

2. போலீசாரால் அடிபட்ட தோழர்கள் தாங்களும் பலாத்காரத்தை பிரயோகிக்காது கண்ணியமாக நடந்து கொண்டதையும் போலீசாரால் இருவர்கள் பேரில் அபாண்டமாக சுமத்தப்பட்ட கேசையும் எவ்வித மேல் நடவடிக்கை நடத்தாமலும் இருந்ததற்கு இக்கூட்டம் அன்னவர்களை பாராட்டுகிறது.

---

#### மூணுசாவடி.

18—4—33-ந்தேதி ஷை சங்கக் கூட்டம் தோழர் எஸ். ஆர். அத்தியப்பன் அவர்கள் தலைமையின் கீழ் கூடியது. அதில் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின.

#### தீர்மானம்.

1. சென்ற 10—4—33-ந்தேதி நீடாமங்கலத்தில் சுயமரியாதைத் தோழர்களான கே. ராமையா வி. சொக்கலிங்கம் ஆகியவர்களை போலீஸ் புலிகள் காரணமின்றியும், அயோக்கியத்தனத்துடனும் பொறுப்பற்றதன்மையுடனும், முட்டாள் தனத்துடனும் அடித்து துன்புறுத்திவிட்டு "இவர்கள் பார்ப்பனர் சாப்பாட்டு விடுதியைப்பார்த்தார்கள்" என்று பொய் கேஸ் ஜோடித்த நீடாமங்கலம் போலீசை இக்கூட்டம் மிகவன்மையாகக் கண்டிக்கின்றதுடன் தண்டனை அடைந்த சுயமரியாதை வீரர்களான தோழர்கள் கே. ராமையா, வி. சொக்கலிங்கம் இவர்களை இக்கூட்டம் பாராட்டுகின்றது என சங்ககாரியதரிசி எழுதுகிறார்.

---

#### குத்தம் பொருத்தானிருப்பு

17-4-33 இரவு 5-30 மணிக்கு மேற்படி சங்க கட்டிடத்தில் தலைவர் எஸ்.நமசிவாயம் அவர்களின் தலைமையில்ஒரு கூட்டம் நடை பெற்றது கூட்டத்திற்கு சங்க அங்கத்தினர்களும் பொது ஜனங்களும் ஏராளமாக கூடி இருந்தார்கள்.

தலைவர் அவர்கள் தோழர்கள் சித்தக்காடு கே. ராமையா நாகூர் வி. சொக்கலிங்கம் இருவரையும் போலீசார் அடித்து தண்டித்ததை கண்டித்துப் பேசி கீழ்கண்ட தீர்மானத்தை பிரேரேபித்தார்.

(1) நீடாமங்கலத்தில் தோழர்கள் சித்தக்காடு கே. ராமையா நாகூர் வி. சொக்கலிங்கம் ஆகிய இருவர்களையும் ஷையூர் போலீசார் பார்ப்பனர்கள் வார்த்தையைக் கேட்டுக்கொண்டு அக்கிரமமாய் ரோட்டில் நின்று கொண்டிருந்தவர்களை அடித்துத்துன்புறுதி அவமானப்படுத்தியதை இக்கூட்டம்வன்மையாய்க்கண்டிக்கிறது.

(2) சுயமரியாதைத் தோழர்களிடத்தில் போலீசார் செட்டிநாட்டிலும் நீடாமங்கலத்திலும் நடந்துகொண்ட அக்கிரமத்தை மேலதிகாரிகள் விசாரித்து தக்கது செய்யவேண்டுமென்று இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது. அடிபட்ட தோழர்கள் பலாத்காரத்தை உபயோகிக்காது கண்ணியமாயிருந்ததற்கு பாராட்டுகிறது.

ஒரு நிருபர்.

---

#### பாச்சல்

#### திராவிட சுயமரியாதைச்சங்கம் திறப்புவிழா.

25—4—33-ந்தேதி ஷை சங்கத் திறப்புவிழா தோழர் ஏ. பெரியசாமி அவர்கள் தலைமையின் கீழ் நடைபெறும். தோழர் எஸ். ஆர். அத்தியப்பன் அவர்கள் சங்கத்தைத்திறந்துவைப்பார் அதுசமயம் தோழர்கள் ஏ. செங்கோடன், எஸ். வீரமுத்து, வரதன், இராமசாமி முதலியோர்கள் சொற்பொழிவாற்றுவார்கள் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

ஏழைகளை உய்விக்க, பசிப்பிணியைத் தீர்க்கப் போவதாக பறை சாற்றுகிறார். உங்களுக்கு கோவிலும் வேண்டாம், குளமும் வேண்டாம், தெய்வமும் வேண்டாம் அவைகள் ஏழைகள் உழைப்பை தின்று கொழுத்த திமிரினால் ஏற்படுத்தப்பட்டது. உங்கள் உழைப்பின் ஊதியம் ஏராளமாக சிக்கி குமிந்து கிடக்கிறது. அதை வெளிப்படுத்துவதில் தான் உங்கள் ஏழ்மையும், பசிப்பிணியும் நீங்குமேயல்லாது கோவிலுக்குப் போவதால் மாத்திரம் அல்ல. ஆகவே மேல் சொல்லப்பட்ட அக்கிரமங்களை அடியோடு நீங்கள் ஒழித்தாலல்லாமல் உங்களுக்கு விமோசனம் என்பது இல்லை. உங்கள் உழைப்பெல்லாம் முதலாளிகளின் இரும்புப்பெட்டிகளில் அயர்ந்த நித்திரையிலிருக்கின்றன. அவைகளின் மேல்விடுதலைப் போர் தொடுப்பதுதான் மோசம் போன ஏழை உலகத்தின் கடனாகும்.

ஆகவே கொடுமைக்கு அனுகுணம் முதலாளி வர்க்கம். ஏழைகள் தீவினைக்கருவி கடவுள், டாம்பீகம், கள், காமம் களவாடல், உயர்வு தாழ்வு இவைகளைக் கற்பிப்பது வேத புராண இதிகாசம். இவைகளை அபிவிருத்தி செய்தவன் பார்ப்பான் ஏழை உழைப்பைப் பெருக்கி பணக்காரனை கொழுக்கவைப்பதும் இக்கூட்டம்தான். ஏழை உழைப்பைத் தின்று கொழுப்பதோடுமில்லை. வளர்த்த கடா மார்பில் பாய்வதுபோல் ஏழை உலகத்தை கைநீண்டி அடிப்பதும், கட்டிவைத்து அடிப்பது மான கொடுமை இன்றும் பணக்கார உலகத்தில் காணப்படுவது வருங்கால கேடுகாலத்தை நன்கு விளங்குகிறது. கந்தைதரித்து சோற்றுக்கு அலையும் ஏழை உலகில் விந்தையில்லை, நிந்தையில்லை. குடிசையில் வாழும் ஏழை உலகத்தில் குற்றமில்லை. வீண் விவகாரமில்லை. அவர்களின் அடக்கமான வாழ்வு பொங்கித்ததும்பும் வீராவேசம் அச்சுறுத்துகிறது. முடிசாய்கிறது. குடி உயருகிறது. லக்ஷாதிபதி பிக்ஷாதிபதியாகிறான். குடையின் நிழலில் குஞ்சர மூர்ந்தோர் நடைமெலிந்து ஓர் கிராமத்தை அடைகிறார்கள். குடிசைக் கூட்டம் குன்றின்மேல் விளக்காய் பிரகாசிக்கிறார்கள். ஆகவே பணம்படைத்த கூட்டத்துக்கு வரும் காலத்தில் ஏற்படப்போகும் பயங்கரமான வாழ்வை பகுத்தறிவோடு புத்திசாலியோடு, விசாலபுத்தியோடு அறிந்து நடந்து கொள்வதே சிறப்பாகும். வருங்கால உலகத்தை உணராத பச்சிளங் குழந்தைகளாக பணக்காரர்கள் ஆகவேண்டாம்!

---

(6-ம் பக்கத்தொடர்ச்சி)

மேல்நாட்டார் தொழில் செய்து இன்ப வாழ்வு நடத்துகின்றனர். கடன் வாங்கிய மனிதனைச் சூழ்ந்த உறவினரையும், மனைவி மக்களையும் அவமானப்படுத்தும் முறையில் அவர்கள் தொழில்செய்வதில்லை. எத்தனைகப்பல் மூழ்கினாலும், எவ்வித அபாயங்கள் நேர்ந்தாலும் அவர்கள் நல்வாழ்வைத் தடைப்படுத்த முடியாதபடி இம்முறை அவர்களைப் பாது காக்கிறது.

தனி மனிதற்குக் கடன் கொடுப்பதை நாம் இன்றே நிறுத்திவிட முடியாததலின் கடன் வாங்குவதனால் மேற் துன்பத்தை பரஸ்பரம் தராத திறமைசாலிகட்கு மட்டும் பரஸ்பரம் லாபம் கருதிய முறையில் கடன் கொடுப்பதை மேற்கொள்ளவேண்டும்.

தொழில்வளர்ச்சி கருதிதொழிலுக்காக கடன் வாங்குவோர் திறமைசாலியாக இருந்தால் ஓர் லிமிட்டெட் கம்பெனி கண்டு அதன் பொறுப்பில் கடன் வாங்குவதுதான் சிறப்புடையது என்பதும், தனிமனிதர் பொறுப்பில் கடன் வாங்குவது கூடாதென்பதும் இன்று தோன்றிய பொருளாதார நெருக்கடியினால் நாம் அறிந்த உண்மையன்றோ?

எந்த தொழிலை மக்கள் செய்தாலும் அளவு கட்டிய முறையில் செய்து வேலைநேரக் காலத்தையும் அளவுபடுத்தி பரஸ்பரம் கேடு செய்யாமலும் தந்நலத்தைமட்டும் நோக்காமலும் பரஸ்பர நன்மைக்கருதிச் செய்து மக்கள் இன்ப வாழ்வு நடத்தும் வழியை அனுஷ்டிக்க வேண்டுகிறோம். அளவுக்குட்படாத முறையில், லிமிடெட் கம்பெனியாக்காத லேவாதேவித் தொழில் செய்வோர் அனைவரும் தங்கள் தொழில் நிலையங்களை லிமிடெட் கம்பெனிகளாக்கி விடவேண்டும்.

கடன் அதிகமில்லாதலேவாதேவி ஆகிய தொழிலாளிகள் செய்வோர் சிலர், நமக்கு கடன் கிடையாதே இந்நிலையில் நாம் நம் தொழிலை லிமிட்டெட் கம்பெனியாக்கவேண்டிய அவஸ்யமில்லையே எனக் கருதலாம். தொழிலை அளவுக்குட்படுத்தும் லிமிட்டெட் கம்பெனி முறையினால் உள்ள நன்மையை யறியாத நிலையில் இதன் பெயரைக் கேட்ட அளவில் இதனை இழிவாகநினைக்கும் அறியாத மக்கள் பலர் உண்டு என்பதை நாம் அறிவோம். கோடீஸ்வரர்கள் கோவணாண்டியான கதைகளைச் சீர்தூக்கிப் பார்த்தால்; கடன் இன்றிஇருந்தோரின் பின்சந்ததியார்கள் ஒழுங்குத்தவறிப்பேராசைக்கொண்டு பெரும் பொருள்திரட்டக்கருதிக் காலக்கிரமத்தில்கடன்பெற்று அதனால் அக்குடும்பங்கள் சீர்குலைந்திருக்கின்றன வென்பதைக் காண்கிறோம். ஆகவே பிற்கால சந்ததியின் நன்மைக் கருதியும் ஒழுங்கு முறையே மேற்கொண்டும் தொழில்களை அளவுக்குட்பட்டு லிமிட்டெட் கம்பெனியாக்கிவிடுவது எல்லாவகையாலும் சிறப்புடையது.

முடிவு

---

# ஏழைகள் துயரம்.

(பரமக்குடி எம். பாலசாமி)

(காலக்கொடுமையால் என்ற மெட்டு)

1. நாளுக்கு நாளாக வேலையில்லாத் திண்
டாட்ட மிருந்திடலாச்சே
ஆளுக்கொருவேளை கூழுக்கில்லாமலும்
அலைந்து திரிந்திடலாச்சே

2. கஞ்சிக்கில்லை யென்று கொஞ்சமல்லமக்கள்
கஷ்டப்படுவதுமாச்சே
பஞ்சணைமீது பணக் காரர்கள் தினம்
படுத்துச் சுகித்திடலாச்சே

3. பாடுபட்டும்பல கோடிமக்களின்று
பட்டினி கிடக்கவுமாச்சே
வீடுவாசற்பெற்று கோடீஸ்வரரென்று
வீணிருக்கவு மாச்சே

4. மண்ணுவெட்டி மணய கல்லுடைத்தும்பல
மக்கள் தவித்திடலாச்சே
உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி
ஒண்டுதற் கிடமில்லாதாச்சே

5. எங்கும் வேலையில்லை எங்கும் கூலிஇல்லை
என்போரைப் பார்க்கவுமாச்சே
எங்கும் ஐயோபசி எங்கும் ஐயோபிணி
என்னும் குரல்கேட்கலாச்சே

6. ஓயாது நிலம் உழுதுபயிரிடும்
உழைப்பவ னடிமை என்றாச்சே
மாடுமேய்க்கத்தெரி யாதவனும்கூட
மந்திரியாகவு மாச்சே

7. எந்த நியாயமும் எந்த கவர்ன்மெண்டும்
இல்லாதவனுக்கில்லாமல் போச்சே
அந்த ஜனங்கட்கு யாரும் வேலைசெய்தால்
அவர்களை படைக்கவுமாச்சே

8. ஏழைபணக்காரன் என்பதொழிந்தால்
இன்பவழி காணலாச்சே
ஆளும் அரசாங்கம் அதற்கெனவேயிங்கு
அமைக்கத் திட்டம்போடலாச்சே

---

செயற்கையால் வந்து நுழைந்து தீமை பயக்கும் பணத் தொல்லையை மேற்காட்டிய வழியில் நிர்வாகித்து உலகத்தைப் பிடித்து இன்று வாட்டுகிற துன்பத்தைஒழித்துமக்கள் நல்வாழ்வுக்கு வழிகோலவேண்டுவது பொது மக்கள் கடமையாகும்.

"முன்னேற்றம்"

---

## திண்டுக்கல்

பார்ப்பனீயம் ஒழிந்த தி

10-4-33ந் தேதி திங்கட்கிழ

சீனியர் கோவாப்பரேட்டிவ் இன்

பெக்டர் எம். எஸ். நாதன் அவர்

தாயாரின் திதி நடைபெற்ற

அவ்வமயம் தோழர் யாதொருசட

மின்றி சுயமரியாதை முறை

வண்ணார், ஆதித்திராவிடர், இ

தவர் முதலியவர்கள் உள்படநாற்

பேருடன் சமபந்தி சாப்பாடு நட

னார்.

(ஒரு சிரு

---

குடி அரசு
எங்கும் துலங்குக!

முடி அரசு
எங்கும் வீழ்க!

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ற்ற சமயம் எப்பொழுது வருமென்று காத்துக்கொண்டிருந்தார்கள். இவ்வாறு பன்னிரண்டு ஆண்டுகள் சென்றன.

கொள்கை விளக்கம்.

லெனின் கட்சியாருடைய கொள்கை வருமாறு:-

எப்பொழுதும் தொழிலாளர் சமூகமே முடிவில் வெற்றி பெறும், தொழிலாளருக்கும், மத்திய வகுப்பாருக்கும் சண்டை நடந்தே தீரும். ஏனெனில் அவ்விருவகுப்பாரும் ஒற்றுமையாக வாழக்கூடிய விஷயம ஒன்றுமேயில்லை. ஒரு வகுப்பாருக்குள்ள சக்தியையும், சௌகரியத்தையும் மற்றொரு வகுப்பார் சமாதானமாகக் கேட்டு பெற முடியாது.

சட்ட பூர்வமாக இந்தச் சண்டையை அமைதியாக நடத்திவர முடியாது. அப்படி நடத்தினுலும் முதலாளிகள் தங்கள் இருப்பிடத்தை விட்டுக்கொஞ்சம்கூட அசைக்கப்படாமல் முன்னிருந்தபடியே இருப்பார்கள்.

சமாதானமாய் பெறும் உரிமைகள் போலியானவை.

சர்க்கார் பணக்காரர்கள் கையில் இருக்கும்வரை ஏழைத்தொழிலாளிகளுக்கு எத்தனை ஓட்டுகள் இருந்தும் பயனில்லை.

ஆகையால் தொழிலாளர்களுடைய வேலையென்னவென்றால், பணக்காரர்களிடத்திலிருந்து விலகிக்கொண்டு, அவர்களை எதிர்த்துப்போராடுவதுதான். அப்படிச் செய்வதால் அவர்கள் வலிமையடைகிறார்கள். முதலாளிகளுடைய அரசாங்கம் வீழ்ந்து மடிகிறது.

போல்ஷ்விஸம் கிலரைக்கண்டகண்ட விடங்களில் கொன்றுதள்ளவேண்டுமென்ற பயங்கர இயக்கமன்று. போல்ஷ்விக்கர் திர ஆராய்ச்சி செய்து வெகு நாள் பயிற்சி பெற்று, தக்க சந்தர்ப்பம் வந்தவுடன் புரட்சி செய்பவர்கள். மார்க்ஸ் புரட்சிக் கலகம் என்பது ஒரு சாஸ்திரம் என்று சொன்னார். லெனின் அதற்கு ஐந்து தத்துவங்கள் அவசியமென்று விளக்கினார்.

1. கலகம் விளையாட்டாகக் கருதப்படக்கூடாது. ஆரம்பித்துவிட்டால் முடிவுவரைப்போராடியேதீரவேண்டும்.

2. தக்க காலத்தைக் குறிப்பிட்ட பின்பு எதிரிகளைக்காட்டிலும் அதிக சாமர்த்தியம் உடைய புரட்சிக்காரர்களைத் தங்களிடத்தில் தயாராய் வைத்திருக்கவேண்டும் இல்லாவிடில் எதிரிகள் புரட்சி விடுவார்கள்.

3. புரட்சியின் ஆரம்பத்தில் புரட்சிக்காரர்களே எதிரிகளைத் தாக்கவேண்டும். இடங்கொடுத்தால் புரட்சி தோல்வியடையும்.

4. முன்பின் எதிர் பாராத நிலைமையில் புரட்சித்திடீரெனத் தோன்றவேண்டும்.

5. புரட்சி வைசனியம் மனந்தளராது உற்சாகத்துடனிருக்க வேண்டும். இதற்காக ஒவ்வொருமணி நேரத்திலும் புரட்சிக்கு ஏற்பட்ட வெற்றிகளைப்பற்றி அவர்களுக்குத் தகவல் கொடுத்துக்கொண்டேயிருக்கவேண்டும். எதிரிகளுக்கும் இந்தவெற்றிகளைத்தெரிவித்தால் அவர்களும்மனம் வருந்திச் சோர்வு அடைவார்கள்.

இவையெல்லாவற்றிற்கும் அடிப்படையாக ஆவேசமும், உடும்புபிடிபோன்ற தீவிர போராட்டமும் வேண்டும். எனவே பொதுவுடமைப் புரட்சி மூன்று அஸ்திவாரத்தின்மேல் கட்டப்படுவதாய்ச்சொல்லலாம்.

முதலாவது அது சிலருடைய சதியாலோசனையாக இருக்கக்கூடாது. ஆனால் அது தொழிலாளர் சமூகத்தினர் அனைவருடைய போராட்டமாய் இருக்கவேண்டும்.

இரண்டாவதாக அது பொது ஜனங்களுடைய ஆதரவு பெற்றதாய் இருக்கவேண்டும். அந்த ஆதரவைப்பெறுவதற்கு வழி அவர்களுக்கு அத்தியாவசியமாய்த்தேவையுள்ள விஷயங்களை எடுத்துரைப்பதாகும்.

மூன்றாவதாக எதிரி என்ன செய்வதென்று ஒரு முடிவிற்கும் வாராமல் திண்டாடிக்கொண்டிருக்கும்பொழுது புரட்சி ஆரம்பிக்க வேண்டும். அத்துடன் பெரும் மாறுதலை விரும்பும் நண்பர்கள் தீவிரமாய் வேலை செய்துகொண்டிருக்கும் பொழுது புரட்சி திடீரெனத்தோன்றல்வேண்டும். இவ்வாறுகத் தொழிலாளர் சமூகம் வல்லமைபெற்றுத் தலைமைவகிக்க முடியும். இந்த வல்லமை நிலைத்திருக்கவேண்டுமானால் அதற்கு சர்வாதிகாரியாய் ஒருவர் இருந்தே தீரவேண்டும். சர்வாதிகாரத்தினாலேயே பாக்கியுள்ள எதிர்ப்பை நசுக்கி மிஞ்சி நிற்கும் பழைய ஸ்தாபனங்களைத்தவிடு பொடியாய் உடைத்துத்தள்ள முடியும். ஜெயம் கிடைத்துவிட்டது என்று சிறிதுகூட அயர்ந்து இருக்கமுடியாது. புரட்சியின் ஒரு யுத்தம் இதிலும் எதிரி பின்னும் எதிர்க்க வலிமையற்று முற்றிலும் அடங்கும்வரை போராடித்தீரவேண்டும். தாமதம் வலிமைக்குறைவு நயவு, இரக்கம், போலிச்சுதந்திர உணர்ச்சி ஆகிய இவைகளுக்கு இடம்கொடுக்கக்கூடாது. இவைகள் தொழிலாளர் புரட்சிக்கு எதிர்ப்புரட்சியைக் கிளப்பிவிட்டு ஏழைகளது அரசாங்கத்தை ஸ்தாபிக்க முடியாதபடி செய்துவிடும்.

எல்லோருக்கும் சரிசமமான சுதந்திரத்தை விரும்பும் போல்ஷ்விக்கர்கள் தாங்களே அளவுகடந்த சர்வாதிகாரத்தை வைத்துக் கொள்ளலாமென்று சொல்லுவது தகுதியா?

போல்ஷ்விக்கர்கள் இதற்கு இரண்டு சமாதானம் சொல்லுகிறார்கள்.

ஒன்று நாங்கள் பல நாட்களாகத் தொழிலாளர்களுக்குத் தொண்டு செய்து சகிக்கமுடியாத துன்பங்களையெல்லாம் சகித்து கடுகளவு சுயநலமும் இல்லாமல் உயிரையும் பொருள் படுத்தாது புரட்சி யுத்தத்திலும் போராடினேம். நாங்கள் பூரணமாய்ச் சோதிக்கப்பட்டு அதில் தேறிவிட்டபின் எங்களைச் சந்தேகிக்க வேண்டிய அவசியம் என்ன? எங்களை நம்பலாம்

2. நாங்கள் எங்களுடைய சொந்தக்காரியங்களுக்காக ஆட்சி செய்யவில்லை. தொழிலாளர்களுடைய கருத்து எதுவோ அதை நிறைவேற்றுவதே எங்களுடைய கடமை. இதுவரை அந்தக்கருத்து வெளிப்படாமல் முதலாளிகளால் நசுக்கப்பட்டிருந்தது. ஆகவே இந்த சர்வாதிகாரம் ஏழைகளுடைய பாமர ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்காக எங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அடைக்கலப்பொருள் ஆகும்.

புரட்சிக்கு வெற்றி கொடுப்பது பலாத்காரம் அந்த வெற்றியை நிலைநிறுத்துவது சர்வாதிகாரம். இவை இரண்டோடு போல்ஷ்விக் கொள்கை முற்றுப்பெறவில்லை இவற்றிற்குப்பின்தான் முக்கியமானவேலை நடக்க வேண்டியதிருக்கிறது. பெருஞ்செல்வர்களிடமிருந்து செல்வங்களைப்பிரித்து எல்லோருக்கும் பாகம் வைத்துக் கொடுத்து சமசுதந்திரத்தை ஸ்தாபிப்பது அவசியம்.

இது எப்படிச் செய்யப்படுகிறதென்றால் தேசத்திலுடைய நிலங்கள், தொழிற்சாலைகள், ரயில்வேக்கள், கப்பல் தொழிற்சாலைகள் முதலிய எல்லாம் தனிப்பட்ட எந்த நபருக்கும் சொந்தமில்லையென்று சட்டம் செய்யப்பட்டுச் சர்க்காரின் சொத்தாக அதாவது பொது ஜனங்களின் சொத்தாகப் பாவிக்கப்படுகின்றன.

உழுது பயிரிடுகிறவர்களுக்கு நிலங்கள் கொடுக்கப்படுகின்றன.

தொழிற்சாலைகளை எல்லாம் சர்க்காரே நடத்துவது. இதனால் அவற்றில் கிடைக்கும் லக்ஷக்கணக்கான லாபத்தை முதலாளிகள் எடுத்துக்கொண்டு விடாமல் ஏழைகளுக்கும் சமமான ஊதியம் கிடைக்கிறது.

தேசத்திலுள்ள அச்சுக்கூடங்கள், பத்திரிகைகள், கலாசாலைகள் எல்லாம் தொழிலாளர்களுடைய நன்மைக்காகவே நடத்தப்பட்டு, அவர்களுடைய ஆட்சியை நிலை நிறுத்தும்படி அமைக்கப்படுகின்றன.

சிறிய தொழில்கள் பறிக்கப்படாமல் அவரவர் கையிலேயே விடப்படுகின்றன. ஏனெனில் பொதுவுடமையை ஒரேயடியாக அமைத்துவிட முடியாது. தொழில்களை வளர்ப்பதற்கு அறிவு மிகுந்த சிலருக்கு பொது ஜனங்களுடைய மனம் இந்தப்புதுக்கொள்கைகளைப்பற்றிக்கொள்ளும் வரை மேலிருந்து கொஞ்சம் பலவந்தமாகக் கட்டாயப்படுத்தத்தான் வேண்டியதிருக்கிறது. ஆனால் புதிய அரசாங்கம் ஏற்பட்டு நாள் செல்லச்செல்ல ஜனங்கள் மனம் திரும்பிப் புதிய சட்ட திட்டங்களை ஏற்றுக்கொண்டு விடுவார்கள் என்று நம்பப்படுகின்றது. அத்தகைய காலம் வந்தவுடன் அரசாங்கத்தின் சர்வாதிகாரக் காலம் மறைந்து சாதாரணப் பொதுஜன அரசாங்கமாக மாறி விடுகிறது.

பொது உடமை ஜனங்களிடம் மிகுதியாயுள்ள சக்திகளை எடுத்துக்கொண்டு அவர்களுக்குத்தேவையுள்ள சக்திகளைக் கொடுக்கிறது என்று சொல்லலாம். அது ஜனங்களை அடக்கியாள்வதைப்பார்க்கிலும், சில பொருள்களையே அடக்கியாள்கிறதென்று சொல்லலாம். இத்தகைய புரட்சி ருஷ்யாவில் மட்டும் நடந்தால் போதாது. அது எல்லா நாடுகளிலும் நடந்தால்தான் தங்கள் ஆட்சி நிலைக்குமென்று போல்ஷ்விக்கர்கள் நம்புகின்றார்கள். இதையே "காரல் மார்க்ஸு"ம் வற்புறுத்தியிருக்கிறார். பெரிய உலகப் புரட்சி ஏற்படவேண்டுமானால், சர்வதேசங்களிலும் இடைவிடாத, பொதுவுடமைப் பிரசாரம் செய்யவேண்டியது அவசியம். காரல் மார்க்ஸ் தமது வாழ்நாளிலேயே, சர்வதேசப் பொதுவுடமைச் சங்கத்தை அமைத்து கூட்டிவைத்ததின் பொருள் இதுவேயாகும். உலகப் புரட்சிக்குத் தேசிய சமூகப் பொருளாதார அதிருப்திகள் எங்கெங்கே ஏற்படுகின்றனவோ, அவ

ற்றை உடனுக்குடன் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

சாதாரண தொழிலாளர் சங்கங்களோடு, பொதுவுடமைக்கட்சியாரும் சேர்ந்து உழைக்கவேண்டியதுதான். ஆனால் முடிவில் அவர்களைக் கத்தரித்து விட்டுவிட்டு, பொதுவுடமையாளர் முடிவில் புரட்சியை ஆரம்பித்துவிடவேண்டும்.

பொதுவுடமையாளர் மதத்தை எந்த ரூபத்தில் கண்டாலும் அதைத் தங்கள் சத்துருவென்றும், பழைய முதலாளிகளுடைய கொடிய ஆயுதம் என்றும் கருதுகிறார்கள் என்று குறிப்பிடவேண்டியது அவசியம்.

ருஷ்யாவில் நடக்கும் இந்தப் பெரிய பரீக்ஷை, வெற்றியா, தோல்வியா? என்று முடிவு கூற இது சமயமன்று. நாமும் அதற்கு அருகர் அல்லர், சரித்திரமே இதைப்பற்றித் தீர்மானிக்க வல்லதாகும். மார்க்ஸினுடைய தத்துவங்களை அப்படியே ஒப்புக்கொண்டு அவற்றை நிறைவேற்ற ருஷ்யா சொந்தமாகச் சில பாதைகளை யமைத்துக்கொண்டது. லெனின் போட்ட திட்டம் எல்லா தேசங்களுக்கும் பொருந்துமென்பதில்லை. ஆங்காங்குள்ள நிலைமைக்குத் தக்கவாறு, புதிய வழிகளைக் கண்டு பிடித்துக்கொள்ளவேண்டுமென்பதைப் போல்ஷிவிக்கர்களே ஆட்சேபிக்கமாட்டார்கள். பலாத்காரம் நல்ல காரியங்களுக்கு உபயோகப்படுத்தப்பட்டால் அது புனிதமாகுமென்று அவர்கள் கருதுகிறார்கள். தங்களுடைய காரியம் முற்றும் நியாயமானதென்றும் அவர்கள் கருதுகிறார்கள். அவர்கள் எவ்வளவு பெரும் தியாகத்தைச் செய்திருக்கிறார்கள்! மனித சமூகத்தின் சம உரிமையே அவர்களுடைய மூலதத்துவம். இந்த உரிமை உணர்ச்சியின் காரணமாகவே, கலகம் விளைவிக்கிறார்கள். கலகத்தின் காரணமாக முடிவில் சகோதரத்துவம் பெருகுமென்று நம்புகிறார்கள். ஒரு சிலர் கூடிக்கொண்டு ஏழைகளுடைய துன்பத்தினால், பெரும்பொருள்களைத் திரட்டி வைத்துக்கொண்டு போக வாழ்வு வாழும் காலம் மலையேறி விட்டதென்றும், தொழிலாளர்களுக்குப் புதிய யுகம் பிறந்துவிட்டதென்றும், அவர்கள் தீர்மானிக்கிறார்கள்.

---

## நிலக்கோட்டையில் அனுதாபக்கூட்டம்.

இன்று மாலை 6-30 மணிக்கு சுயமரியாதை வாலிபர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேறப் பெற்றது.

மதுரை சுயமரியாதை வாலிபர் சங்கக் காரியதரிசியும் நிலக்கோட்டை சுயமரியாதை தொண்டருமான தோழர் பி. முத்திருநாண்டி அவர்களின் தாத்தா எம். வீரபத்திரன் (15-4-33) காலமானது பற்றி வருந்துகிறது. (ஒரு நிருபர்.)

---

## கொழும்புக்கு ஏஜண்டு தேவை.

நமது பத்திரிகை விற்பதற்கு செல்வாக்குள்ள ஏஜண்டு தேவை. விபரத்திற்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர், "குடி அரசு" ஈரோடு.

---

## மதமும் லெனினும்.

100 பக்கம் விலை அணா 0—4—0. 100 புத்தகம் 12-8-0 தபால் செலவு வேறு.

## ஜார்ஜ் பெர்னாட்ஷாவின்,

### அமெரிக்க சொற்பொழிவும், பத்திரிகை பிரதிநிதிகளுக்கு அளித்த சேதிகளும்.

விலை அணா 0—1—0. 100 புத்தகம் 5—0—0. தபால் செலவு வேறு.

இவைகளில் 100 புஸ்தகங்கட்குக் குறைந்த ஆர்டர் செய்பவர்கட்கு மேற்கண்ட குறைந்த விலைக்குக் கொடுக்கப்படமாட்டாது. இதற்குக்கமிஷன் இல்லை.

விலாசம்:-- மானேஜர்

'குடி அரசு" ஈரோடு.

---

## சுயமரியாதை தத்துவ கீதங்கள்.

கடம்பன்குளம் தோழர் நாராயணன் பாடியது. நல்ல கௌரவமான பாட்டுகள், பாரதியார் மெட்டுகள். தோழர் ஈ. வெ. ராமசாமி படத்துடன் கூடியது. நல்ல காகிதம், நல்ல அச்சு, எளிய நடை விலை அணா, 0—4—0.

விலாசம்:—

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

---

# சோவியத் ருஷியா.

பண்டித ஜவஹர்லால் நேரு எழுதிய ஆங்கில நூலின் நேரான தமிழ் மொழிபெயர்ப்பு.

ஏழை, பணக்காரன், அடிமை ஆண்டான் என்ற உயர்வு, தாழ்வு, கற்பிக்காத—ஆண், பெண் சரிசிகர் சமானமாக வாழும் சோவியத் ருஷியாவுக்குச் சென்ற பண்டித நேரு, அங்கு பிரத்தியக்ஷமாகக் கண்டதையும், அறிந்ததையும், ஆராய்ந்ததையும் ஐயந்திரிபற இந்நூலில் தந்துள்ளார்.

இதில் சோவியத் ருஷியாவின் ஆட்சி முறையும், கல்விச் சீர்திருத்தமும், வியாபார—விவசாயப்பெருமிதமும், மக்கள் வாழ்க்கையும், அவசியமான விஷயங்களும் பல சித்திரப்படங்களுடன் விளக்கப்பட்டிருக்கிறது.

மேலும் ருஷியாவின் சரித்திரத்தைச் சுருக்கமாகவும் அதன் ஒப்பற்ற தலைவர்களான மஹாத்மா லெனின், அவர் மனைவியார் குரூப்ஸ்கி அம்மையார், சர்வாதிகாரி ஸ்டாலின் முதலியோரின் படங்களும் சேர்க்கப்பெற்றிருக்கின்றன.

சோவியத ருஷியாவை சாங்கோபாங்கமாக அறிய விரும்பும் தமிழ் சோதரர்களுக்கு இதுவே முதல் நூலும் முதற் சந்தர்ப்பமுமாகும்.

"தமிழ் நாடு" ஆசிரியர்,

டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்களின்

முகவுரையோடு கூடியது.

21 ஆப்டோன் படங்களுடன் கூடிய கிளேஸ் பதிப்பு.

விலை ரூ. 1—4—0 தபால் செலவு வேறு. வெளிநாட்டினர் தபாற் செலவுக்கும் சேர்த்து ரூ. 1—10—0 அல்லது 3 ஷிலிங் அனுப்புதல்வேண்டும்.

---

# ராட்டூர் வீரன் துர்க்கா தாஸ்

சரித்திர சம்பந்தமான ஓர் தேசீய நாடகம்.

வங்காள மஹாகவி பாபு துவிஜேந்திரலால் ராய் எழுதியது.

அவரது நாடகங்களனைத்திலும் இதுவே ஒப்பற்றதாகும்.

எல்லா ரசங்களும் பொருந்தியது! அனைவர் மதிப்புக்கும் ஏற்றது!! சுதேச பக்தியும், க்ஷத்திரிய வீரமும் ஒளிர்வது! அற்புத—ஆச்சரிய—ஆனந்த சம்பவங்கள் நிறைந்தது! தமிழ் நாடக மேடை உயர்வுக்கு இஃதோர் உபகரணமாகும். சிறப்பாக தமிழ் நாடக நடிகர்களும்—நடிகைகளும் பொதுவாக நடிகப் பிரியர்களுமேயன்றி யாவரும் இந்நூலை வாசிக்கவேண்டியதவசியம்.

இதன் விலை ரூ. 1—4—0. தபாற் செலவு வேறு.

வெளிநாட்டினர் தபாற் செலவுக்கும் சேர்த்து ரூ 1—10—0 அல்லது 3 ஷிலிங் அனுப்புதல் வேண்டும்.

---

தூங்கிக்கிடந்த தமிழ்நாட்டைக் கணப்பொழுதிலே கண்விழிக்கச் செய்த

கவிக் கனல்! சக்திமலை!! வீர விளக்கு!!!

# சுப்ரமண்ய பாரதியார்

அல்லது

## தமிழ் நாட்டின் தேசீய கவி.

(ஓர் விரிவான ஆராய்ச்சி நூல்)

இந்நூலின் கவியரசு பாரதியாரின் வாழ்க்கை வரலாறு கவிதா விலாசம், தேசவெறி, மதப்பற்று, காதற்போக்கு, கருணை விளக்கம், ஆத்ம சிந்தனை, இன்பரசனை முதலியவைகளோடு பாரதியாரைப்பற்றி இதுபரியந்தம், அச்சேறாத சில புதிய விஷயங்களும், கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், குயிற்காதல் இவைகளும் சேர்க்கப்பெற்று தற்கால முற்கால பல தேசப் பெரியார்கள்-கவியரசர்கள் இவர்களின் உயர்ந்த மேற்கோள்களோடு ஆராய்ச்சி செய்யப்பெற்றிருக்கிறது.

புத்தகம் 1-க்கு விலை ரூ. 1—0—0. தபாற் செலவு வேறு.

வெளிநாட்டினர் தபாற் செலவுக்கும் சேர்த்து ரூ. 1—6—0 அல்லது 2½ ஷிலிங் அனுப்புதல் வேண்டும்.

## பாரதி புத்தகாலயம்,

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | சிதம்பர ரகசியம் ... | 0—8—0 |
| 2. | சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை | 0—4—0 |
| 3. | மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை | 0—8—0 |
| 4. | ஆராய்ச்சி அணிகலம் ... | 0—12—0 |
| 5. | விசாலாட்சி அல்லது கட்டறுத்த காரிகை ... | 0—4—0 |
| 6. | பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மாஇல்லை | 0—6—0 |
| 7. | மோட்டாக்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... | 2—0—0 |
| 8. | ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் விலை ... ... | 0—6—0 |
| | சுயராஜ்யம் யாருக்கு ... | 0—1—0 |
| | சாமிகளின் அடிமைகள் ... | 0—12—0 |
| | சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... | 2—0—0 |

The crux of the Indian Problem
By Dr. PARANJPYE (in English.)

விலை ரூ. 1—0—0

"குடி அரசு" சந்தாதாரர்களுக்கு ரூ. 0—8—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| ஒவ்வொரு வருஷமாலை கிரயம் | ரூ. 4—0—0 |
| ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் | ரூ. 4—0—0 |

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.



## சாலாமிசிரி லேகியம்

(ரிஜிஸ்டர்டு)

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

மிகுந்த பலத்தையும், வீரிய விருத்தியையும் உண்டாக்கும்.
இந்த லேகியத்தால் குணமாகும் நோய்கள்.

கை கால் அசதி
இடுப்புவலி
பலக்குறைவு
ஆயாசம்
நரம்புத்தளர்ச்சி
சொர்ப்பனஸ்கலிதம்

சம்போக காலத்திலேற்படும் துரிதஸ்கலிதம் முதலியவைகளை நீக்கும்.

ஆண் தன்மையை அதிகரிக்கச் செய்யும். தளர்ந்த நரம்பைக்கெட்டிப்படுத்தும். வீரியத்தை விருத்தி செய்யும்

திடசரீரத்தைஉண்டாக்கும். மனதிற்கு உற்சாகத்தைக் கொடுக்கும். எவ்வளவுகடின வேலை செய்தாலும் யாதொருகளைப்பும் உண்டாகாது. சுக்கிலத்தை ஸ்தம்பனம் செய்யும். சம்போக இன்பத்தை முற்றிலும் அனுபவிக்கச்செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஆண், பெண், சிறுவர், வயோதிகர் யாவரும் சாப்பிடலாம். பத்தியமில்லை,

1-சேர் டப்பி ரூ. 2-8-0

பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும். விலாசம் தெரிவித்தால் சேட்லாக் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை

டி. சி. சிங்காரம் அண் கோ.,
சித்த-ஆயுர்வேத வைத்தியசாலை,
தேப்பக்குளம் போஸ்ட், திருச்சி.



## ஈ. வெ. ராமசாமியின் இலங்கை சொற்பொழிவு.

24. பக்கம் கொண்டது. விலை பை-0-0-6 100-புத்தகம் ரூ1-8-0 தபால் சார்ஜ் வேறு. 2ரூ-அனுப்பினால் 100-புத்தகம் தபால் செலவில்லாமல் அனுப்பப்படும்.



## இந்தியாவின் குறைபாடு.

100 பக்கம் 0—8—0. 100 புத்தகம் 25—0—0. தபால் செலவு வேறு.

முன் பணம் வராத ஆர்டர்களை கவனிக்கப்படமாட்டாது. தபால் செலவு சேர்த்தனுப்பாத ஆர்டர்களுக்கு தபால் செலவுக்காக வி. பி. எடுத்துக் கொள்ளப்படும்.

விலாசம்:- "குடி அரசு" ஈரோடு.



## பண்டிட் ஆனந்தரின், அற்புத இயற்கை வைத்தியம்.

அநேக நோயாளர் அநேக மருந்துகளை பல நாள் அருந்தியும், நோய் நீங்காமல் துன்பமடைந்துக்கொண்டிருந்தவர்கள் கடைசியாக பண்டிட் ஆனந்தரின் அற்புத இயற்கை வைத்திய முறைகளால் நோய் நீங்கி நலமடைந்து வருகின்றார்கள்.

அநேக நோய்கள் அநேக டாக்டர்களால் ஆபரேஷன் செய்யவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்ட பின்னர் பண்டிட் ஆனந்தம் அவர்கள் ஆபரேஷன் இல்லாமல் இயற்கை வைத்தியத்தாலும், உள்ளுக்கு மருந்து கொடுப்பதாலும், நோய் நீங்கி சுகமடைந்து வருகிறார்கள்.

மேக நோய், குஷ்டநோய், மதுமேக நோய், க்ஷயநோய் முதலிய கொடிய வியாதிகளுக்கு இயற்கை வைத்தியத்தோடு, செயற்கை வைத்தியமாகிய நவதாம்பிரம், தங்கம், முத்து, சுவர்ண அப்பிரேகம் முதலிய உயர்ந்த பஸ்ப சிந்தூரங்களாலும் நோய் நீக்கப்படுகிறது. நோயாளர் நேரில் வந்தேனும், தபால் மூலமாகவேனும் பண்டிட் ஆனந்தரின் ஆலோசனையின்படி நடந்து சுகமடையலாம்.

மானேஜர், பண்டிட் ஆனந்தரின் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி, சென்னை.



## சுயமரியாதை இயக்கத் தோழர்கள்.

தோழர்கள் ஈ. வெ. ராமசாமி, முதலிய எல்லா தலைவர்களது படமும் 6½ x 4¾ சைஸ் படம் 1-க்கு 0—8—0. ஈ. வெ. ரா. 8½ x 6½ 1-க்கு 0—12—0. மொத்தமாய் வாங்குகிறவர்களுக்கு 100-க்கு 12—8—0 வீதம் கமிஷன் கழித்துக் கொடுக்கப்படும்.

தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேல்நாட்டு சுற்றுப்பிரயாணத்தின்போது எடுத்தபடம் 8½ x 6½ சைஸில் உள்ள படம் ரூ 0—12—0.

தனிகாப்பி வேண்டியவர்கள் விலைக்குமேல் 4 அணா ஸ்டாம்ப் அனுப்பவேண்டும். முன்பணமில்லாத ஆர்டரை கவனிக்கப்படமாட்டாது.

விலாசம்:—

பாலு & Co.,
No 8 தெப்பனைக்காரத்தெரு, ஈரோடு

# குடி அரசுப் பதிப்பக புஸ்தகங்கள்.

**மதமும், லெனினும்.**
விலை அணு 0—4—0

**கைவல்யம் அல்லது கலைக்கியானம்.**
இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப் பட்டது. இதன் விலை அணு. 0—8—0.

**இராமாயண ஆராய்ச்சி.**
முதற்பாகம் பாலகாண்டம் அணு. 0—4—0
இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணு. 0—8—0

**ஞானசூரியன்.**
இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக் காணலாம்.
பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணு. 0—4—0

**ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.**
இதன் விலை அணு. 0—2—0,

**தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.**
இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம்.
இதன் விலை அணு 0—3—0

**பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.**
இதன் விலை அணு 0—4—0

**மேயோகூற்று மெய்யா? பொய்யா?**
இதன் விலை அணு 0—3—0

**அகத்தியர் ஆராய்ச்சி.**
இதன் விலை அணு 0—2—0

**ரஷ்யாவைப் பற்றி பெர்னாட்ஷா.**
விலை அணு 0—1—0.

**கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்**
இதன் விலை அணு 0 2—0

**கடவுளும், பிரபஞ்சமும்.**
இதன் விலை அணு 0—4—0.

**சத்தியாக்கிரகமா சண்டித்தனமா?**
விலை பை. 0—0—3

**இராமசாமியின் இலங்கை உபன்யாசம்**
விலை பை. 0—0—6

**இந்தியாவின் குறைபாடுகள்.**
டாக்டர் பராஞ்சிபை எழுதியது விலை அணு. 0 8—
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணு. 0—6—
Crux of the Indian Problem இங்கிலீஷ் விலை ரூ. 1—0—
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணு. 0—8—

**இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு**
விலை அணு. 0—2—0

**சுயமரியாதைப்பாடல்.**
விலை அணு 0—2—0.

**கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)**
விலை அணு 0—2—0

**மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.**

---


**ஈ. வெ. இராமசாமி.**

தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்கள் மேல்நாட்டு, அதாவது ருஷியா, பிரான்ஸ், ஜெர்மனி, டர்க்கி, கிரீஸ் கொழும்பு முதலிய இடங்களில் நமது இயக்க சம்பந்தமான தலைவர்களுடன் உட்கார்ந்து எடுத்த போட்டோக்கள் கீழ்க்கண்ட சைஸ் பிரகாரம் விலைக்கு விற்கப்படும்.

6½ x 4¼ தோழர்கள் ஈ. வெ. நாகம்மையாரும், ஈ. வெ. ராமசாமி அவர்களும் சேர்ந்திருக்கக்கூடிய தனிக்காப்பி 1க்கு 0-8-0
ஷெ 8½ x ½ சயிஸ் 1க்கு 0-12-0
ஐரோப்பாவில் எடுத்த 6½ x 4¾ சயிஸ் தனிப் போட்டோ burst 1க்கு 0-8-0
15 x 12 என்லார்ஜ்மெண்டு ஷெ காப்பி 1க்கு 10-0-0
23 x 17 ,, ,, 17-0-0

தனிக்காப்பி வேண்டுபவர்கள் விலைக்கு மேல் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். மொத்தமாய் வாங்குகிறவர்களுக்கு 100-க்கு 6-4-0 ரு வீதம் கமிஷன் கழித்துக்கொடுக்கப்படும்.

விலாசம்:—
நியூஸ்டார் போட்டோஸ் ஸ்டுடியோ,
ஸ்டேன்ஸ் ரோட்,
கோயமுத்தூர்.

---

**குஷ்டம்**

வெண்குஷ்டம் · பத்து.

சமீபத்தில் எற்பட்டதாயிருந்தாலும்சரி, பரம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 4- வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில் எழுதவும்.

Post Box No- 11413
Calcutta- (k

---

**"தமிழன்"**

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தளராதுழைப்பவன் தமிழன். வெட்டொன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள்நாடு ரூ. 3—0—0.
வெளிநாடு ரூ. 5—0—0.

விலாசம்—
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்.

---

**அகில இந்தியா டிரேட் மார்க் ரிஜிஸ்ட்ரேஷன் ஏஜென்ஸி.**
(Govt Rgd)

உங்களுடைய டிரேட் மார்க்குகள், பெயர்கள், காப்பிரைட் முதலியவைகளை பிறர் உபயோகித்து உங்களுடைய நற்பெயரின் பயன்களையும் லாபங்களையும் அன்னியர் அடையாமல் இருக்கும் பொருட்டு 1908ம் வருஷத்திய XV நெம்பர் ஆக்டுப்படி இந்தியா கவர்ன்மெண்டில் ரிஜிஸ்டர் செய்து கொள்ளுங்கள். முழு விபரங்களுக்கு எழுதவும்.

ஏஜெண்டுகள்:—
கே. எல். ஜி. குப்தா அண் கோ
கடைவீதி, ஈரோடு.


**கடவுள் உணர்ச்சியை ஒழிப்பது பணக்காரத்தன்மையை ஒழிப்பதாகும்**

---

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு தோழர் நாகம்மாள் அவர்களால் வெளியிடப் பட்டது.